ஜோதிடம் ஜாதகம்
உண்மையா பொய்யா

https://telegram.me/aedahamlibrary

தமிழ்த்தேனீ

தமிழ்க் கமலம் பதிப்பகம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முன்னுரை : ஜாதகம் என்பதை சாதகம் என்று சொல்வார்கள், சாதகம் என்றால் நமக்கு நன்மையான நம்மை ஆதரிக்கிற, நமக்கு நன்மை செய்யக் கூடிய செய்திகளை விஷயங்களை கருவிகளை உதவிக் கரத்தை வைத்திருக்கும் அமைப்பு என்று பொருள்

ஜாதகம் ,ஜோதிடம் போன்ற எதுவானாலும் நாம் எல்லோருமே அவரவர் வாழ்க்கையின் அனுபவத்தை வைத்தே ஜாதகம் ஜோதிடம் போன்றவற்றின் நிலையைக் கணிக்கிறோம் அதனால் உண்மையாகவே அவற்றின் உண்மையான தன்மைகளும் உண்மையான ரகசியங்களும் நம் சிற்றறிவுக்கு எட்டாமலே போய்விடுகின்றன. நம்மால் முடிந்த நம் சிற்றறிவுக்கு எட்டக் கூடிய அளவிலே யோசித்து இவைகளைப் பற்றி ஆராய்வோம். ஆகவே ஜாதகம் உண்மையா ஜோதிடம் உண்மையா என்றெல்லாம் ஆராய்ந்து தெள்ளத் தெளிவான முடிவுக்கு நம்மால் வர இயலாவிட்டாலும் ஓரளவுக்கேனும் அவைகளைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம் என்னும் எண்ணத்தால் என் சிற்றறிவுக்கேற்ப என் மூளைக்கு எட்டியதை இங்கே எழுதுகிறேன்.

ஆகவே நண்பர்களே நான் கூறுவதுதான் முடிவு என்று நான் வாதிடுவதாக நினைக்க வேண்டாம். நாம் கலந்து விவாதம் செய்யலாம். அப்படிக் கல்ந்துகொண்டு நாம் செய்யும் ஆரோக்கியமான வாத ப்ரதிவாத விவாதங்களால் நமக்கு ஏதும் நன்மை கிடைத்தால் மகிழலாம் அவ்வளவே. இப்போது நாம் இவைகளைப் பற்றி ஆராயலாமா?

இந்த “ ஜாதகம் உண்மையா என்னும் ஆராய்ச்சியை படிக்கும் நண்பர்கள் அறிஞர்கள் அவர்களது கருத்தையும் பகிர்ந்துகொண்டால் நலமே. அவர்களின் கருத்தையும் அவ்வப்போது கூறினால் நாம் அனைவருமே ஆரோக்கியமான சரியான முறையிலே இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறோம் , சரியான விவாதக் களத்திலே இருக்கிறோம் என்னும் பெருமை அடைவோம் .

நம் இதிஹாச புராணங்களில் ஜோதிடத்தை முழுமையாக ஏற்படுத்தியவர் பஞ்ச பாண்டவர்களிலே சஹாதேவன் என்று கூறுகிறார்கள். அப்படியானால் அதற்கு முன் ஜோதிடக் கலை இருந்ததா இல்லையா என்று ஆராய வேண்டியுள்ளது .,

சஹாதேவன்தான் ஜோதிடக் கலையை முழுமையாக கற்றவன் என்று கூறுகிறார்கள் , இந்தக் கூற்றை நாம் ஒப்புக்கொண்டு நாம் கிருஷ்ண

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பரமாத்மாவையே தன் பக்திக் கட்டினால் கட்டிப்போட்ட பெரும் ஞானியான சஹாதேவனை ஜோதிடக் கலையின் முன்னோடியாக வைத்துக் கொண்டு மேலும் வராகமிகிரர் பராசரரிஷி ஆகிய தவஸ்ரேஷ்டர்களை குருவாக நினைத்து வேண்டிக் கொண்டு தொடங்குவோம்

ஜாதகம் ஜோதிடம் உண்மையா பாகம் 1

ஜோதிடம் ஜாதகம் ஆரூடம் கைரேகை பார்த்தல் நாடி ஜோதிடம் குடுகுடுப்பைக்காரர் வாக்கு பெரியோர் ஆசிகள் இறை வழிபாடு போன்றவைகளை ஆராயந்தால் எல்லாவற்றுக்குமே அடிப்படைக் காரணம் நம்பிக்கை என்று தோன்றுகிறது.

ஆகவே நாம் ஒவ்வொருவருமே நம் வாழ்க்கையில் நடந்த அல்லது நடந்துகொண்டிருக்கும் அல்லது நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே நம் நம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறோம்.

அப்படிப் பார்க்கும் போது அடுத்தவர் சொல்வது நமக்கு நம்பிகையை ஏற்படுத்துமா என்று ஆராயந்தால் ஏற்படுத்தவும் ஏற்படுத்தலாம் ஏற்படுத்தத் தவறினாலும் தவறலாம் என்றே தோன்றுகிறது. ஆகவேதான் மேற்கூறிய ஜோதிடம் போன்றவைகளில் பெரும்பாலும் நம் மனதின் தாக்கத்தினால் என்ன முடிவை நாம் எடுக்கிறோமோ அதையே பின் தொடரவேண்டும். அவற்றையும் மீறி சில நேரங்களில் நம்மை ஏதேனும் ஒன்று ஈர்த்தால் அதன் வழி நடந்து பார்க்கலாம் நன்மை நடந்தால் சரி இல்லையென்றால் மீண்டும் நம் வழியே போகவேண்டியதுதான். “நம் தலையிலே எழுதினவன் கொசவனா “ என்கிற சொல் வழக்கை நான் அடிக்கடி கேட்டதுண்டு அதன் முழுப்பொருள் விளங்காமல் ஆராய்ந்து கொண்டே இருந்தேன்.

அப்படி ஆராயும் போதுதான் எனக்கு ஒன்று விளங்கியது கொசவன் புனையும் மண்பாண்டம் போன்றது அல்ல நம் தலையெழுத்து. மீண்டும் புனைந்த மணபாண்டத்தை உடைத்து தூளாக்கி மீண்டும் தண்ணீர் ஊற்றி மண்ணோடு மண்ணாக்கி களிமண்ணாக்கி மீண்டும் வேறு பாத்திரத்தின் வடிவத்தை கொசவன் புனைவது போல் அவ்வளவு எளிதல்ல நம் தலையெழுத்து. மிக அழுத்தமாக இறைவன் என்பவரால் அல்லது இயற்கை என்பதால் அழுத்தம் திருத்தமாக எழுதப்பபடது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்றுணர்ந்தேன்.

விதியை மதியால் வெல்லலாம் எனும் சொல்வழக்கை ஆராய்ந்தாலும் விதி என்னவென்றே அறிந்து கொள்ள முடியாத அற்ப மாநுடர்கள் நாம் நம்மால் எப்படி விதியை வெல்ல முடியும் என்றே தோன்றுகிறது! அப்படியே நம் விதியை மேற்கூறிய ஜாதகம் ஜோதிடம் போன்ற உபகரணங்களால் அறிய முடிந்தாலும் அந்த விதியை நம் அற்ப மூளையினால் மாற்றிவிட முடியுமா என்பது சந்தேகமே.

ஆகவே விதிப்படியே மதி போகும் என்னும் மூதாதையர்களின் சொல்வழக்கை எடுத்துக் கொண்டு சும்மா அல்லது வாளாவிருத்தல் தான் நம்மால் செய்ய முடிந்த ஒன்று என்றாலும் அப்படி நினைத்துக் கொண்டு அமைதியாய் இருந்துவிட முடியவில்லையே அற்ப மானுடர்களாகிய நம்மால் . அங்கேதான் ப்ரச்சனை தொடங்குகிறது

சக்கரம் சுத்துதடா

சக்கரம் சுற்றுவதால் இயந்திரங்கள் இயங்குகிறது என்பது நாம் கண்ணால் கண்டு உணரும் உண்மை ஆனால் அந்த சக்கரங்கள் சுற்ற ஒரு மூல சக்தி தேவை என்பதை நாம் அறிவதில்லை அந்த மூல சக்திதான் சக்கரங்களை சுழலவைக்கிறது.. அதே மூலசக்தியால் சக்கரங்களை நிறுத்தவும் முடியும், இயந்திரத்தின் இயக்கத்தை அதன் மூலமாக நிறுத்தவும் முடியும். சக்கரம் சுற்றுவதால் எப்படி இயந்திரம் இயங்குகிறதோ அப்படியேதான் இந்திரியங்களும் இயங்குகின்றன. இந்திரியங்கள் ஞானேந்திரம் கர்மேந்திரம் அதுபோலத்தான் கிரகங்களின் சுழற்சிக்கும் ஒரு மூல சக்தி உள்ளது ,அதுதான் இப் ப்ரபஞ்சத்தின் சுழற்சியை நிர்ணயிக்கிறது. அந்த மூலசக்தியை நாம் இறை என்கிறோம். கிரகங்களின் சுழற்சியை மூலசக்தியாகிய இறை நிர்ணயிக்கிறது என்பதை நாம் உணர மறுக்கிறோம்.

அப்படி கிரகங்களின் சுழற்சியை நிர்ணயிப்பதன் மூலமாக இப்ரபஞ்சத்தையும் அதன் இயக்கத்தையுமே நிர்வகிக்கத் தெரிந்த இறையால் இக்கிரகங்களின் சுழற்சியால் கடலைக் கட்டுப்படுத்தவும் அல்லது அவிழ்த்துவிடவும்.எரி மலைகளைக் கட்டுக்குள் வைக்கவும் அல்லது பொங்கி வழியவும் ஊழிக்கால மழை, சூறைக்காற்று அக்கினி போன்ற பஞ்ச பூதங்களையும் கட்டுப்படுத்த முடியுமென்றால் அதிலே வாழும் ஜீவராசிகளின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தவும் முடியும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அல்லவா?

அதைச் சுழலும் கிரகங்கள் மூலமாக கட்டுப்படுத்தவும் முடியுமல்லவா! கையிலே செல்வமும் செல்வாக்கும் உடலிலே ரத்தத் திமிரும் இருக்கும் வரையில் இறை என்பது கிடையாது விதி என்று ஒன்று இல்லை என்றெல்லாம் பிதற்றிக் கொண்டிருந்தாலும்

நாத்திகவாதியாய்த் திரிந்து உடல் தளர்வுற்ற போதும் உள்ளம் தளர்வுற்ற போதும் பொருளாதார வீழ்ச்சியின் போதும் ஆரோக்கிய வீழ்ச்சியின் போதும் நாம் நேசிக்கும் மனிதர்களின் அவதிகளைப் பார்க்கும் நாம் நேசிப்பது ஒரு சிறிய ஜீவனென்றாலும்

அதற்காகக் கூட நம்மையே அறியாமல் இறைவா காப்பாற்று என்று புலம்புவதும் நமக்காக அல்லது மற்றவருக்காக ஜாதகம் பார்ப்போமா ஜோதிடம் பார்ப்போமா ஹோமங்கள் செய்வோமா யாகங்கள் செய்வோமா என்று எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்னும் நிலையிலே அலைபாய்ந்தே மனிதர்கள் வாழ்க்கையில் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதானே உண்மை

அடிப்படை கணிதம்

அடிப்படையில் சரியாக கணிக்கப்படாத ஜாதகத்தை வைத்துக்கொண்டு ஜோதிடர் சொல்வது பலிக்கவில்லை அதனால் ஜோதிடம் பொய்யென்று கூறாதீர்கள் முதலில் உங்கள் ஜாதகம் துல்லியமாக கணிக்கப்பட்டது தானா என்று சோதியுங்கள்   என்கிறேன். நான் உங்கள் கருத்தை ஆமோதிக்கிறேன் துல்லியமாக கணிக்கப்படாத ஜாதகங்கள் எப்படிப்பட்ட விளைவை ஏற்படுத்தும் என்பதற்கு வாய்வார்த்தையாக வந்த ஒரு கதையை இங்கே உதாரணமாக எழுதவிருக்கிறேன்

இந்தக் கதையின் மூலம் வராஹமிஹிரர் என்னும் பெரும் ஜோதிடர் விக்ரமாதித்தன் அரசவையில் நவரத்தினங்கள் என்று சொல்லப்படும் மேதைகளில் ஒருவரான வராஹமிஹிரர். அவர் செய்த ஒரு செயலே உதாரணமாகிறது வினாடி நேரங்கள் கூட ஜாதகத்தின் பலனை மாற்றும் என்பதற்கு

ஒரு மன்னனின் துணைவியார் அதாவது மஹாராணிக்கு ப்ரசவ நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது எல்லாப் பகுதிகளிலிருந்தும் திறமை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வாயந்த ஜோதிடர்கள் அங்கே குழுமியிருக்கிறார்கள். ஆஸ்தான ஜோதிடரும் தயாராக இருக்கிறார் சில ஏற்பாடுகளை செய்துவிட்டு அப்போது அந்தப்புரத்திலிருந்து செய்தி வருகிறது ஆண்குழந்தை பிறந்ததாக

அப்போது உடனடியாக ஆஸ்தான ஜோதிடர் இளவரசனின் ஜாதகத்தை துல்லியமாக கணித்து எழுதிவிட்டு அதன் விளைவைப் படிக்கிறார் . இளவரசன் இப்போது இருக்கும் மன்னனைவிட புகழ்வாய்ந்தவனாக சக்கரவர்த்தியாக வலம் வருவான் என்று சொல்கிறார் ஆஸ்தான ஜோதிடர் மன்னன் மகிழ்கிறான் , இப்படி இருக்கும் நிலையிலே ஒரு எளிய தோற்றம் கொண்ட ஒருவர் வருகிறார் , அவர் சொல்கிறார் தாம் கணித்த வரையில் இந்த இளவரசன் இன்னும் ஓராண்டு முடியும் தறுவாயில் ஒரு பன்றி முட்டி இறந்து விடுவான் என்கிறார். ஆத்திரமுற்ற மன்னன் அவரை சிறையில் இடும்படி கட்டளை பிறப்பிக்கிறான், ஆனாலும் நாட்டிலுள்ள அனைத்து பன்றிகளைக் கொல்லுமாறு உத்தரவிடுகிறான்,

ஒரு வருடம் ஓடிவிடுகிறதி இளவரசனின் ஒராண்டு நிறைவு விழா கோலாகலமாக நடைபெறுகிறது , அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கும் வேளையில் ஏதோ ஒரு சப்தம் கேட்டு அனைவரும் பார்க்கும் போது அந்த மன்னன் ஏற்கெனவே வேட்டையாடிக் கொன்று மாட்டிவைத்திருந்த ஒரு காட்டுப் பன்றியின் தலை மேலிருந்து இளவரசன் மேல் விழுந்து குழந்தையை கொல்கிறது.

ஜோதிட விற்பன்னர் மதிப்பு

தன் தவறுணர்ந்த மன்னன் சிறையில் வைத்திருந்த அந்த எளியவரை அழைத்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு நீங்கள் எப்படி துல்லியமாக கணித்தீர்கள் என்று வினவுகிறான். அதற்கு அந்த எளியவர் உங்கள் ஆஸ்தான ஜோதிடரை அழையுங்கள் என்கிறார் எளியவர் இப்போது ஆஸ்தான ஜோதிடரிடம் நீங்கள் எப்படி ஜாதகம் கணித்தீர்கள் என்று கேட்க ஆஸ்தான ஜோதிடர் சொல்கிறார் பிறப்பு என்பதிலே குழந்தையின் தலைவெளிவரும் நேரமே துல்லியமான பிறப்பு நேரம் ஆகவே ஒரு தாதியை அந்தப் புரத்திலே நிறுத்தி அவளிடத்திலே ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொடுத்து வெளியே

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எறியுமாறு சொன்னேன் அவள் எலுமிச்சம்பழத்தை எறியும் நேரத்திலிருந்து அந்த எலுமிசம்பழம் வெளியேவந்து விழும் வினாடியை மிகச்சரியாக கணித்தேன் . அதையும் கழித்தே நான் இளவரசனுக்கு ஜாதகம் கணித்தேன் என்றார்

எளியவர் அந்த தாதியை அழைத்தார் அவளிடம் கேட்டார் இந்த ஜோதிடர் கூறியபடி நீ எலுமிச்சம் பழத்தை எறிந்தாயா என்று. அதற்கு அந்த தாதி நடுங்கிக்கொண்டே ஆமாம் எறிந்தேன் ஆனால் அது வாயிற்கதவிலே பட்டு மீண்டும் என்னிடமே வந்தது ஆனால் நான் மீண்டும் எறிந்தேன் என்றாள்

எளியவர் சொன்னார் வாயிற் கதவிலே பட்டு மீன்டும் தாதியிடமே வந்த எலுமிச்சம் பழம் மீண்டும் எறியப்படுவதகு எடுத்துக்கொண்ட வினாடிகளே இந்தக் குளறுபடிக்கு காரணம் ஆகவே ஆஸ்தான ஜோதிடர் மேல் தவறில்லை தாதியின் மேலும் தவறில்லை இளவரசனின் விதியே காரணம் என்று சொன்னார்.

ஆக துல்லியத்திலிருந்து சில வினாடித் துளிகள் மாறுபட்டாலும் பலன்கள் மாறிவிடும் என்பதே இந்தக் கதையின் நோக்கம் அப்படி இருக்க இங்கே குழந்தைகள் பிறக்கும் போதே வைத்தியர் கையிலே உள்ள கடிகாரத்திலே ஒரு நேரம், கூட இருக்கும் தாதியர்களின் கடிகாரத்திலே ஒரு நேரம் என்று வித்யாசம் காட்டுகிறதே ,

அதையும் தாண்டி வைத்தியர் சொல்லும் நேரத்தைத்தானே நாமும் கணக்கிட்டு ஜாதகம் கணிக்கிறோம் இப்போது கூர்ந்து கவனித்து யோசியுங்கள் நம் ஜாதகங்கள் துல்லியமாக கணிக்கப்பட்டிருக்கிறதா அப்படி இருக்க ஜோதிடத்தையும் ஜோதிடரையும் குற்றம் சொல்வதில் என்ன பயன் என்று நாம் உணரவேண்டும்.

ஆகவே ஜோதிடமும் ஜாதகமும் பொய்யல்ல ஜாதகம் கணிக்கப்பட்ட நேரமும் ஜாதகம் பார்ப்போரின் குறையான ஞானமும் கூட ஜாதகம் கணிப்பதில் தவறு ஏற்படுத்தி விளைவுகளை பலன்களை மாற்றுமே யோசிப்போமா?

வினாடிகள் மாற்றும் விபரீதம்

ஒருவினாடி நேரம் இவ்வளவு பாதகங்களை செய்யுமா என்று யோசிப்போர்க்கு ஒன்று சொல்கிறேன். வினாடி நேரம் என்பது நக்ஷத்திரம், கிரகங்கள் மாறும் நேரங்களில் ஒரு வினாடியிலே

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மாறக்கூடியதுஇது சாத்தியம். ஆனால் ஜோதிடத்திலே இது மிக முக்கியமான நுணுக்கமான ஆனால் மிகவும் விரிவான செய்தி அதை இங்கே எழுதுவது சாத்தியமாகாது ஆனால் என்னால் ஒன்று சொல்ல முடியும் ஒரு வினாடி நேரம் கழித்து சென்றதால் ஒரு விபத்திலிருந்தே தப்பியவர்கள் இருக்கிறார்கள், அதே போல் ஒரு வினாடி நேரம் முன்பாக சென்றவர்கள் விபத்திலே மாட்டிக்கொண்டு அவதிப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு நிகழ்வு நினைவுக்கு வருகிறது மஹாராஜபுரம் சந்தானம் பெரிய கர்நாடக இசை மேதை அவர் வாயிலிருந்த புகையிலையை துப்ப ஒரு வினாடி பின்பக்க இருக்கையில் நடுவிலே உட்கார்ந்திருந்த அவர் பின்பக்க இருக்கையின் ஓரத்துக்கு போகவும் ஒரு லாரி அவரை மட்டும் அடித்து அவர் உயிரைப் பறித்ததும் நிஜம்.

ஜாதகம் கணிக்கும் நேரம் கூட ஒரு வினாடி மாறினாலும் தசாபுக்திகள், லக்னங்கள் ராசிகள் எல்லாமே மாறக்கூடிய வினாடியாய் இருந்தால் எல்லாமே மாறக்கூடும், அதன் பலனாய் கோசாரமும் மாறும் என்று ஜோதிட வல்லுனர்கள் கூறுகிறார்கள்.
எந்த ஜோதிடமும் நீங்கள் கூறுவது போல கணிப்பது கிடையாது அந்த நேரத்தில் முன்னாள் பின்னால் சில விநாடிகள் வைத்து கணிக்க படுகிறது. என்று சொல்வோருக்கு , நீங்கள் சொல்வது தற்காலத்திலே அதனால்தான் ஜாதகங்கள் பலிப்பதில்லை, எனக்குத் தெரிந்து என் தாத்தா ஒரு நல்ல உண்மையான ஜோதிடர் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் வினாடி நேரமும் தவறாமல் துல்லியமாக கணிப்பார், அப்படிக் கணித்த வரையில் ஜாதகங்கள் பார்த்து பலன் சொல்வோர் சொன்னதெல்லாம் பலித்தது உண்மை ,இப்போது அப்படி இல்லை. ஜாதகம் பார்ப்பதும் ஜோதிடம் சொல்வதும் வியாபாரமாகிவிட்டது அதனால் ஜாதகம் பொய் ஜோதிடர் பொய்யென்று சொல்லிக்கொண்டு திரிகிறோம்.

பரிகாரங்கள் முட்டாள்தனமல்ல

மேகமூட்டமாய் இருக்கும் போது மழை பெய்யும் என்று ஊகித்து குடை எடுத்துச் சென்றால் ஓரளவு மழையில் நனையாமல் இருக்கலாம் , ஆனால் அலக்ஷியப் படுத்திவிட்டு சென்றால் நனைந்து தான் ஆகவேண்டும். மழையை நிறுத்த முடியாது. ஜோதிடம் அவ்வாறுதான். ஜோதிடம் பொய் அல்ல,ஜோதிடமும் குடை போல் தற்காலிக

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பரிகாரம்தான் மழை வலுத்தால் காற்று வலுத்தால் தற்காலிக பரிகாரமும் அடித்துக்கொண்டு போய்விடும் அதனால்தான் என்னதான் பரிகாரம் செய்தாலும் செய்த தீவினைகளின் பயனை அனுபவித்தே ஆகவேண்டும் என்பார்கள் அதனால்தான் சனீஸ்வரன் போன்ற கிரக்ங்கள் நமக்கு சில கஷ்டமான அனுபவங்களைக் கொடுத்து நம் பாவத்தின் அளவைக் குறைக்கின்றன சமனப்படுத்துகின்றன என்பார்கள்

சமீபகால நிகழ்வினை நினைவு கூர்ந்தாலும் இது தெள்ளத் தெளிவாய் விளங்குகிறது, நாட்டின் ஒட்டு மொத்த வருமானத்தை தன்னகப்படுத்திக் கொண்டு பெரும் பணக்காரர்களாக இருந்தாலும் கடைசியில் இன்னமும் கொஞ்சம் ஆயுளைக் கொடு ஆரோக்கியத்தைக் கொடு என்று கோயில் கோயிலாகச் சென்று இறைவன் காலடியிலே வேண்டுவதையும் கண்கூடாகக் கண்டோம் நாம் . ஆகவே எப்படி வாழ்ந்தாலும் என் விதி என்னவோ அதுதானே நடக்கப் போகிறது அதை மாற்ற முடியாதே என்னும் திமிரினால் ஆணவம் தலைக்கேறி ஆண்டவர்களெல்லாம கூட அக்ஞாத வாசத்திலே அவதிப்பட நேருகிறது இன்றும் கண்கூடாகக் காண்கிறோம் ஆகவே இப்படிப்பட்ட நிகழ்வுகளினால் ஏற்பட்ட அனுபவங்கள்தானே நம்மை ஓரளவு தெளிவிக்கிறது ஆகவே நாம் இயன்றவரை நம் மனதளவிலே நேர்மையாக நாணயமாக வாழ்தலே சாலச்சிறந்தது என்னும் முடிவுக்கு நாம் வரவேண்டியிருக்கிறது.

பிறப்பும் இறப்பும்

பிறப்பும் இறப்பும் இறைவசம் ,நம் வசம் அல்ல, அதை மாற்ற எந்த சக்தியாலும் முடியாது அப்படி மாற்றப்பட்டால் அதற்குறிய விளைவை அனுபவித்தே ஆகவேண்டும் .மேற்கூறிய பிறப்பு இறப்பு இரண்டுமே ஆத்மா சம்பந்தப்பட்ட நுணுக்கமான விதி அதை மாற்றும் அளவுக்கு நாம் புத்திசாலிகள் அல்ல என்பதை உணர வேண்டும்

ப்ரசவம் என்பது அந்தக் குழந்தையின் கர்ப்ப நேரம் என்பது எவ்வளவு மாதங்கள் நாட்கள் மணித்துளிகள் வினாடிகள் கருவறையிலே இருக்க வேண்டும் என்பதை ஏற்கெனவே துல்லியமாக கணித்து எழுதப்பட்ட இறைவிதி அதை மனிதர்கள் புத்திசாலித்தனமாக நல்ல நேரம் பார்த்து வெளியே எடுக்கிறோம் என்று நினப்பதும் அந்தக் குழந்தையின் தலைவிதியாகவும் இருக்கக் கூடும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆனால் நல்ல விளைவுகளைத் தராது என்பதே உண்மை. குழந்தையின் தலை வெளியே வரும் நேரத்தைத்தானே பிறந்த நேரமாக கொள்வது வழக்கமாய் இருக்கிறது , ஒரு குழந்தை பிறந்து அதன் மூச்சுக்குழலிலே திரவங்கள் அடைத்திருப்பதால் அழாமலே இருக்கும் ,அப்படிப்பட்ட குழந்தைகளை தலைகீழாகப் பிடித்துக்கொண்டு முதுகிலே தட்டுவார்கள்,

அப்படித் தட்டும் போது அதன் மூச்சுக் குழலிலே இருக்கும் திரவம் வெளியேறி அதன் பின்னரே அந்தக் குழந்தை மூச்சு விட ஆரம்பிக்கும். எப்போது வெளியே வரும் சிசுவின் தலையை இந்தப் பூமியிலே இருக்கும் ஒருவர் கைதாங்கி பிடித்து இழுக்கிறாரோ அப்போதே அது பிறந்து விட்டது என்றுதானே பொருள்

பிறக்காத குழந்தையை இப்போதெல்லாம் செய்வது போல அறுவை சிகிச்சை செய்து கையை உள்ளே விட்டு சிசுவை இழுக்கிறார்களே அப்படிச் செய்தால் உண்மையாக அந்தக் குழந்தை பிறக்கவேண்டிய நேரம் தவறுகிறது என்றே பொருளல்லவா

அறுவை சிகிச்சை செய்துதானே பல குழந்தைகள் பிறக்கின்றன அப்படிப் பிறப்பதெல்லாமே இறைவன் வகுத்த விதிதானே என்று கேட்கிறார் ஒருவர் எல்லாவற்றையுமே விதி என்று எடுத்துக்கொள்ளும் மனப்பான்மை வந்துவிட்டால் அதன் பிறகு எதுவுமே முயற்சியும் எடுக்க வேண்டிய அவசியமே இல்லையே.கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கலாமே. முடியுமா நம்மால். கவலைப்படுகிறோமே ஏதோ நாம் கவலைப்படுவதால் எல்லாமே சரியாகிவிடுமா என்பது கூடத் தெரியாமல்.

அதுதான் சாதாரணமாக மானிடர்களின் பேதமை. வைத்தியரின் கவனக்குறைவாலோ அல்லது கர்ப்பிணிப் பெண்ணை முடிந்த வரை இயல்பாக அலட்டிக்கொள்ளாமல் செய்யும் வேலைகளைச் செய்ய அனுமதித்து அவள் ப்ரசவத்தை எளிதாக்கும் வழிகள் செய்யாததாலோ ,அல்லது தொப்பிள் கொடி குழந்தையின் கழுத்தை சுற்றிக்கொண்டு ஆபத்து ஏற்படுத்தினாலோ, அல்லது குழந்தை முறையாக வெளிவரும் வழியை நோக்கித் திரும்பாமல் இடையிலே மாட்டிக்கொண்டாலோ வேறு வழியில்லை என்பது உண்மைதான். ஆனால் இக்காலத்திலே அறுவை சிகிச்சை செய்து எடுத்தால் அதிகப் பணம் ஈட்டலாம் என்னும் மனப்பான்மையுடன் செயல்படும் வைத்தியர்கள் அதிகரித்துவிட்டனர். இதையும் விதி என்றே எடுத்துக்கொள்ள வேண்டுமா?

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்ன செய்வது மருத்துவர் பயமுறுத்தும் போது பணியத்தானே வேண்டியிருக்கிறது என்று வருத்தப்பட்டாலும் இதுதானே உண்மை, இறைவன் என்ன முடிவு கொடுத்திருக்கிறான் என்பதை அறியாமலே பல விஷயங்களை இப்படித்தான் நாம் விதி என்று ஏமாந்து போகிறோம். என்பதும் உண்மைதானோ?

மனித புத்திசாலித்தனங்களின் விளைவு

அது முன்கூட்டியே எடுத்தாலும் சற்று நேரம் கழித்து வெளியே எடுத்தாலும் அதன் இயல்பான பிறப்பு நேரம் தவறிப்போகுமே அப்படியானால் அப்படிப் பிறக்கும் குழந்தைக்கு சூரிய உதயத்தின் நேரத்தை வைத்து லக்னத்தைக் கணித்தால் எப்படி அது சரியாக வரும் என்பதே என் சந்தேகம். அந்த லக்னம் தீர்மானிக்கும் உயிரின் தோற்றம் ,குணநலன்கள் எப்படி சரியாகும்
எல்லாவற்றையுமே விதி என்று எடுத்துக்கொள்ளும் மனப்பான்மை வந்துவிட்டால் அதன் பிறகு எதுவுமே முயற்சியும் எடுக்க வேண்டிய அவசியமே இல்லையே.கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கலாமே . முடியுமா நம்மால். கவலைப்படுகிறோமே ஏதோ நாம் கவலைப்படுவதால் எல்லாமே சரியாகிவிடுமா என்பது கூடத் தெரியாமல் . அதுதான் சாதாரணமாக மானிடர்களின் பேதமை.

வைத்தியரின் கவனக்குறைவாலோ அல்லது கர்ப்பிணிப் பெண்ணை முடிந்த வரை இயல்பாக அலட்டிக்கொள்ளாமல் செய்யும் வேலைகளைச் செய்ய அனுமதித்து அவள் ப்ரசவத்தை எளிதாக்கும் வழிகள் செய்யாததாலோ ,அல்லது தொப்பிள் கொடி குழந்தையின் கழுத்தை சுற்றிக்கொண்டு ஆபத்து ஏற்படுத்தினாலோ, அல்லது குழந்தை முறையாக வெளிவரும் வழியை நோக்கித் திரும்பாமல் இடையிலே மாட்டிக் கொண்டாலோ வேறு வழியில்லை என்பது உண்மைதான்.

ஆனால் இக்காலத்திலே அறுவை சிகிச்சை செய்து எடுத்தால் அதிகப் பணம் கறக்கலாம் என்னும் மனப்பான்மையுடன் செயல்படும் வைத்தியர்கள் அதிகரித்துவிட்டனர். இதையும் விதி என்றே எடுத்துக்கொள்ள வேண்டுமா? என்ன செய்வது மருத்துவர் பயமுறுத்தும் போது பணியத்தானே வேண்டியிருக்கிறது என்று வருத்தப்பட்டாலும் இதுதானே உண்மை, இறைவன் என்ன முடிவு கொடுத்திருக்கிறான் என்பதை அறியாமலே பல விஷயங்களை இப்படித்தான் நாம் விதி என்று ஏமாந்து போகிறோம். என்பதும் உண்மைதானோ?

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என் தாயார் சொல்வார்கள் கர்பம் என்பது வியாதி அல்ல ஆகவே கூடியவரை இயல்பாக எல்லா வேலைகளையும் செய்யுங்கள் . தானாகவே சுகப்ப்ரசவம் ஆகும் என்று. மனிதர்களைத் தவிர உலகிலே எந்த ஜீவராசிக்கும் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுப்பதில்லை, எல்லாமே இயற்கையான ப்ரசவம்தான் . மனிதர்களின் பலகீனமே சுகப்ரசவத்துக்கு எதிரி இப்படி பலவற்றை நாமே இழுத்துவிட்டுக்கொன்டு அதை விதி என்று சொல்லி அதன் மேல் பழிபோட்டு இறைவன் சித்தம் என்று

என் தாயார் சொல்வார்கள் கர்பம் என்பது வியாதி அல்ல ஆகவே கூடியவரை இயல்பாக எல்லா வேலைகளையும் செய்யுங்கள் . தானாகவே சுகப்ப்ரசவம் ஆகும் என்று. மனிதர்களைத் தவிர உலகிலே எந்த ஜீவராசிக்கும் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுப்பதில்லை, எல்லாமே இயற்கையான ப்ரசவம்தான் . மனிதர்களின் பலகீனமே சுகப்ரசவத்துக்கு எதிரி இப்படி பலவற்றை நாமே இழுத்துவிட்டுக்கொன்டு அதை விதி என்று சொல்லி அதன் மேல் பழிபோட்டு இறைவன் சித்தம் என்று சொல்லி இறைவன் மேல் பழிபோடலாமா?.

பழி ஓரிடம் பாவம் ஓரிடம்

தானாகக் கனியாத காயை தடி கொண்டு அடித்தால் கனியுமா? வெதும்பும் அல்லவா? அது போல் ரசாயனத்திலே தோய்த்து பழுக்க வைத்தால் அதை உண்ணும் மனிதர்களுக்கு நோய்களைப் பரப்புமா பரப்பாதா? அது போன்றுதான் இயற்கையாக வரவேண்டிய பருவங்களை செயற்கையாக வரவழைக்க முடியுமா? அப்படியே வரவழைத்தாலும் அவை இயற்கையான பலன்களைக் கொடுக்குமா? இப்படித்தான் இயறகையான ப்ரசவத்திலே தகுந்த நேரத்திலே பிறக்கும் ஆத்மாக்கள் ஜீவாத்மாக்களாக குழந்தைகளாக மலரும் ,

அவைகள் பூர்வ ஜென்ம புண்ணிய பாவங்களுக்கேற்றவாறு பிறந்து அந்தப் பாவ புண்ணியங்களை அனுபவித்து அதன் பின் கரைசேர்ந்து பரமாத்மாவை அடையும் அதுதான் இயற்கையின் உண்மையான சுழற்சி, அப்படி இருக்க செயற்கையாக இயற்கையை மாற்ற நினைத்தால் அவைதான் முழுமை பெறாத ஊனமான குழந்தைகளும், இரண்டாங் கெட்டான் குழந்தைகளும் மூளை வளர்ச்சி இல்லாத, அல்லது உடல் வளர்ச்சி இல்லாத குழந்தைகளாக பிறக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இயற்கையை சீண்டினால் அது வெகுண்டு சீறிப்பாயும், அதன் அறிவிப்பே பெரு வெள்ளம் எரிமலையின் சீற்றம் நில நடுக்கங்கள், ஊழிக்காற்று போன்றவைகளாக வடிவெடுத்து பக்க விளைவுகளாக இருக்கும் மனிதர்கள் அத்தனை பேரையும் வாட்டுகிறது. எப்போது உணர்வோம் நாம்?

இயற்கையை தெய்வமாக மதிக்க வேண்டும் என்னும் பண்பாடே அதனால்தானே ஏற்பட்டது. அல்லது நாம் ஏற்படுத்துகிற வழிமுறைகளையாவது அந்தந்த வழிமுறைக்கேற்ப கடைப்பிடிக்க வேண்டும்.
இயற்கையையும் இறையையும் மதிக்காமல் அல்லது நாம் ஏற்படுத்திய வழிமுறைகளையும் மதிக்காமல் நாம் மாற்று வழியிலே செல்லும் போது அந்த மாற்று வழிகளிலே இருக்கும் ஆபத்துகளையும் சந்தித்தே ஆகவேண்டும் அல்லவா? இப்படியெல்லாம் ஏறுக்கு மாறாக நடந்து கொண்டு ஜோதிடம் வானசாத்திரம் ஜாதகம் எல்லாமே பொய்யென்று நினைத்தால் நாம் எவ்வளவு மூடர்கள்

மாற்று எரிபொருள் நிரப்பலாமா

அப்படி இருக்க ஜாதகம் பொய் ஜோதிடம் பொய்யென்று எப்படி ஊகிக்க முடியும்? பெட்ரோல் நிரப்ப வேண்டிய இயந்திரத்திலே டீசலையும் , டீசல் நிரப்ப வேண்டிய இயந்திரத்திலே பெட்ரோலையும் , Liquefied Petroleum Gas நிரப்பவேண்டிய இயந்திரங்களுக்கு மாற்றாக எரிபொருளை மாற்றிப்பாருங்கள் இயந்திரங்கள் ஓடாது மாறாக கெட்டுப்போகும்.

ஆனால் உபயோகிக்கும் மாற்று எரிபொருளுக்கேற்ப இயந்திரங்களின் அமைப்பை மாற்றினால் ஓடும். ஒன்று இயந்திரத்தை மாற்றவேண்டும் அல்லது எரிபொருளை மாற்றாமல் இருக்க வேண்டும். இப்படித்தான் மானுடர்களாகிய நம் பிறப்பும் விதியின் பயனும், அவைகளை மாற்ற நினைத்தால் மாற்றும் போது ஏற்படும் அபாயங்களை நாம் அனுபவித்தே ஆகவேண்டும்.

நாம் தவறு செய்துவிட்டு ஜாதகம் ஜோதிடம் பொய்யென்று கூவும் மானுடரே மாற்றிக்கொள்ளுங்கள் உங்கள் ஜாதகத்தை அல்லது உங்களை உங்கள் எரிபொருளை மாற்றுங்கள் அல்லது உங்கள் இயங்கு சக்தியை எரிபொருளுக்கேற்ப மாற்றுங்கள் ,இங்கே நான் எரிபொருள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்று குறிப்பிடுவது உங்கள் ஆன்மசக்தியை அதாவது நாத்திகத்தைக் களைந்து ஆத்திகத்தை இறை நினைவை ஏற்றுங்கள் உங்கள் ஆத்மாவிலே உங்கள் மனது மூலமாக ,அப்போதுதான் ஜாதகம் ஜோதிடம் போன்றவைகளின் உண்மையான பலனை அனுபவிக்க முடியும், அனுபவிக்க தகுதியும் நமக்கு வரும்

மனசாட்சியை மதியுங்கள்

எனக்கு சந்தேகமே இல்லை ,ஆனால் இப்போதும் கர்ப்பிணிகள் இயல்பாக வேலை செய்துகொண்டிருந்தால் ப்ரசவம் எளிதாகவே மாறும் ஆனால் மருத்துவர்கள் அதிக பணம் சம்பாதிக்க இயலாமல் போகும். அதனால் அறுவை சிகிச்சைக்கே பரிந்துரைப்பார்கள் ஏதேனும் ஒரு காரணத்தை சொல்வார்கள். நம்மாலும் இந்த விஷயத்திலே ரிஸ்க் எடுக்க முடியாதே அதுதான் பணம் ஈட்டுவோரின் பலமும் நம் பலகீனமும் தாய் சேய் இருவருக்கும் சிரமமான நேரத்தில் என்ன செய்வது? இதன் தீர்வு என்ன? சில நேரங்களில் தாய் சேய் இருவருக்குமே அபாயமான காலத்தில் அறுவை சிகிச்சையும் தேவைதான் அப்போதுதான் தாய் சேய் இரு உயிரையும் காக்க முடியும் , நாம் வைத்தியர்களை கடவுள் போல் பார்க்கிறோம் அதனால் நம்பித்தான் ஆகவேண்டும் ஆனால் மருத்துவர்கள் நம்மை ஒரு பணம் ஈட்டும் கருவியாகத்தான் பார்க்கிறார்கள் இதற்கெல்லாம் ஒரே தீர்வு ஏமாற்றுவோரின் மனசாட்சியை தட்டி எழுப்புதலே.

அல்லது குறிப்பிட்ட காலத்திலே திருமணம் செய்துகொண்டு இளமையாக வாழ்தலே .ஆனாலும் சீக்கிரம் திருமணம் செய்ய இப்போதெல்லாம் இளைஞர்களுக்கும் , யுவதிகளுக்கும் மனம் வருவதில்லை,ஆவர்கள் ஏதோ ஒரு காதல் என்னும் மாய உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

ஓரளவேனும் வாழ்க்கையிலே படித்து பணம் ஈட்டிவிட்டே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். தனக்கேற்ற கணவனை தன்னுடைய பெற்றோர்களால் தேடித்தர முடியாது என்று நினைக்கிறார்கள். பெற்று அத்துணைக் காலம் வளர்த்த பெற்றோர்களையும் நம்ப மறுக்கிறார்கள், இறையையும் நம்ப

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மறுக்கிறார்கள். அதுவுமில்லாமல் அவர்களைப் படிக்க வைத்ததே பெற்றோர்கள்தான் என்பதையும் மறந்து பெற்றோர்களை எதுவும் தெரியாதவர்கள் என்று நினைக்கிறார்கள்.

ஏட்டுப் படிப்பா அனுபவ அறிவா

ஏட்டுப் படிப்பை படித்துவிட்டு அனுபவ அறிவை அலக்ஷியப் படுத்துகிறார்கள். இப்போதைய காலகட்டத்திலே வாழ்க்கை முறையை இப்படி அமைத்துக் கொள்வது தான் பயனளிக்கும் என்று நம்புகிறார்கள்.. ஆனால் பருவத்தே பயிர் செய் என்னும் நம் முன்னோர்களின் பண்பாடு வியக்கத்தக்க விஞ்ஞானமே என்பதை தற்போதைய தலைமுறைகள் ஒப்புக்கொள்வதில்லை, ஆனால் உடல் முற்றிவிட்டால் பெல்விஸ் விரிந்து இயற்கையான ப்ரசவம் நடப்பது சற்றே ஸ்ரமம் தான். மேலும் இயற்கையாகவே பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் கிடைக்கும் ஊட்டச் சத்துகளுக்கும் , இயற்கையான வாலிபத்துக்கும் இப்போதெல்லாம் வாய்ப்பு இல்லை. எல்லாமே போலியாக ஆகிவிட்டது, நேர்மையாக ஒரு குறிப்பிட்ட வயது வரை மனதைக் கடுப்படுத்தி வாழ்வது என்பது இப்போதைய காலகட்டத்திலே இயலாத
காரியம்,

பத்து பிள்ளைகள் பெற்ற தாய்க்கு தலைச்சன் பிள்ளை உபதேசம் என்னும் பழமொழி நினைவுக்கு வருகிறது.. அனுபவ அறிவை மதிக்கும் அளவுக்கு அவர்கள் மாறினாலதான் இதற்கெல்லாம் தீர்வு வரும், ஆனால் இனி வருங்காலங்களிலே அப்படிப்பட்ட மாற்றத்துக்கு வழியே இல்லை என்றே தோன்றுகிறது.,

அதற்கேற்றார்ப்போல் தற்போதைய திரைப்படங்களும், தொலைக்காட்சித் தொடர்களும், பல இணையத் தொடர்பு காட்சிகளும் பல குழந்தைகளின் மனதையும் உடலையும் பிஞ்சிலேயே பழுக்க வைத்துவிடுகிறது, அதனால் ஏற்படுவது புரிதல் இல்லாத காதல், பருவ ஈர்ப்பை காதல் என்று எண்ணி ஏமாந்து போகிறார்கள். திருமணத்துக்கு முன்பே சேர்ந்து வாழ்தல் கலாசாரம் அதனால் ஏற்படும் சங்கடங்களை எதிர்கொள்கிறார்கள், புரிதலோ ஒத்துப்போகும் மனப்பான்மையோ இல்லாத காரணத்தால் ஏற்படும் விவாகரத்துக்கள் ஆகியவை , கலாசார சீரழிவாக திருமணத்துக்கு முன்பே சேர்ந்து வாழும் கலாசாரம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காதலித்து பெற்றோருக்கு தெரியாமல் ஓடிப்போதல், அதன் பின் ஏமாந்து போய் வாழ்க்கையில் விரக்தி ஆகியவைகளை அனுபவிக்கிறார்கள்.

மாயக் கலாசாரம்

நம் முன்னோர்கள் முதல் இரவு என்று ஒன்றை முறையாக ஏறடுத்தி பெண்ணின் மனதையும் ஆணின் மனதையும் சமனப்படுத்தி அவர்களுக்கு ஓரளவு இல்லறம் என்றால் என்ன என்பதை நாசுக்காக உணர்த்தி இருவரும் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை அனுபவ அறிவாக சொல்லிக் கொடுத்து, அவர்களிடையே இருக்கும் இயல்பான கூச்சம் போன்றவைகளை திருமண நாளிலே குடத்திலே போட்டிருக்கும் மோதிரத்தை இருவரும் சேர்ந்து எடுக்கச் செய்தல், இருவரின் மனமும் கைகளும் இயல்பான தொடுதல் மூலமாக பழகுதல், தேங்காய் உருட்டி விளையாடுதல் போட்டியாய் தேங்காய் முதலிலே எடுக்க பயிற்சி அளிக்கும்போதே விட்டுக் கொடுத்தல்.

வெற்றி பெறுதல்,பெண்டாட்டிக்காய் கணவன் தணிந்து ஒரு முறை அவளை வெற்றி பெற வைத்து மகிழ்தல்.அதே போல் கணவன் வெற்றி பெற்றால் அதற்கும் மனைவி மகிழ்தல் என்றெல்லாம் பண்பாடுகளை அவர்கள் அறியாமலே அவர்கள் மனதிலே புகுத்தி தம்பதிகள் இருவரின மனதையும் உடலையும் இல்லறத்துக்கு இனிமையான இல்லறத்துக்கு வெற்றியான இல்லறத்துக்கு தயார் செய்து அதன் பின்னர் முதலிரவு அறைக்குள்ளே அனுப்பி வாழ்க்கையை தொடங்கச் செய்கிறார்கள்.

,எல்லாமே மனோவியல்தான் அதை அறியாமல் பெற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று யார் அவசரப்படுகிறார்களோ அவர்கள்தான் இப்படியெல்லாம் குறைப்ப்ரசவம் அறுவை சிகிச்சை முறை என்றெல்லாம் மற்றவர்களால் ஏமாற்றப்படுகிறார்கள் இதை உணர்ந்தால்தான் எல்லாம் சரியாகும், அதைவிடுத்து அலக்ஷியமாக வாழத் தலைப்பட்டால் அவதிகள் தானாய் வரும்..அப்போது அதற்குக் காரணமாய் பெற்றோர்களையோ அல்லது தலைவிதி என்று நொந்து கொண்டு ஜாதகத்தையும் நம்பாமல்

ஜோதிடத்தையும் நம்பாமல் இறையையும் நம்பாமல், நவீன விஞ்ஞானம் என்றே சொல்லி மெத்தப் படித்தவர்களாய் தம்மையே

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நினைத்துக்கொண்டு வாழ்க்கையை சீரழித்துக்கொண்டு அதன் விளைவாய் நாத்திக வாதம் பேசித் திரிவோரே அதிகமாய் ஆகிவிட்ட காலம் இது என்ன செய்ய.இது போன்ற செயல்கள்தான் குழந்தை பிறந்தாலும் அக்குழந்தையையும் பாதிக்கிறது, குழந்தையின் எதிர்காலத்தைக் கூட கவனிக்காமல் சுயநலமாய் சிந்திக்கிறார்கள் இப்போதைய தம்பதிகள்.

ஏனென்றால் தாம்பத்யம் என்னும் புனிதத்தை அவர்கள் உணர்வே இல்லை, நீ பெரியவனா நான் பெரியவளா என்கிற போட்டியிலே வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வதால் இவர்கள் இருவருக்கும் இடையே மருத்துவர்கள், அக்கம் பக்கம் இருப்போர் ஆகியோர் புகுந்து மனவேறுபாட்டை உண்டாக்கி அதிலே குளிர்காய்கிறார்கள் ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்ணே எதிரியாகிறாள் புதிய காதலி அல்லது காதலன் வடிவிலே,

தம்பதியர்

தம்பதிகளில் இரு வகையினர்தான் உண்டு அதில் ஒரு வகையினர் ஏதேனும் காரணத்தால் அல்லது விதி வசத்தால் நல்ல வாழ்க்கை சரியாக அமையாதவர்கள்,

இன்னொரு வகை அதிர்ஷ்டவசமாக முன்னோர் செய்த புண்ணியத்தின் விளைவாக அமைந்திருக்கும் நல்ல வாழ்க்கையை சரிவர வாழ்த்தெரியாமல் கெடுத்துக்கொண்டு வாழ்பவர்கள் அல்ல அல்ல தாழ்பவர்கள் என்று இரு வகையினர்தான்

உன்னைக் காலமெல்லாம் காப்பேன் என்கிற உறுதி மொழியை அக்னி சாட்சியாக அளித்துவிட்டு மனைவிக்கு த்ரோகம் செய்கிறார் கணவர் , கணவருக்கு த்ரோகம் செய்கிறாள் மனைவி கள்ளக் காதல் வடிவிலே. என்ன செய்ய ஜாதகம் ஜோதிடம் பார்த்து நல்ல நாள் நல்ல நேரம் ஆகிய முகுர்த்த நேரம் பார்த்து அம்மி மிதித்து அருந்ததி பார்த்து

சப்தபதி என்னும் ஏழு அடிகளிலே கைபிரியாமல் இணைந்து அக்னியை வலம் வந்து எடுத்த உறுதி மொழிகளை காற்றிலே பறக்க விட்டுவிட்டு ஜாதகத்தையும் ஜோதிடத்தையும் மனசாட்சியையும் இறை உணர்வையும் முப்பது முக்கோடி தேவர்களையும் பஞ்ச பூதங்களையும் யாரையுமே மதிக்காமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று தறி கெட்டு அலைகிறார்களே இவையெல்லாம் எப்படி நடக்கிறது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்கிற சந்தேகம் வருகிறதா? எல்லாமே சரியாகக் கணிக்கப்படாத அடிப்படையான ஜாதகம் சரியாகப் பார்த்து சொல்லப்படாத ஜோதிடம் இரண்டும் தான் ஆனால் ஜாதகமும் ஜோதிடமும் உண்மை பொய்யல்ல

இப்போது புரிகிறதா எங்கே தவறு இருக்கிறதென்று . ஆனால் யதார்த்த வாழ்க்கையிலே தம்பதிகள் எந்தக் காரணத்தைக் கொண்டு பிரிந்தாலும் அவர்கள் பெரும் பணக்காரர்களாயினும் பணமே இல்லாத வசதிகள் இல்லாத ஏழைத் தம்பதியானாலும் பிரிவு பிரிவுதானே இருவரில் ஒருவர் பிரிந்தால் அது தனிமைதானே , அப்படிப் பிரிந்தவர்களுக்கு பணம் வசதிகள் இருக்கிறது, அல்லது பணமும் இல்லை வசதிகளும் இல்லை எனும் இரு நிலைதானே பிரிவுத் துயரம் ஒன்றுதானே , அதன் பிறகு வாழ்க்கையை அவர்கள் தனியேதானே எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்னும் உண்மையை உணராமல் பிரிந்து பிரிந்து அவதிப்படுகிறார்கள்.

களத்திரகாரகன் பலன்கள்

ஜாதகம் பார்க்கும் போது இப்படிப்பட்ட பிரிவுகள் ஏற்படாமலிருக்குமா என்று களத்திர ஸ்தானமாகிய ஏழாம் இடத்தை நன்கு ஆராய்கிறார்கள். அப்படி கைதேர்ந்த மெத்தப் படித்த ஜோதிட சாத்திரத்தை அறிந்த வல்லுனரால் ஆராயப்படும்போது அதிலிருக்கும் குறைகளைக் களைய பரிகாரமும் செய்தே திருமணம் என்னும் பந்தத்திலே இணைக்கிறார்கள்.

அப்படி இருக்க அடிப்படையான ஜாதகமே உண்மையானதாக சரியாக கணிக்கப்பட்டதாக இல்லாமல் இருந்தால் எப்படிப் பலிக்கும் ,என்பதை யோசியுங்கள் . அஸ்திவாரம் சரியில்லாத கட்டிடம் போலவே அவர்கள் வாழ்க்கையும் ஆடிப்போகிறது. ஆகவே வருங்கால வாழ்க்கைக்கு அஸ்திவாரமாகிய ஜாதகத்தையும்

பரஸ்பர நம்பிக்கையையும் கைக்கொண்டு மிகத்துல்லியமாக ஜாதகத்தைக் கணிக்க முற்படுங்கள்.அப்போதுதான் உண்மையாகவே விவரம் அறிந்த ஜோதிடர்கள் சொன்னாலும் அது பலிக்கும். அதை விடுத்து ஜாதகம் ஜோதிடம் எல்லாம் பொய்யென்று விரக்தியாய் கூறுவதில் பொருளில்லை.

ஜாதகத்திலே ஏழாம் இடமாகிய களத்திரஸ்தானத்தை ஆராய்ந்து, வாழ்க்கைத் துணையை ஏற்படுத்துகிறார்கள், தினப்பொருத்தம். ரஜ்ஜுப் பொருத்தம் கணபொருத்தம் , யோனிப்பொருத்தம், மாஹேந்திரப் பொருத்தம் போன்றவைகளை ஆராய்ந்தே ஜாதகத்தை கணித்து

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இணைக்கிறார்கள்

என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். இவை எல்லாமே சாத்திரம் மட்டுமல்ல கணிதம் மட்டுமல்ல விஞ்ஞானமும் கலந்தே இருக்கிறது இவைகளில் அதைப் புரிந்து கொள்ளாமல் இருந்துவிட்டு ஜாதகம் பொய் ஜோதிடம் பொய் ஆன்மீகம் பொய் இறையே பொய் என்றெல்லாம் சலித்துக் கொள்வதிலே என்ன பயன் இருக்க முடியும்,

இறைவன் படைப்பின் அதிசியம்

இறையின் படைப்பிலே ஒவ்வொரு உயிருக்கும் பலவிதமான குணங்கள் படைக்கிறான் அதனதன் பிறப்புக்கேற்ப பூர்வ ஜென்ம புண்ணிய பாவங்களுக்கேற்ப ஸாத்வீக அல்லது ஸத்வ குணம், ராக்ஷஸ அல்லது ரஜஸ் குணம், தாமச அல்லது தமஸ் குணம் .ஆகியவை ஏற்படுகின்றன.

அவை அந்த ஜன்ம ஆத்மாவின் ஜீவ அணுக்களிலேயே பொதிந்திருக்கிறது ,அதைத்தான் ஜீன் என்று விஞ்ஞானம் சொல்கிறது . அதனால்தான் சர்க்கரை நோய்ப் பாரம்பர்யம், இருதயநோய்ப் பாரம்பர்யம் என்றெல்லாம் சொல்கிறார்கள்.

ஒரு ஜீவாத்மாவுக்கு பூர்வ ஜென்மத் தொடர்பில்லையென்றால் எப்படி இதெல்லாம் சாத்தியம், ஆகவே ஒவ்வொரு ஆத்மாவுக்கும் பூர்வ ஜென்மத் தொடர்புகள் உண்டு என்பதை விஞ்ஞானிகளே அவர்கள் அறியாமலோ அறிந்தோ சொல்கிறார்கள்.

எப்போது பரம்பரை நோயை பரம்பரை குணங்களை விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்கிறார்களோ அப்போதே அவர்கள் ஆத்மாவையும் தன் பூர்வ ஜென்மத் தொடர்புகளையும் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதே தெளிவு.

ஆகவே நவீன விஞ்ஞானம் என்பதே நம் பூர்வீக அடிப்படை சொத்தாகிய மெய்ஞ்ஞானத்தின் ஒரு சிறு பகுதியே என்பது புலனாகிறதல்லவா? நம் வேதங்களை ஆராய்ந்தால் நவீன விஞ்ஞான வளர்ச்சியே அதன் அடிப்படயிலே ஏற்பட்டதுதான் என்பதை நாம் உணரலாம்

நம் உடலின் பிரிவுகள் : ஸ்தூல தேஹம் அல்லது உடல், பிராண தேஹம் அல்லது உயிர், மனோ தேஹம் அல்லது மனம் ,காரண தேஹம் அல்லது புத்தி , மஹாகாரண தேஹம் அல்லது சூட்சும அகம்பாவம் , ஆத்மா அல்லது இறை தத்துவம். இந்த்ரியங்கள் மொத்தம் பத்து , அதில் ஐந்து

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கர்மேந்திரியங்கள் ஐந்து ஞானேந்திரியங்கள், வாக்கு, கை , கால் ,குதம், குறி இந்த ஐந்தும் கர்மேந்திரியங்கள்.

கண், காது, நாக்கு, மூக்கு, தோல் ஆகிய இந்த ஐந்தும் ஞானேந்திரியங்கள்-

இந்திரியங்கள்

இந்திரியார்த்தங்கள் அல்லது தன்மாத்திரிகைள் ஐந்து சப்த,ஸ்பர்ச,ரூப,ரச,கந்த அதாவது ஒலி,தொடுதல்,ஒளி,சுவை,மணம ஒன்று(1) -உடலுள் உறைபவன் அல்லது ஆன்மா அல்லது புருஷன். சான்று மனித உடலில் இருக்கும் மூலப் பொருட்கள் ஆகும் .

70 கிலோ எடையுள்ள ஒரு மனிதனை பகுப்பாய்வு செய்த போது மனித உடலிலுள்ள மூலப்பொருட்கள் என்னென்ன என்பதை நவீன விஞ்ஞானமே ஒப்புக்கொண்டுள்ளது அதை விரிவாக வரும் பகுதிகளிலே பார்ப்போம்

நண்பரே நான் தொழில் முறை ஜோதிடன் அல்ல ஜோதிடம் ஜாதகம் வானசாத்திரம் கைரேகை நாடி ஜோதிடம் போன்ற பலவகையான ஜோதிட சாத்திரங்களை ஆராய்ந்து எழுத விருப்பமாக ஆராய்ந்து எழுதுகிறேன் அவ்வளவே ஆனால் நீங்கள் என்னிடம் எதுவும் நட்போடு கேட்கலாம், அதைப் பற்றியும் ஆராய்வேன் உங்களைப் போன்றோரிடமும் சந்தேகம் கேட்டுத் தெளிவேன் நீங்கள் கோரிக்கை வைக்கும் அளவுக்கு நான் அவ்வளவு பெரியவன் அல்ல கற்றுக்கொண்டிருக்கிறேன் தினமும் என் நோக்கமே தெரிந்து கொள்வதே ஆகவே என்றுமே மாணவனாகவே இருக்க விரும்புகிறேன் நிறைகுடங்கள் எப்போதும் ,தளும்புவதில்லை, நண்பரே நான் எப்போதும் பொய் சொல்வதில்லை நான் ஜாதகம் பார்த்து சொல்லும் அளவுக்கு திறமையானவன் அல்ல என் தாத்தா நரசிம்மாச்சாரியார் ஒரு திறமையான ஜோதிடர் அ,வர் இப்போது இல்லை, நான் அவரைப் பார்த்ததும் இல்லை, ஆனால் பரம்பரையாக ஞானம் உள்ளதால் எனக்கும் ஓரளவு இறையருளால் தெரிகிறது அவ்வளவே. , ஆனால் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் இயற்கையான ஆர்வத்தால் பல நூல்களைப் படிக்கிறேன் நான் என் சிற்றறிவுக்கு தெரிந்ததை எழுதுகிறேன் அவ்வளவே. ,எனது யோகத்திற்கு நல்ல ஜோதிடர் அகப்படாததாலேயே சொந்த முயற்சியில் பல்வேறு நூல்களைக் கற்றேன் ,பலன் கணித்தலே தடுமாறுகிறது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அதிகம் தெரிந்து கொள்ள தெரிந்து கொள்ள குழப்பம் தான் மிஞ்சும் ஒருவனைப் பற்றி ஓரகத்திரு அப்பிடீன்னு அதுக்குத்தான் சொன்னாங்க அதனால் ஏதேனும் ஒரு வழிமுறையைப் பின்பற்றி தெளிவடையுங்கள் சுத்தவாக்கியப் பஞ்சாங்கத்துக்கும் திருக்கணிதப் பஞ்சாங்கத்துக்குமே வேறுபாடு உள்ளது ஏனென்றால் சுத்தவாக்கியப் பஞ்சாங்கத்தை திருத்தி எழுதிய பஞ்சாங்கமே திருக்கணிதப் பஞ்சாங்கம்

பகுப்பாய்வுகள்

. 70 கிலோ எடையுள்ள ஒரு மனிதனை பகுப்பாய்வு செய்த போது மனித உடலிலுள்ள மூலப்பொருட்கள் என்னென்ன என்பதை நவீன விஞ்ஞானமே ஒப்புக்கொண்டுள்ளது அதை விரிவாக வரும் பகுதிகளிலே பார்ப்போம் என்று சொன்னேன்

சுத்த வாக்கிய பஞ்சாங்கத்திற்கும் திருக்கணித பஞ்சாங்கத்திற்கும் அதிகபட்சமாக 17 நாழிகை வரை வேறுபாடு ஏற்படுவதுண்டு. அதாவது 6 மணி 48 நிமிசம் வரை இந்த வேறுபாடு ஏற்படும். அமாவாசை, பௌர்ணமி தினங்களில் இந்த வேறுபாடு மிகக்குறைவாக இருக்கும். அஷ்டமி, நவமி தினங்களில் இந்த வேறுபாடு அதிகமாக இருக்கும். என்கிறது புள்ளி விவரங்கள்

1 நாழிகை = 24 நிமிடங்கள் = 60 விநாழிகை = 3600 லிப்தம் = 216000 விலிப்தம் = 12960000 பரா = 777600000 தத்பரா[1]
2.5 நாழிகைகள் = 1 ஓரை = 1 மணித்தியாலம் = 60 நிமிடங்கள்
3.75 நாழிகைகள் = 1 முகூர்த்தம்
7.5 நாழிகைகள் = 2 முகூர்த்தம் = 1 சாமம்
60 நாழிகைகள் = 8 சாமம் = 2 பொழுதுகள் = 1 நாள்
15 நாள் = 1 பட்சம் = 0.5 மாதம்

1 மனித ஆயுள் வட்டம் = 120 வருடங்கள் = 2 வட்டங்கள் = 240 அயனங்கள் = 1440 மாதங்கள்

நல்ல ஜோதிடர்கள் யாரும் காசுக்கு ஆசைப்பட்டு ஜோதிடம் சொல்வதில்லை ஆனால் சில ஜோதிடர்கள் யாரும் கேட்காமலே இவர்களாகவே போய் எதையுமே எதிர்பாராமல் சிலருக்கு ஜோதிடம் சொல்வதுண்டு அப்படிப்பட்ட ஜோதிடர்கள் இப்போதெல்லாம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கிடைப்பதரிது. சிறு வயதிலே நான் குற்றாலம் சென்ற போது ஒரு குகையிலே ஒரு சாது தங்கி இருந்தார் , அவரை சிலர் சித்தர் என்றார்கள் சிலர் சாது என்றார்கள் ஏதோ ஒரு ஈர்ப்பிலே நானும் அங்கு சென்றேன் எல்லோரும் அவரிடம் கையைக் காண்பித்தார்கள் சிலருக்கு பலன்கள் சொன்னார் சிலருக்கு சொல்லவில்லை

என் முறை வரும் போது நானும் கையைக் காட்டினேன் அதைப் பார்த்துவிட்டு சரி கையை மூடிக்கொள் என்று சொல்லிவிட்டு இனி யாரிடமும் உன் உள்ளங்கையைக் காட்டாதே ஆனால் தின்பமும் காலையில் எழுந்தவுடன் உள்ளங்கைகள் இரண்டையும் ஒன்றாய் நேர்க்கோட்டிலே திறந்து ஒரு முறை பார்த்துவிட்டு உன் காரியங்கள் எதுவானாலும் தொடங்கு ஜெயம் நிச்சயம் , ஆனால் மறந்து போயும் உன் உள்ளங்கைகளை யாரிடமும் காட்டாதே என்று எச்சரித்தார் இன்று வரை கடைப்பிடிக்கிறேன், முதலில் உள்ளங்கைகளைப் பார்த்துவிட்டு அதன் பின் இறைவன் திருமுகத்தைப் பார்த்துவிட்டுத்தான் மறு காரியங்களைத் தொடர்கிறேன்

மனித உடலில் உள்ளதெல்லாம்கீழ்வருமாறு பகுக்கப்பட்டுள்ளன

மனித உடலிலே:   70 கிலோ கிராம் எடையுள்ள மனித உடல் உள்ள மூலப் பொருள்கள்:   1. ஆக்ஸிஜன் 43 கிலோ கிராம், 2. கார்பன் 16 கிலோ கிராம், 3. ஹைட்ரஜன் 7 கிலோ கிராம். 4. நைட்ரஜன் 1.8 கிலோ கிராம் ,5. கால்சியம் 1.0 கிலோ கிராம், 6. பாஸ்பரஸ் 780 கிராம் , 7. பொட்டாசியம் 140 கிராம் 8. சோடியம் 100 கிராம் ,9. குளோரின் 95 கிராம் ,10. மக்னீசியம் 19 கிராம் ,11. இரும்பு 4.2. கிராம் ,   12. ஃப்ளூரின் 2.6 கிராம் ,13. துத்தநாகம் 2.3 கிராம் ,14. சிலிக்கன் 1.0 கிராம் , 15. ருபீடியம் 0.68 கிராம் 16. ஸ்ட்ரோன்ட்டியம் 0.32 கிராம் 17. ப்ரோமின் 0.26 கிராம் , 18. ஈயம் 0.12 கிராம் ,19. தாமிரம் 72 மில்லி கிராம் ,20. அலுமினியம் 60 மில்லி கிராம் ,21. காட்மியம் 50 மில்லி கிராம் ,22. செரியம் 40 மில்லி கிராம் ,23. பேரியம் 22 மில்லி கிராம் ,24. அயோடின் 20 மில்லி கிராம் ,25. தகரம் 20 மில்லி கிராம் ,26. டைட்டானியம் 20 மில்லி கிராம் ,27. போரான் 18 மில்லி கிராம் 28. நிக்கல் 15 மில்லி கிராம் ,29. செனியம் 15 மில்லிகிராம் , 30. குரோமியம் 14 மில்லி கிராம் ,31. மக்னீசியம் 12 மில்லி கிராம் , 32. ஆர்சனிக் 7 மில்லி கிராம் ,33. லித்தியம் 7 மில்லி கிராம் ,34. செஸியம் 6 மில்லி கிராம்,35. பாதரசம் 6 மில்லி கிராம் ,36. ஜெர்மானியம் 5 மில்லி கிராம் 37. மாலிப்டினம் 5 மில்லி கிராம் ,38. கோபால்ட் 3 மில்லி கிராம் , 39 . ஆண்டிமணி 2 மில்லி கிராம் ,40. வெள்ளி 2 மில்லி கிராம் 41. நியோபியம் 1.5 மில்லி கிராம் 42.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஸிர்கோனியம் 1 மில்லி கிராம் 43. லத்தானியம் 0.8 மில்லி கிராம் ,44. கால்ஷியம் 0.7 மில்லி கிராம் 45. டெல்லூரியம் 0.7 மில்லி கிராம் 46. இட்ரீயம் 0.6 மில்லி கிராம் 47. பிஸ்மத் 0.5 மில்லி கிராம் 48. தால்வியம் 0.5 மில்லி கிராம் 49. இண்டியம் 0.4 மில்லி கிராம் 50. தங்கம் 0.4 மில்லி கிராம் 51. ஸ்காண்டியம் 0.2 மில்லி கிராம் 52. தண்தாளம் 0.2 மில்லி கிராம் 53. வாளடியம் 0.11 மில்லி கிராம் 54. தோரியம் 0.1 மில்லி கிராம் 55. யுரேனியம் 0.1 மில்லி கிராம் 56. சமாரியம் 50 மில்லி கிராம் 57. பெல்யம் 36 மில்லி கிராம் 58. டங்ஸ்டன் 20 மில்லி கிராம். எல்லாமே இருக்கிறது என்று விஞ்ஞானமே நிரூபித்திருக்கிறது.

ஆராய்ச்சியை ஏற்கெனவே விஞ்ஞானிகள் செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள் நம் வேலையே அதை எப்படி உபயோகப்படுத்தி நம் அறிவை மேம்படுத்திக் கொள்வது என்பதுதானே நாம் எழுதும் கட்டுரைக்கு வலு சேர்க்கவும் ஒரு ஆராய்ச்சி யை பகிரவும்தான் விக்கி பீடியாவிலே சென்று எடுத்து அதை இடுகிறேன் இதிலே நம் பெருமை ஒன்றுமில்லை

ஆகவே இந்த உலகிலே வாழும் அத்தனை ஜீவராசிகளுமே இறையால் இயற்கையால் படைக்கப்பட்ட உலோகங்களின் கூட்டுக் கலவையால் படைக்கப்பட்ட ரோபோக்களே.தானியங்கிக் கருவிகளே,

அப்படி இருக்க வேற்று கிரகங்களிலே ஒவ்வொரு கிரகத்திலேயும் பலவிதமான உலோகங்கள் இருக்கின்றனவே.ஒவ்வொரு ஆகர்ஷண சக்தி இருக்கிறதே.ஆகவேதான் யார் யாருக்கு எந்த உலோகம் அதிக சதவிகிதம் இருக்கிறதோ அதற்கேற்ப கிரகங்கள் அவர்களைக் கிரகித்து அதற்கேற்ற பலன்கள் வழங்குகின்றன.இதை உணர்ந்தால் நம் ஜாதகத்திலே இருக்கும் கிரகங்களின் நிலைக்கேற்ப நமக்கு பலன்கள் வருகின்றன என்பதை உணரலாம்.

ஆகவே ஜாதகம் உண்மையா பொய்யா என்று ஆராய வேண்டாம் நம் ஜாதகம் சரியானதுதானா என்று ஆராய்ந்தாலே [போதும் நம் ஜாதகத்தின் மூலமாகத்தான் இறை நம்மைக் கட்டுப்படுத்துகிறது என்று. நம் ஜாதகத்திலே நாம்வாழவிருக்கும் வாழ்க்கையின் அஸ்திவாரமாகிய ,அடித்தளம் செதுக்கப்பட்டிருக்கிறது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆகவே ஜாதகம்தான் நம் வாழ்க்கையின் அஸ்திவாரம் அடித்தளம், ஆனால் அடித்தளத்தை முறையாக அமைத்துக்கொள்ளாமல் அதாவது முறையாக சரியாக துல்லியமாக கணித்து வைத்துக் கொள்ளாமல் இருந்துவிட்டு ஜாதகம் ஜோதிடம் எல்லாம் பொய் என்று கூறுவதில் பயன் என்ன என்பதே என் கேள்வி

தென்னை மரத்தை வளர்த்தால் இளநீரையும் தேங்காயும் கொடுக்கும் என்பது பொதுவான கருத்து, ஆனால் வளர்க்கப்பட்ட அந்தத் தென்னை மரம் வளர்ந்திருக்கும் உயரத்துக்கு நாம் செல்லவேண்டும் தேங்காயோ இளநீரோ பறிக்க, அப்படி தென்னை மர உயரத்துக்கு நாம் போக வேண்டுமானால் நமக்கு அதற்கேற்ற ஒன்று ஏணிகளோ, அல்லது துறட்டுக் குச்சியோ போன்ற உபகரணங்கள் கொள்ள வேண்டும்.

அவைகளைக் கைக்கொள்ளாமல் தென்னை மரத்திலே தேங்காய் பறிக்க முடியவில்லை அதனால் தென்னை மரமே பொய்யென்று சொல்வது எப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியமோ அப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியம்தான் ஜாதகமும் ஜோதிடமும் இறையும் ஆன்மீகமும் பொய்யென்று கூறித் திரிவதும் என்பது என் கருத்து

நம்பி அதை நட்டு தண்ணீர் ஊற்றி வளர்த்து ஊட்டச் சத்துக்கள் போட்டு வளர்த்து ஆளாக்கியவருக்கு தெரியாதா எப்போது அதன் அதிக ஓலைகளைக் கழிக்க வேண்டும், அதன் பன்னாடை மட்டைகள் போன்றவற்றைக் கழித்து தென்னை மரத்தை இன்னும் ஆரோக்கியமாக வைக்க என்பதை அறிந்து வளர்த்தவர் தலையிலே என்றாவது அந்தத் தென்னை மரம் தேங்காயை போடுகிறதா கவனியுங்கள். போடாது.

தென்னையும் பிள்ளையும்

தென்னை மட்டைகளையும் போடாது. அப்படி தம்மை வளர்த்த மனிதர்களின் நலனைக் கருதி நுண்ணுணர்வோடு மரங்கள் கூட இருக்கிறதே. அப்படி வளர்த்த தென்னை மரமே வளர்த்தவர்களை நம்பி அவர்களுக்கு நன்மை செய்கிறதே தீமை செய்யாமலிருக்கிறதே அப்படி இருக்க பெற்று வளர்த்த பிள்ளைகள் பெற்றவர்களை நம்பாமல் இருக்கலாமா? தவறான பாதையிலே சென்று பெற்றவர்களையும் தலைகுனிய வைத்து தாமும் அழியலாமா என்று யோசிக்க வேண்டும் தலைமுறைகள். நம்மைப் பெற்றவர்களைத் தவிர நம் மேல்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உண்மையான அக்கறையை வேறு யார் காட்டுவார் என்பதை யோசிக்க வேண்டும் . கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று தலையை விரித்துப் போட்டுக்கொண்டு பேயாட்டம் ஆடிவிட்டு அதன் விளைவாக உடலையும் மனதையும் வாழ்க்கையையும் கெடுத்துக்கொண்டு அதன் பிறகு வருத்தப்பட்டு என்ன பயன் என்பதை இந்தக் காலத்து இளைஞர்கள் யுவதிகள் சிந்திக்க வேண்டும்.

அதற்காக பழைய பஞ்சாங்கமாய் ஜாதகம்ஜோதிடம் போன்றவைகளையே நம்பி வாழ்க்கையை நடத்துங்கள் என்று நான் சொல்லவில்லை. தற்போதைய காலத்திலே ஏற்பட்டிருக்கும் நவீன விஞ்ஞான வளர்ச்சியை நாமும் அனுசரித்தே ஆகவேண்டும் .விஞ்ஞானத்தை நம்பித்தான் ஆகவேண்டும் பலவிதமான ஆராய்ச்சிகள் செய்தே அறிவியளாளர்கள் பல செய்திகளை சொல்கிறார்கள், அதனால் விஞ்ஞானிகளை நம்பித்தான் ஆகவேண்டும்.அதற்காக நம் மெய்ஞ்ஞானிகளை தவஸ்ரேஷ்டர்களை நம்பக் கூடாது, அவர்கள் தம் தவ வலிமையால் கணித்த கிரகநிலைகள், ஜாதகம் ஜோதிடம் போன்ற அறிய கலைகளை நம்பக் கூடாது என்று நினைத்துக்கொண்டு ஏதோ அறை குறையாய்ப் படித்துவிட்டு தம்மையே மேதாவிகளாக நினைத்துக் கொண்டு உளரித் திரிவோரை நம்பி நம்முடைய பாரம்பரிய பல நுணுக்கங்களை நாம் நம்பாமல் இருந்து வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ளல் சரியல்ல என்பதை உணர்ந்தால் போதும்

அறுசுவை உணவு

அறுசுவையான உணவுக்கு உப்பு காரம் புளிப்பு. துவர்ப்பு இனிப்பு கசப்ப்பு போன்ற அனைத்து சுவைகளையும் சேர்க்க வேண்டிய அளவிலே சேர்க்கிறோமே விருந்தாய் உண்ண அதுபோல்தான் வாழ்க்கையிலும் விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் ஆன்மீகத்தையும் ஜோதிடம் போன்ற கணிதவியலையும் அனைத்தையுமே கலக்க வேண்டிய அளவிலே கலந்தே உபயோகித்து விருந்து உண்பது போன்ற சுவையான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே புத்திசாலித்தனம் என்கிறேன்

அதேபோல் நம் குழந்தைகளின் கணிப்புகள் தவறாகி அதஃன் விளைவாக அவர்கள் அவதிப்படும் போது நான் ஏற்கெனவே சொன்னேன் கேட்கவில்லை அவதிப்படட்டும் என்று சிந்திக்கும் பெற்றோர்களே மிகவும் தவறு உங்கள் எண்ணமும் செயலும். உங்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இளமைக் காலத்திலே நீங்களெல்லாம் தவறே செய்யவில்லையா என்பதை ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள்

நாம் வளர்த்த மரம் தன் கிளையை பக்கத்துவீட்டுப் பக்கம் படர்ந்து தன் கனியை பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு அளிக்கிறதே என்று அந்தக் கிளையை வெட்டிவிடலாம் என்றே நினைக்கும் தன்னலக்காரர்களே. அப்படி அந்தக் கிளையை வெட்டினால் அந்த மரமே பட்டுப் போகும் அபாயமும் உள்ளதே என்று யோசியுங்கள். அப்படித்தான் நம் பூர்வீக கலைகளை நாம் மதிக்காமல் அவற்றை வெட்டிவிட்டு நவீன விஞ்ஞான வழிகளை மட்டுமே நம்புதலும்.

அதேபோலத்தான் தவறோ சரியோ பிள்ளைகள் தாமாய் அமைத்துக் கொள்ளும் வாழ்க்கையை வெறுக்காமல் அவர்களையும் வெறுக்காமல் அவர்களுக்கு கடைசீ வரை பாதுகாப்பாய் காவலனாய் இருந்து அவர்களுக்கு கூடிய வரை ஆலோசனை சொல்லியே வாழுங்கள். . மூர்க்கத்தனமாய் பக்கத்து வீட்டிலே படர்ந்த கிளையை வெட்டுதல் போல் அவர்களைப் பிரிக்க நினைக்காதீர்கள். அது சரியல்ல அவர்கள் அமைதியாக வாழத் தேவையான வசதிகளைச் செய்து கொடுங்கள் அப்படி அவர்கள் அமைதியாய் வாழத் தலைப்பட்டாலே பிரிதல், விவாகரத்துக்கள், குறைப் ப்ரசவம் போன்றவைகளைத் தடுக்கலாம் என்பதை உணருங்கள்.

தலைவிதி

ஜோதிடம் ஜாதகம் எல்லாமே உண்மைதான் அதற்கும் மேலே தலைவிதி என்று ஒன்று உட்கார்ந்து ஆட்டிக் கொண்டிருக்கிறதே ஜீவராசிகளின் வாழ்க்கையை அதைப் போரிட்டு அடக்க முடியாதே என்பதையும் உணருங்கள்.

அதற்காக ஜாதகம் ஜோதிடம் எல்லாமே பொய்யென்று.விரக்தி அடையாதீர்கள் என்பதே நான் உணர்த்த விரும்பு கருத்து. அப்படி இல்லாமல் இரு தரப்பு பெற்றோரும் அவர்களை வெறுத்தால் அவர்களுக்கு மன அமைதி குன்றும். அதன் காரணமாக ப்ரதான மரமாகிய உங்கள் வம்சமும் வாரிசும் பட்டுப்போகும் அபாயமும் உள்ளது
அமைதி இல்லாத இல்லறம் பல வேண்டாத விளைவுகளை உருவாக்கும், அவர்கள் இருவரும் அமைதி இல்லாமல் பதட்டத்திலேயே

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வாழ்க்கையைத் தொடர்ந்தால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு மன ஊனமோ உடல் ஊனமோ இருக்கும் என்று விஞ்ஞானமே ஒப்புக் கொள்கிறது.

ஆகவே பிடிக்கிறதோ இல்லையோ சேர்ந்த தம்பதிகளைப் பிரிக்காமல் அவர்களை மகிழ்ச்சியுடன் வாழவிடுங்கள். அதுதான் அவர்களின் வாழ்க்கைக்கும் உங்கள் வருங்கால நிம்மதிக்கும் நல்லது

ப்ரசவம் என்பதிலே பல நுணுக்கங்கள் இருக்கின்றன . ஒரு தாயின் கர்பத்திலே வந்து சேர்ந்த ஒரு ஆத்மாவின் ப்ரபஞ்ச வருகை அது, ஒரு குழந்தை கருக்கொள்ளுதலும் ப்ரசவமும் அந்த ஆத்மாவின் பூர்வ ஜென்ம புண்ணிய பாவங்களை கணக்கில் கொண்டே ஏற்படுகின்றன.

இயற்கையான ப்ரசவமானாலும் செயற்கைப் ப்ரசவமானாலும், பிறக்கும் குழந்தைகளுக்கு கபாலத்திலே நடு மண்டையிலே ஒரு துளை இருக்கும் அது குழந்தை பிறக்கும் நேரத்துக்குள்ளாக மூடிக்கொள்ளும் என்பார்கள். உச்சந் தலையில் உள்ள அந்தத் துளைதான் உள்வாங்கி பிரபஞ்சத்திலிருந்து வரும் காந்த சக்திகள் கதிர்கள், அலைக் கற்றைகள் ஆகியவற்றை அதன் வழியேதான் மனித உடலுக்குள் உள்வாங்குகிறது.

.

மனதிலே இருக்கும் பதட்டம் உடலைத் தொற்றும் மூளையைத் தொற்றும் அதன் மூலமாக இந்திரியங்களைத் தொற்றும் இந்த்ரியங்களின் பதற்றம் உடலில் ஊடுருவி விந்தணுவையும் பாதிக்கும். உயிரையும் ஆத்மாவையும் தொற்றும் அதனால்தான் பெண்களின் அல்லது ஆண்களின் சம்மதம் அவசியம் சம்மதமில்லாத காதலும் காமமும் பிறவிகளை ஊனப்படுத்தும்

சம்மதமில்லாத செயல் பதட்டப்படுத்தும் பதட்டம் வியாதிகளை உருவாக்கும் கர்பம் வியாதி அல்ல ப்ரபஞ்ச விதி பரிணாம வளர்ச்சியின் தொடக்கம். அது பூர்வஜென்ம புண்ணியத்தின் பயனாய் விளைந்த அதிர்ஷ்டம் அதைப் பேணிக் காக்கவேண்டும். ஆகவேதான் பெரியோர்கள் இருவரின் மனதையும் உடலையும் சமனப்படுத்த முதல் இரவு என்று ஒன்றை ஏற்படுத்தி இது முறையானது நீங்கள் இருவரும் தகுதியானவர்கள், இது குற்றம் அல்ல என்று உணர்த்தி

தம்பதிகளின் பதட்டத்தை தணித்து அவர்களை இயல்பாக தாம்பத்யத்தை அனுபவிக்க அனுமதிக்கிறார்கள். எவ்வளவு பெரிய அறிவியல் இது! இந்த விஞ்ஞான அறிவியலை நமக்குள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மெய்ஞ்ஞானமாக ஏற்படுத்தி அதை ஜாதகம் ஜோதிடம் போன்றவைகளின் மூலமாக நமக்குள் ஏற்றி கணிதவியலையும் வான சாத்திரத்தையும் அதனுள்ளே புகுத்தி

மானிடர்களை மாக்கள் என்னும் நிலையிலிருந்து மக்களாக்கி மிருக வெறி என்னும் நிலையிலிருந்து இல்லறம் என்று ஆக்கி அந்த இல்லறத்தையும் நல்லறமாக்கி வெகு நுணுக்கமாக நாம் வாழ நல்ல விதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனரே நம் முன்னோர்கள் அவர்கள் அறியாத விஞ்ஞானமா மெய்ஞ்ஞானமா அறிவியலா வான சாத்திரமா கணிதவியலா என்று யோசித்தால் புலப்படும்

நம் முன்னோர்கள் எவ்வளவு நுணுக்கமான அறிவாளிகள் என்று. அப்படி அவர்களால் ஏற்படுத்தப்பட்ட நுணுக்கமான கலைகளை ஆராய்ந்து கற்கத் தவறிவிட்டு, அவைகளைப் பொய்யென்று பிதற்றித் திரிதல் எப்படி நியாயமாகும் என்பதே என் கேள்வி? ஆகவே ஜாதகம் ஜோதிடம் எல்லாம் பொய்யல்ல அதை முறையாகக் கற்கத் தவறிய நாமே பொய்யர்கள் என்பது புரிகிறதா?

பருவ ஈர்ப்பு

இளமைப் பருவத்திலே பருவ ஈர்ப்பை காதல் என்று நினைத்து ஏமாந்து காதலித்தவர்கள் 90 சதவிகிதத்தினர். எல்லோருக்கும் ஒரு காதல் நினைவு இருக்கும் ஆனால் அதெல்லாம் வாழ்க்கைக்கு ஒத்துவராது என்பதைப் புரிந்துகொண்டு வாழாமல் கிடைத்திருக்கும் வாழ்க்கையை முறையாக அனுபவிக்காமல் தவறவிட்டால் அதன் மூலமாக நாம் இழப்பது நிம்மதி ஆரோக்கியம் மனமகிழ்ச்சி எல்லாமேதான்

அப்படி இவைகளை இழக்கும்போது அதன் மூலமாக நாம் பெறப்போவது என்ன தெரியுமா தேவையில்லாத நோய்கள் குறைப் ப்ரசவம் ஊனமுள்ள குழந்தைகள் இவைகள்தானே , இப்படி நம் முன்னோர்கள் ஏற்படுத்திய வழிமுறைகளைப் பின்பற்றாமல் நாம் தவறு செய்துவிட்டு, உதாரணமாக திருமணத்துக்கு முன்பே சேர்ந்து வாழ்வது, காதலிக்கும் போதே கர்ப்பமாவது

திருமணம் ஆன பின்னரும் மன இணக்கம் இல்லாமல் ஏதோ கடமைக்கு வாழ்வது, ஏற்கெனவே காதலித்தவரை மனதிலே நினைத்துக்கொண்டு கணவனும் மனைவியும் தற்போதைய அனுமதிக்கப்பட்ட முறையான இல்லறத்தை முறையாக நடத்தாமலிருப்பது செய்துவிட்டு ஜாதகமும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜோதிடமும் பொய் என்று கூறுதல் எப்படி நியாயமாகும். அதனால்தான் குறையுள்ள குழந்தைகள் பிறப்பு அதிகரிக்கிறது.

குறையுள்ள குழந்தை பிறந்த பின் அந்தக் குழந்தைக்காக வருத்தப்பட்டு அதை வளர்க்கவும் முடியாமல் வளர்ந்து பெரியவரானால் என்ன நிலையோ என்று வருந்திக் காலம் கழிப்பதைக் காட்டிலும் விதைக்கும் போதே சரியான விதையாக நல்ல விதையாக நல்ல நேரம் காலம் பார்த்து இனிமையாக விதைத்தால் விளையும் செடியும் மகிழ்ச்சியே அளிக்கும் நல்ல விளைச்சலைக் கொடுக்கும் நல்ல விளைச்சல் நல்ல கனிகளைக் கொடுக்கும் அதுபோலத்தான் குழந்தையும் இல்லறத்தின் விளைவாக விதையாக மலரும் கரு குழந்தையாக உருவாகி திருவாகவேண்டும்.

இல்லறம்

இல்லறம் என்பது சிறக்க வேண்டுமென்றால் இல்லறத் துணைவியை ராணி போல் வைத்துக்கொள்ள வேண்டும் அப்படி வைத்துக்கொள்ளும் கணவரை எப்போது இல்லத்தரசி ராஜாவாக நினைக்காமல் சற்றே மட்டமாக நினைக்கிறாளோ மட்டமாக நடத்துகிறாளோ

அப்போது இதமாக அல்லது பதமாக அல்லது சற்றே கடுமையாகவேனும் அவளுக்கு அவள் நடத்தப்படும் மரியாதையான தன்மையையும் அதை மதிக்காமல் இப்படி நடந்துகொண்டால் அந்த மரியாதையை அவள் இழக்க நேரிடும் என்று உணர்த்தித்தான் ஆகவேண்டும் .

அதே போல் கணவரை மஹாராஜாவாக நடத்தும் மனைவியின் அருமை தெரியாமல் கணவர் அத்துமீறும் போதோ அல்லது அவளின் பெண்மைக்கோ மரியாதைக்கோ இழுக்கு நேரிடும் வகையில் கணவர் நடந்துகொண்டாலோ

மனைவியும் அந்தக் கணவரை மஹாராஜா போல் நடத்துவதை அவருக்கு உணர்த்தி அவர் அந்த மரியாதையை தவறாக பயன்படுத்தினால் அவர் மஹாராஜா என்னும் நிலையிலிருந்து சற்றே கீழே இறக்கப்படுவார் என்பதையும், அதையும் கவனிக்காமல் தொடர்ந்து தவறாக நடந்துகொண்டால் இதமாக அல்லது பதமாக அல்லது சற்றே கடுமையாக வேனும் அவருடைய மரியாதை குறையும் என்பதை அவருக்கு உணர்த்துவதிலேதான் இருக்கிறது.இல்லறம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அப்படிப்பட்ட நிலையிலே இருவருமேஅந்த மரியாதையை உணர்ந்து மாற்றிக் கொள்வதிலேதான் இனிமையான இல்லறம் என்னும் ரகசியம் அடங்கியிருக்கிறது.. இந்த நிலையைத்தான் பெற்றவர்களே ஆனாலும் அல்லது இவர்கள் பெற்ற குழந்தைகளே ஆனாலும் அவர்களிடத்திலும் கடைப்பிடித்தால் அனைத்துமே சுகமாக நலமாக அமையும்.

அப்படி ஒவ்வொரு கணமும் உன்னிப்பாக கவனித்து நடத்தாமல் தவற விட்டுவிட்டு அதன் பின்னர் மோசமான நிலையை உருவாக்கிக்கொண்டு அப்போது என்ன செய்வது எல்லாம் என் தலைவிதி என் ஜாதகக் கோளாறு என்றெல்லாம் புலம்புவதில் யாதொரு பயனும் இல்லை என்பதை உணருங்கள். ஜாதகத்திலோ விதியிலோ ப்ரச்சனையே இல்லாவிடினும் இப்படி சற்றே கவனமாக நடந்து கொள்ளாமல் இருப்போர் ஜாதகத்தையோ ஜோதிடத்தையோ குறை கூறிப் பயனில்லை.

ஏற்கெனவே ஜாதகத்திலோ ஜோதிடத்திலோ விதியிலோ இருக்கும் குறைபாடுகளைக் கூட களைந்து இனிமையாக வாழ்தல் என்பது இப்படி நடந்து கொள்வதிலேதான் இருக்கிறது. ஆக பரிகாரம் என்பதே நாம் நடந்து கொள்ளும் முறைதான் . மனதிலே இறை நம்பிக்கை, எந்தக் காரணம் கொண்டும் நேர்மை தவறாமை,, நிதானம் இழக்காமை அன்பு காட்டுதல் பாசம் காட்டுதல் காதலைக் காட்டுதல் கருணையைக் காட்டுதல் ஆகும்

எல்லாவற்றையும் முறையாகக் கடைப்பிடித்துவிட்டு அப்படிக் காட்டும் அன்பு பாசம் நேசம் காதல் கருணை எல்லாவற்றையும் காட்டினாலும் அவற்றைத் தவறாக பயன்படுத்த முனைந்தால்அன்பே அதிகாரமாக மாறும் எல்லாமே மாறிவிடும் என்னும் சூக்ஷுமத்தையும் சேர்த்தே ஊட்டுங்கள் உணர்த்துங்கள் உங்களைச் சுற்றி இருப்போர் யாராயினும் அதுதான் மிக முக்கியமான பரிகாரம் வாழ்க்கையை சிறப்பாக வாழ.

பதட்டமும் குறையுள்ள குழந்தையும்

இல்லறம் அமைதியாக பதட்டம் இல்லாமல் இருந்தாலே அது ஒரு வரம். அப்படியில்லாமல் பதட்டம் நிறைந்த சூழ்நிலையினால் இயல்பு வாழ்க்கை கெடும்போது அதன் பாதிப்பும் தாக்கமும் இல்லறத் துணைவர்களிடையே பதிந்து அது பதட்டமாக மாறி அவர்களின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வாரிசுகளுக்கும் தொற்றும் நோயாக மாறுதல்தான் யதார்த்தம். கர்பகாலத்திலே பெண்கள் எவ்வளவுக்கவ்வளவு அமைதியாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களின் ப்ரசவம் எளிதாக அமையும். அப்படியில்லாமல் மாறாக ப்ரசவத்திலே கோளாறு ஏற்படினும் அப்போதும் பதறாமல் அதற்கு என்ன தீர்வோ அதைக் காண யோசித்தலே நன்று

இயற்கையான ப்ரசவமானாலும் செயற்கைப் ப்ரசவமானாலும், பிறக்கும் குழந்தைகளுக்கு கபாலத்திலே நடு மண்டையிலே ஒரு துளை இருக்கும் அது குழந்தை பிறக்கும் நேரத்துக்குள்ளாக மூடிக்கொள்ளும் என்பார்கள். உச்சந் தலையில் உள்ள அந்தத் துளைதான் உள்வாங்கி பிரபஞ்சத்திலிருந்து வரும் காந்த சக்திகள் கதிர்கள், அலைக் கற்றைகள் ஆகியவற்றை அதன் வழியேதான் மனித உடலுக்குள் உள்வாங்குகிறது. என்று சொன்னேன்

அதனால்தான் அதீத காய்ச்சல் அல்லது அதீத கழித்தல் போன்ற ஏதேனும் காரணத்தால் டிஹைட்ரேஷன் ஆன குழந்தைகளை வைத்தியர்கள் நடு மண்டயிலே இருக்கும் அந்த மூடிய பகுதியை தொட்டுப் பார்ப்பார்கள் அது சற்றே நெகிழ்வாக இருக்கும் அந்தப் பகுதி உள்வாங்கிவிட்டால் குழந்தைக்கு உடம்பிலே பிராண சக்தி உயிரின் ஆதார சக்தி குறைந்துவிட்டது என்றுணர்ந்து பிராணவாயுவையும் நீர் குறைந்து விட்டது என்று உணர்ந்து விஷயம் தெரிந்த மருத்துவர்கள் உடனடியாக குளூகோஸ் ஏற்றுவார்கள். பொதுவாக அழுத பிள்ளை பால்குடிக்கும் என்பார்களே அதற்கு பொருளே அழாமல் அல்லது வீறிட்டு அழமுடியாமல் தொண்டையிலே கருவறையிலே இருந்த திரவம் அடைத்துக் கொண்டிருந்தால் மூச்சுத் திணறி குழந்தை இறந்து போகும் என்னும் பொருளிலேதான் சொன்னார்கள்

அப்படி அழுது அது மூச்சு விட ஆரம்பித்த பின்னர்தான் நிச்சயமாக அந்தக் குழந்தை உயிரோடு இருக்குமா இருக்காதா என்றே கணிப்பார்கள் .

கபாலம் தான் முதல் வெளிப்பாடு

மருத்துவர்கள் . முனிவர்களும் சித்தர்களும் கபால மோக்ஷத்தையே விரும்புவார்கள். இந்த அடிப்படையிலேதான் நானும் தலை வெளியே வரும் நேரம்தான் குழந்தை பிறக்கும் நேரமாக கணிக்கப்படுகிறது என்கிறேன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கபாலத் துளைதான் இந்தப் ப்ரபஞ்சத்துக்கு முதலில் காட்சி அளிக்கிறது அல்லவா அதனால்தான் அதுதான் மிகச்சரியான ஜனன நேரமாக கொள்ள வேண்டும் என்று சொல்கிறேன்.

கரு உருவாகும் நேரத்தை சரியாக நம்மால் கணிக்க இயலாமையால்தான் அக்குழந்தையானது இப்பிரபஞ்சத்தை வெளியில் தொடும் பிறப்பு நேரத்தையே ஜெனனநேரமாக கொண்டு சாதகம் கணிக்கப்படுகிறது.

நான் கேள்விப்பட்ட வரையிலே சூரியன் புறப்பட்டு சுமார் எட்டு நிமிடங்களுக்கு பிறகே சூரியக் கதிர் பூமியை அடைகிறது குழந்தை பிறந்த நேரத்திலிருந்து பத்து நிமிடத்துக்கு முன் சூரியனிலிருந்து புறப்பட்ட கதிர்கள் தான் அக் குழந்தையை அடைகிறது என்று கணிக்கிறார்கள் என்று சொல்வார்கள்.

ஆனாலும் குழந்தை பிறந்த நேரத்திலிருந்து சுமார் 15 நிமிடத்துக்கு முன்பாக இருக்கும் நேரத்தையே குழந்தை பிறந்த நேரமாகக் கணிக்கிறார்கள். இந்தக் கணிப்பிலேயே எட்டு நிமிடம், பத்து நிமிடம், பதினைந்து நிமிடம் என்று கணக்கு வேறு படுகிறது அப்படி இருக்க கருவான நேரத்தைக் கணிப்பது அவ்வளவு எளிதான செயலா என்னும் திகைப்பிலிருக்கிறேன் அப்படிக் கருவான நேரத்தை சரியாகக் கணிக்க வழிகள் கிடைத்தால் எல்லோருமே தெரிந்து கொள்ளலாம் பயனடையலாம். நம் முன்னோர்கள் வெறும் கண்ணால் பார்த்தே வானவியலைக் கணித்தார்கள் அதெல்லாம் சரி நமக்கு அதாவது இந்த தலைமுறைக்கு சொந்தமாகவும் ஞானம் இல்லை சொல்லிக்கொடுத்தாலும் கற்பதில்லை புரிவதுமில்லையே அப்படி இருக்க அவர்களின் ஞானத்தை ஆராய்ந்து அதை முறையாகக் கற்றால்தானே நீங்கள் சொல்வது சாத்தியமாகும் என்பதே என் கருத்து அதுதான் என் திகைப்பு

துல்லியமான கரு உருவாகும் நேரக் கணிப்பு

ஆனால் இவை இயலாத காரியமாகும்.யாராலும் கரு உருவாகும் நேரத்தை துல்லியமாக கண்டறிய முடியாது.இது படைப்பின் இரகசியமாகும்.நான் பதிவின் ஆரம்பித்திலே கூறியதுபோல .ஒவ்வொறு பிறப்பும் குறிப்பிட்ட காரணத்திற்காக ஒரு குறிப்பிட்ட நேரம் ,இடம் மற்றும் பெற்றோரை தேர்ந்தெடுத்தே பிறப்பு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எடுக்கிறது.குழந்தையானது கருவாகி வளர ஆரம்பிக்கும்போது பிரபஞ்ச கதிர்களின் தாக்கம் அக்குழந்தைக்கு கிடைத்துவிடுகிறது. ஆகவேதான் ஜன்னகாலத்தை குழந்தையின் தலை வெளியே வரும் நேரத்தையே குறித்துக்கொண்டு ஜாதகம் கணிக்க இயலும் என்று. அதனால்தான் சீர்ஷோதயம் என்னும் படியாக ஜனனத்தின்போது குழந்தையின் தலை தென்படும் நேரமே ஜனன காலமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

கருவுற்ற நேரத்தை கணிக்கமுடியும் ஆனால் அதற்கேற்ற வல்லுனர்கள் இருந்தால்தான் முடியும் கருவுற்ற நேரத்தை கணிக்கும் கணிதம் தெரிந்தோர் யாரும் இல்லை ஜனன நேரத்தின் அடிப்படையிலேயே கணிக்கப்படுகிறது அதில் ஜனன நேரத்தை சுத்தபடுத்தி சிரோதயம் பூ ஸ்பரிச நேரம் என கணக்கீடு செய்வது உண்டு ஆனால் சிரோதயம் ஆனதுமே (இயல்பான ஜனனமானால்) குழந்தை வெளிக்காற்றை சுவாசிக்க ஆரம்பித்து விடுவதால் அந்த சிரோதய காலமே சரியான ஜனன நேரம் ஆகும் ஆனால் அறுவை சிகிச்சை மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு ஜனன நேரம் ஸ்புடம் செய்வது கொஞ்சம் சிரமமே மருத்துவர்களால் அளிக்கும் நேரம் வித்யாசம் கூடுதலாகவே இருக்கும் அதையும் சூர்யோதய நேரப்படி நாழிகையாக மாற்றி லக்ன ஸ்புடம் செய்யும் போது 75 சதவீதம் ஜனன நேரத்தை நிர்ணயம் செய்ய இயலும் மேலும் கணிப்பொறி மூலமாக. கணிக்க பெறும் ஜாதகங்கள் வாக்கியம் திருக்கணிதம் என இரு வகை பஞ்சாங்கங்கள் அடிப்படையில் கணிதம் செய்யும் குழப்பமாக உள்ளது அதனால்தான் எண் சாண் உடலுக்கு சிரசே ப்ரதானம் என்கிறார்கள் இந்த சிரசோதயம்தானே ஒரு ஜனனத்துக்கு ப்ரதானமாகிறது
தற்போதைய நிலையில் பெண்கள் கரு உருவாவதில் மாதவிலக்கின் சீரான நிலை தம்பதிகளின் இணைவு காலம் இவை சரியான சுழற்ச்சியில் இல்லாததால் கருவுற்ற காலத்தை எளிதில் நிர்ணயம் செய்வது இயலாது தற்காலப் பெண்களுக்கு மனோ திடமும் சரியாக இல்லை அதோடு ஆண்களும் பெண்களும் பெரியவர்கள் கூட கண்ட கண்ட உயர்தர உனவகங்களீலே முதல் இரவை நடத்துகிறார்கள் நல்ல நேரத்தை மதிக்கத் தவறுகிறார்கள், சித்தம் போக்கு சிவன் போக்கென்று பெரியவர்களை மதிக்காமல் தாந்தோன்றித்தனமாக செயல் படுகிறார்கள்

ஆனால் ஜாதகத்தை முறையாக ஆராய்ந்தால் ஜாதகரின் 12ம் வீட்டை ஆராயந்தால் அது சீர்ஷோதய ராசியா பிருஷ்டோதய ராசியா என்று உணரலாம் சீர்ஷோதய ராசியானால் மறு பிறவி நன்றாக அமையும் பிருஷ்டோதய ராசியானால் இந்தப் பிறவியிலே அடைந்த இன்பங்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எதையுமே அடுத்த பிறவியிலே அடையமுடியாது. ஆனால் அதற்காக அவரின் அடுத்த பிறவியை தடுக்கவோ மாற்றவோ முடியாது என்கிறது ஜோதிடசாத்திரம்

மேஷம், மிதுனம், சிம்மம்,கன்யா துலாம்,கும்பம் இவை சீர்ஷோதைய ராசிகள்
ரிஷபம்,கடகம்.விருச்சிகம், தனுசு ,மகரம் ஆகியவை பிருஷ்டோதய ராசிகள், மீன ராசி மட்டுமே சீர்ஷோதையமும் பிரிஷ்டோதையமும் கலந்து பிறக்கிறது ,

உள்ளுணர்வுகள்

நமக்கு பல நேரங்களில் இறைவன் அருளால் Intuition எனும் உள்ளுணர்வு வருகிறது ஆனால் அது Intuition ஆ அல்லது Illusion ஆ என்றே தெரியாமல் நம் அஞ்ஞானத்தினால் நாம் தடுமாறுகிறோம் இறைவனை முழுமையாக நம்பாத காரணத்தால்

Delusion,Hallucination Phantasm,Phantom, Mirage என்றெல்லாம் பல வடிவங்கள் கொண்டிருக்கும் " Illusion" நம்மைக் குழப்பி விடுகிறதே அதைத்தான் நான் விதி என்று சொல்கிறேன். நல்ல சிந்தனை வந்தாலும் அதை நிறைவேற்ற முடியாமல் நம்மைத் தடுமாற வைத்து நம்மைக் குழப்பி தவறான அணுகு முறையைக் கொடுத்து நம்மைப் பின்னுக்குத் தள்ளி அவதிப்பட வைக்கிறதே அதைத்தான் நான் கொடும் விதி என்று சொல்கிறேன்.
இறைவன் அருள் முழுமையாக இருந்தால்தான் நமக்குத் தோன்றும் Intuition ஐ நாம் நம்பி செயல்பட முடியும் என்கிறேன்
வானசாத்திரங்களும் கணிதங்களும்தான் ஜாதகம் ஜோதிடம் எல்லாமே ஆனால் அதைச் சொன்னால் விஞ்ஞானம் ,கணிதம் வானசாத்திரம் ஆகியவைகளின் பரிச்சியமில்லாத மக்கள் குழம்பிவிடுவார்களே என்றுதான்

அவற்றை ஜோதிடம் ஜாதகம் கைரேகை போன்ற பலவிதமாக சொல்லி நம்மை நம்ப வைத்தார்கள் என்பதே என் கருத்து . எப்போதுமே நம் முன்னோர்கள் பெரும்பான்மை மக்களின் அறியாமையைத் துடைக்க விஞ்ஞானத்தையே ஆன்மீகம் என்று சொல்லி வைத்தார்கள். ஆன்மீகம் தான் மெய்ஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் தான் விஞ்ஞானம் என்றே

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தொடக்க காலம் முதல் நான் எழுதி வருகிறேன் என் அடிப்படையே விஞ்ஞானம்தான் மெய்ஞ்ஞானம் என்பதே

அதனால்தான் விஷயம் தெரிந்த பெரியோர்கள் எது நடந்தாலும் “ஈஸ்வரோ ரக்ஷது”என்கிறார்கள். ஆகவே நாமும் முழுப்பாரத்தையும் இறைவன் மேல் போட்டுவிட்டு நமக்கு எதன் மேல் நம்பிக்கை இருக்கிறதோ அதைப் பின்பற்றி வாழ்ந்துவிட்டு செல்லவேண்டும் அவ்வளவே..

ஆனாலும் மனித மனம் ஞானத்திலே முழுமை அடையாத காரணத்தால் அங்கும் இங்குமாய் அதாவது ஆன்மீகத்துக்கும் நாத்திகத்துக்கும் இடையே மாறி மாறி ஊஞ்சல் ஆடிக் கொண்டிருக்கிறது இரண்டிலுமே நிலையில்லாமல் வாழும் அற்ப மானுடர்கள் நாம் ,ஆதலினால் நம்மால் இதுதான் சரி இதுதான் தவறு என்று அறுதியிட்டு உறுதியாக வாழ முடியவே முடியாது. ஆனாலும் ஓரளவுக்கு பெரிய்வர்கள் ஞானிகள் ,தீர்க்கதரிசிகள் அநுபவப்பட்டு சொன்னதையெல்லாம் மனதிலே கொண்டுதான் வாழ்ந்து தீர வேண்டும் அதுதான் சரியான வழி என்றே தோன்றுகிறது.

ஜாதகம் மிகத் துல்லியமான முறையில் கணிக்கப் பட்டதாக இருந்தால் மிகச்சரியான பலனை எதிர்பார்க்கலாம் ஜோதிடரிடம் .அதுவும் அந்த ஜோதிடர் முறையாகக் கற்றவராயிருந்தால் தான் பலன் முறையாக கிடைக்கும். நாடி ஜோதிடம் அகஸ்தியர், சுகர் மற்றும் சில ஆதி முனிவர்கள் தங்கள் *Intuition* மூலம் எதிர்காலத்தில் ஒவ்வொருத்தரின் பிறப்பு, இறப்பு, கர்ம வினைகளை பற்றி எழுதியது. இது தவிர கைரேகை, ஹோரை (கால நேரம்), யக்ஷினி தேவதைகளின் உதவியுடன் பிரசன்னம் என்று பல முறைகள் உள்ளன. ஆனால் சரியாகக் கணிக்கப்பட்ட ஜாதகமே துல்லியமானது. அதைத்தான் நானும் வலியுறுத்துகிறேன் அடிப்படையில் சரியாக கணிக்கப்படாத ஜாதகத்தை வைத்துக்கொண்டு ஜோதிடர் சொல்வது பலிக்கவில்லை அதனால் ஜோதிடம் பொய்யென்று கூறாதீர்கள் முதலில் உங்கள் ஜாதகம் துல்லியமாக கணிக்கப்பட்டது தானா என்று சோதியுங்கள் என்கிறேன்.

ஜோதிடம் மெய்ப்பிப்பது எப்படி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜோதிடம் பல நேரங்களில் மெய்ப்பது ஏன் எப்படி அல்லது மெய்ப்பிக்கப்படுகிறது! என்று பார்ப்போமா? வேறெதாலுமே தீர்க்கமுடியவில்லை எனும் நிலை வரும்போதுதானே ஜோதிடரிடம் வருகின்றார்கள்

ஒரு பெண்ணைத் திருமணம் செய்துவைக்க முடியாமல் பணம் இல்லாமையினால் அவதிப்படுவோர் பணம் கிடைத்துவிட்டால் திருமணத்தை நடத்திவிட முடியும். அல்லது பணத்தை பெரிதாக நினைக்காத ஒரு நல்ல குடும்பம் முன்வந்தால் திருமணத்தை நடத்தி வைத்துவிட முடியும்.

ஆனால் கோடி கோடியாகப் பணம் இருந்தாலும் ஒன்று ஜாதகம் சேராத காரணத்தாலோ அல்லது வேறு ஏதோ ஒரு காரணத்தாலோ என்ன காரணம் என்றுகூடத் தெரியாத நிலையிலே திகைத்துப் போய் பெரும் பணக்காரர்களும் ஜாதகத்தை எடுத்துக்கொண்டு அலைவதைப் பார்த்திருக்கிறேன்.

அதைக் கூட அந்தப் பெண்ணுக்கு சரியில்லாத கிரக நிலைகள் ஒருகுறிப்பிட்ட காலம் வரையில் திருமணத்தை தடுக்கிறதே அந்தக் காலம் முடியும் போதுதான் ஒரு ஜோதிடரையே பார்க்க யோசனை புத்தியிலே எட்டும்.

ஆகவே என்ன காரணம் ப்ரச்சனைக்கு என்றே தெரியாமல் கஷ்டப்படுவதைவிட நம்மால் இயன்ற வழிகளை கடைப்பிடித்து தீர்வு காணுவதே புத்திசாலித்தனம் அல்லவா? இது குறித்த ஒரு கேள்விப்பட்ட ரகசியம் சொல்கிறேன் நம் விதிப்படி நாம் அனுபவிக்க வேண்டிய கஷ்டங்கள் தீரும் நிலை வரும்போதுதான் யார் மூலாமாவது ஒரு ஜோதிடரைப் பார்க்கும் படி அறிவுறுத்த ப்படுவோம் .
அது வரையில் நமக்கும் தோன்றாது, அடுத்தவர் மூலமாகவும் அறிவுறுத்தப்படமாட்டாது விதி வலியது ஜோதிடரையும் பார்க்கவிடாமல் நம்மைத் தடுக்கும் மீண்டும் ஒரு சரியான நேரம் அமைந்து ஜோதிடரைப் பார்க்க வேண்டிய வேளை கைகூடினால்தான் அவரையே நம்மால் பார்க்க முடியும் .

அப்போது அவர் கூறுவார் இவ்வளவு நாட்களாக அவதிப்பட வேண்டிய நேரம் இந்தக் குறிப்பிட்ட காலம் அதனால்தான் அவருக்கு பரிகாரம் கிடைக்கவில்லை என்றும் இன்னமும் மீதம் எவ்வளவு காலம் இருக்கிறது அந்த நிலை மாற என்றும் அவர் சொல்வார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

புலிகளும் மான்களும்

" புலிகளின் கண்ணுக்கு மான்கள் தெரிவது போல் மான்களின் கண்ணுக்கு புலிகள் தெரிவதில்லை ஆனால் கண்களுக்கு தெரியாவிடினும் நுண்ணுணர்வாக புலன்களுக்கு தெரிகிறது ஆனால் அந்த நுண்ணுர்வு புரிவதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம் அதாவது அந்தக் கண நேரத்தின் சக்தி அந்த மான்களின் அறிவுக் கண்ணை மறைத்துவிடுவதால் ஆபத்தில் மாட்டிக்கொள்கின்றன மான்கள். இதைத்தான் விதி என்கிறோம், "

அப்படி மிகத் துல்லியமாக ஒரு கணநேரத்துக்கு முன்பாக நுண்ணுணர்வை அறியும் மான்கள் தப்பித்துவிடுகின்றன இதைத்தான் இறையருள் என்கிறோம்

ஜோதிடர் ஜாதகரின் ஜாதகத்தை அதாவது அவர் கொடுத்த ஜாதகத்தை அவருடையதுதான் என்று நம்பியே முறையாக எழுதப்பட்டதுதான் என்று நம்பியே ஜாதகத்தில் இருக்கும் ராசி நவாம்ச கட்டங்களைப் பார்த்து அதிலே இருக்கும் கிரகங்களின் நிலையை இருப்பு ஸ்தானத்தை பார்த்து அது உச்சத்தில் இருக்கிறதா நீசத்தில் இருக்கிறதா

அல்லது ஐந்தாமிடத்திலிருந்து ஏழாம் இடமாகிய களத்திர ஸ்தானத்தை பார்க்கிறதா என்றெல்லாம் கணித்தே சொல்வார்கள். செவ்வாய் தோஷமிருக்கிறதா குருபார்வை எப்போது கிடைக்கும் என்றெல்லாம் சொல்வார்கள் இப்படி கிரக நிலைகளை நுணுக்கமாக ஆராய்ந்து சொல்லும் ஜோதிட விற்பன்னர்களின் கண்களையும் மறைக்கும் பல செய்திகள் ஜாதகத்திலே உண்டு. அப்படி ஜோதிடரின் கண்ணை மறைத்து அதனால் அவர் சொல்லும் ஜோதிடமும் பரிகாரங்களும் கூட தவறாகப் போகும் அபாயம் உ:ள்ளதே இதைத்தான் விதி என்கிறோம்

அப்படி அல்லாமல் மிகச் சாதாரணமான பந்தா ஆர்ப்பாட்டம் எதுவுமில்லாத ஜோதிடர்கள் கூட இந்தக் கணநேர மயக்கத்திலோ கண் மறைக்கும் விதியோ குறுக்கிடாமல் மிகச்சரியாக துல்லியமாக கணித்து சொல்லும் மிக எளிதான பரிகாரம் கூட நல்லதை செய்யும் சக்தி பெற்றுவிடுகிறதே இதைத்தான் இறையருள் என்று சொல்கிறோம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆகவே நமக்கு மிகச்சரியான துல்லியமான நேரத்திலே விழிப்புணர்வைக் கொடுத்து நம்மைக் காக்கக் கூடியவன் இறைவன் மட்டுமே. அந்த இறைவன் நம்மைக் கைவிட்டால் அல்லது நாம் அவனைக் கைவிட்டால் நாம் வெறும் இரைதான். ஆனால் அந்த இறையைக் கைவிடாமல் தொழுது வருவதால் இரை என்னும் நிலையிலிருந்து நாம் மேன்மைப்பட்டு இறையுடன் கலந்து ஆபத்துக்களுக்கு இரையாகாமல் தப்பித்து இறையை அடையலாம் .

"புல்லாகி, பூண்டாகி, புழுவாகி, மரமாகி
பல்விருகமாகி பறவையாய், பாம்பாய்
கல்லாய்,மனிதராய், பேயாய், கணங்களாய்
வல் அசுரராகி செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள் எல்லா பிறப்பும்
பிறந்து இளைத்தேன்"

என்கிறார் திருவாசகத்திலேதிரு மாணிக்கவாசகர். பரிணாம தத்துவத்தை . "   இப்போதைய டார்வின் தத்துவத்தையும் சேர்த்து, அப்போதே சொல்லிவிட்டார் திரு மாணிக்கவாசகர்

ஆனாலும் நாம் டார்வின் சொன்னால் தானே நம்புவோம் ! எப்போது நம் இதிகாச புராணங்களையும் வேதங்களையும் நாம் முறையாக ஆராய்ச்சி செய்து அதிலுள்ள நுணுக்கங்களை மதித்து அறிகிறோமோ அப்போதுதான் அந்நியநாட்டினரின் மோகம் ஒழிந்து நம் நாட்டு முன்னோர்களை மதிக்கக் கற்போம் என்பதை உணருங்கள்

சிவமும் சீவனும்

ஜீவன்கள் சிவனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டால் போதும். இந்தப் பிறவிக்கு பயன் உண்டாகும். உடம்பும், உயிரும் இருக்கும் போதே, தெய்வத்தை உணர்ந்து விட்டால் சிவமாகி விடலாம்

நாம் எங்கிருந்து வந்தோம் என்பதும், எங்கு செல்லப் போகிறோம் என்பதும் நமக்குத் தெரியாது. பிறவிப்பணியில் மாட்டிக் கொண்டு விட்டோம். நாம் நம்மை அதாவது தன்னை உணர்ந்து ஞானம் பெற வேண்டும். இறைவனின் திருவடிகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டால், நமக்கு குறையொன்றுமில்லை. என்கிறார் மாணிக்க

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வாசகர்

நாம் புல்லாகவோ பூண்டாகவோ புழுவாகவோ எதுவாக பிறக்க வேண்டும் என்று முடிவாகும் அந்த ஒரு கணம்தான் நம் பிறப்பை முடிவு செய்கிறது. அந்தக் கணத்தை முடிவு செய்வது இறை. இந்தக் கணத்தை கரணம் தப்பினால் மரணம் என்பார்கள். கழைக்கூத்தாடி அந்தரத்திலே கரணம் அடிக்கும் போது அதற்குரிய நேர அளவு மிக முக்கியம்

அந்த நேரத்திலே ஒரு கணம் தப்பினாலும் கரணமும் தப்பும் அதுவே மரணத்துக்கு காரணமாகும் . இந்தக் கண நேரத்தைத்தான் ஜோதிட வல்லுனர்கள் மிகச்சரியாகக் குறித்து பரிகாரமாக சொல்கிறார்கள். அப்படி பரிகாரம் செய்யும் போது நம் சிந்தையில் மிகச்சரியான துல்லியமான நுண்ணுணர்வு ஏற்பட்டு நாமும் தப்பிக்கிறோம் .

ஆனாலும் தனித் தனி ஆத்மாக்களின் தனித் தனி விதி என்று ஒன்று இருக்கிறதே அது எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவாக செயல்படாது. அதனால்தான் பரிகாரம் செய்தாலும் அதனால் பெரும்பயன் சிலருக்கு கிடைப்பதில்லை , சிலருக்கு கிடைக்கிறது, அதனால் பரிகாரம் செய்வதெல்லாம் வீண் என்று எண்ணக் கூடாது

ஏனென்றால் பரிகாரம் செய்வதால் தப்பிக்கும் மான் போன்றவரா நாம் அல்லது பரிகாரம் செய்தாலும் தப்பிக்க முடியாத மான் போன்றவரா நாம் என்று நம்மால் கடைசீவரை உணர முடிவதே இல்லை

இதுதான் மானிட வாழ்க்கையின் பெரும் தோல்வி, இந்தத் தோல்வியை பெரியவர்களிடம் ஆலோசனை கேட்பதோ அவர்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு இறையைத் தொழுது நம் வல் வினைகளைக் களைந்து கொள்வதே நம் புத்திசாலித்தனம்

நுண்ணுணர்வுகள்

நீங்கள் மனதுக்குள் சிரிப்பது என் நுண்ணுணர்விலே தெரிகிறது. அப்படித் தப்பிக்காவிடினும் புலியின் வாயிலே அகப்பட்டு அந்த ஆத்மா இறையைத்தானே அடைகிறது என்று நீங்கள் நினைப்பது புரிகிறது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆனாலும் ஒரு ஆத்மா இயல்பான முடிவான இயற்கை மரணத்தை அடைந்து இறையை அடைவதற்கும் ஆபத்திலே மாட்டிக்கொண்டோ விபத்திலே சிக்கியோ , அல்லது தற்கொலைக்கு முயன்றோ தம் இன்னுயிரை விட்டால் அந்த ஆத்மா குறிப்பிட்ட காலத்துக்கு வாழவேண்டும் என்னும் இயற்கையான விதியை உடைத்துக்கொண்டு வேறு பாதையிலே சென்று இந்த உடலை விட்டு நீங்குவதால்

அந்தக் குறிப்பிட்ட காலம் வரையில் அந்த ஆத்மா காத்திருந்தே மீண்டும் இறையை அடைய முடிகிறது என்று ஆன்மீக வாதிகள் சொல்லுகிறார்கள், அப்படிப்பட்ட ஆத்மாக்களைத்தான் உடலில்லாத ஆத்மா என்றும் அசரீரீ என்றும் சொல்கிறார்கள்,
அசரீரியாய் இந்த ப்ரபஞ்சத்திலே இருப்பது மிகவும் கொடுமையானதல்லவா

நாமும் எதையும் தொடும் உணர்வை அடைய முடியாது நம்மை யாரேனும் தொட முயன்றாலும் முடியாது, இயற்கையாக உண்பதும் உடுத்துவதும் உறங்குவதும் போன்ற எந்த இயல்பான நிலையையும் நாம் அடைய முடியாது அல்லவா?

ஆகவே இப்படிப்பட்ட விதிகளை ஏற்படுத்துவது இறைதானே தவிர நாமல்ல, ஆனால் இறையைக் கேட்டல் அந்த இறை சொல்கிறது இது நான் ஏற்படுத்திய விதியல்ல பூர்வ ஜென்மத்திலே நீங்கள் நடந்து கொண்ட விதத்தின் பலன் ,

இயற்கையாய் நிகழவேண்டிய இந்த மானுட உடலைவிட்டு நீங்கி விரஜா நதியில் அருகிலே கைகொடுத்து அழைத்துச் செல்லக் காத்திருக்கும் திருமோகூர் காளமேகப் பெருமானின் கரம் பற்றி இறையை அடைந்து எல்லா ஆத்மாக்களும் ஏங்கிக் கொண்டிருக்கும் ஒரு அருமையான இறை சந்திப்பை தவற விட்டு அசரீரியாக அலையும் ஆத்மாக்களுடன் கரம் கோர்த்து திரியவா பிறப்பெடுத்தோம்.சற்றே யோசியுங்கள்

நீங்களே யோசித்து நல் வாழ்க்கை வாழ்ந்து நியாயமாக நேர்மையாக இறைபக்தியுடன் வாழ்ந்து நல் ஆன்ம சக்தியோடு மகிழ்வாக இறையை அடையவேண்டுமானால் இயல்பான முடிவை நாம் எட்ட வேண்டும் அல்லவா . அதற்கு தேவையான நல்லுபதேசங்களை பெரியவர்கள் மூலமாக அறிந்து நம் ஜாதகத்திலே இருக்கும் கோளாறுகளைக் களைந்து பரிகாரங்கள் செய்து நம்மை நம் ஆன்மாவை சுத்தப்படுத்திக் கொண்டுதானே இறையை அடைய வேண்டும்

ஆகவே தான் என் கையில் ஒன்றுமில்லை உங்கள் விதியை நீங்களேதான் எழுதிக்கொள்கிறீர்கள் என்று உணர்த்துகிறது இறை. தன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இரு கைகளையுமே அபய ஹஸ்தமாக விரித்து

நம் நடத்தையின் பலன்

ஆக நாம் ஒவ்வொரு பிறவியிலும் நடந்து கொள்ளும் முறையே நம் அடுத்த ஜென்மத்தின் விதியை எழுதும் எழுது கோல், அப்படி பூர்வ ஜென்மத்திலே நாம் முறை தவறி நடந்துவிட்டு நம் விதியை அழுத்தம் திருத்தமாக விதி என்னும் எழுதுகோலால் எழுதிவிட்டு தற்போதைய ஜென்மத்திலே அந்த விதியின் பலன்களை அனுபவிக்க பயந்து நம் தற்போதைய ஜென்மத்தின் ஜாதகத்தை ஜோதிடரிடம் அளித்து பரிகாரம் செய்யக் கோருகிறோம்.

ஜோதிடர் என்பவர் ஒரு இடைத்தரகரே, இடைத்தரகர்கள் நமக்கு சொந்தமான நிலத்தை நாம் விற்கும் போது அதே போல் நம் நிலத்தை வாங்கும் ஒருவர் அவர் உழைப்பினால் அவர் ஈட்டிய பொருளைக் கொண்டு நம் நிலத்தை வாங்குவதற்கு இந்த விற்பவர் ,வாங்குபவர் இருவருக்குமே தொடர்பில்லாத மூன்றாம் மனிதர் அங்கே இடைத்தரகராக வந்து நம்மிடமும் அவரிடமும் பணத்தை வாங்கிச் செல்வது போலத்தான் ஜோதிடர்களும் நமக்கும் இறைவனுக்கும் இடையே , அதாவது ஜீவாத்மா பரமாத்மா இருவருக்கும் இடையே புகுந்து இடைத்தரகர்கள் போல் செயல்பட்டு நமக்கு தொடர்பே இல்லாவிடினும் நம் பணத்தையும் இறைவனின் பணத்தையும் சேர்த்தே வாங்கிக் கொண்டு பரிகாரம் செய்கிறேன் என்று சொல்கிறார்கள்.

ஜோதிடத்தின் மகிமையே கற்ற வித்தையைக் காசுக்கு விற்கக் கூடாது என்னும் சாத்திர விதிப்படி செய்யவேண்டிய ஒரு அருமையான தொண்டு, அதை தம் நலனுக்காக ஜோதிடத்தையும் முழுமையாக அறியாமல் ஜாதகம் ஜோதிடம் பார்க்க வருவோரின் மன பலகீனத்தை மட்டுமே தூண்டிவிட்டு தம் காரியத்தை சாதித்துக் கொள்கிறார்கள்,

சில உண்மையான ஜோதிடர்கள் தம்முடைய இப்பிறவிப் பாவத்தைக் குறைக்கவும் தெய்வத்தை மதித்தும் தெய்வத்துக்கும் மனசாட்சிக்கும் பயந்து ஜாதகருக்கு உண்மையான பரிகாரங்களை சொல்லிக்கொடுத்து அவர்களை பல ஆபத்துக்களிலிருந்தும் அதன் வீரியத்திலிருந்தும் காப்பாற்றுகிறார்கள் . அப்படிப்பட்ட நேர்மையான உண்மையான ஜோதிடர்களும் மனசாட்சியை மதிக்கும் தொழில் விற்பன்னர்களும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இன்னும் இருக்கிறார்கள். நாம் அவர்களை மதிக்க கற்க வேண்டும்.

இப்படி அல்லாமல் ஜோதிடத்தை இறைவன் கருணை என்று நம்பி முழுமையாகக் கற்று உண்மையை மட்டுமே பேசுகின்ற தர்மபுத்திரராக தம் தகுதியை வளர்த்துக்கொண்ட நல்லவர்கள் வேண்டும் அப்படிப்பட்ட தகுதி உள்ளோரை நாம் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் ஜோதிடத்தை,அதாவது ஜோதிடம் சொல்வோரை முழுமையாக நம்ப இயலாது அல்லவா? ஆகவே உண்மையான சோதிட வல்லுனர்களை அடையாளப்படுத்தி கவுரப்படுத்தினால்....வெகு மக்களுக்கு தெரியும்......

புற்றீசல் போல பெருகும் சோதிடர்களால் மக்கள் ஏமாறுவது தடுக்கலாம்.. அதற்கு உண்மையான ஜோதிடக்கலை அறிந்தோரை முதலில் அடையாளம் காணவேண்டும் அப்படி அடையாளம் காண ஒரு தந்திரமான ஜோதிட நுணுக்கமான கேள்வியை அளித்து அதற்கு ஜோதிடக் கலை மூலமாக சரியான மிகச்சரியான துல்லியமான பதிலைக் கூறுவோர்களை தேர்ந்தெடுக்கலாம்

அப்படித்தான் செய்தார்கள் முற்காலங்களில் இப்போது அந்த முறைகளெல்லாம் இல்லையே முதலில் ஜோதிடக் கலை அறிந்தோர்களை கூட்ட வேண்டும் ஒரு அரங்கிலே அவர்களை முறையாக பரிசோதனை செய்யத் தகுதியான நபரை அதாவது ஜோதிடக்கலையில் உண்மையாகவே தேர்ச்சி பெற்ற ஒருவரை நடுவராக வைத்துக்கொள்ள வேண்டும்

அப்படி வைத்துக்கொண்டு பரிசோதனை செய்து பாரபக்ஷமில்லாமல் எதற்கும் விலை போகாமல் தேர்வு நடத்தினால் ஒரு வேளை உண்மையான ஜோதிடரைக் கணடுபிடிக்க இயலும்.இப்படிப்பட்ட காரியங்களை செய்து நம்

முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்த அருமையான ஆய கலைகள் அறுபத்தி நான்கினையும் காக்கும் வழிகளைத் தேடினால் பாரதமும் இந்து தர்மமும் நிச்சயமாக பாதுகாக்கப்படும் என்பதில் சந்தேகமே இல்லை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பழந்தமிழர் பாரம்பரியம்

நம் அரசு இதற்கெல்லாம் ஆவன செய்யவேண்டும் அப்போதுதான் நம் பழம் தமிழர்களின் பாரம்பரியமும் பாரம்பர்யக் கலைகளும் பாதுகாக்கப்படும்.. அதைவிடுத்து தமிழ் வளர்ப்போம் தமிழை வளர்க்கிறோம் என்றெல்லாம் சொல்லிச் சொல்லி பல நாத்திக ஊடகங்களில் பறைக்கொட்டு மட்டும்தான் நம்முடைய பழங்கலை என்பதைப் போன்ற ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி

நம் அடிப்படை இசையான கர்நாடக இசையை அவமதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பார்க்கும் போது இன்னமும் நாம் தமிழர்களின் உண்மையான கலைகளின் மேன்மையை அறியவில்லை என்றே தோன்றுகிறது. ஆவன செய்ய வேண்டும் என்பதே என் அவா.!

அது போல் இந்து மதத்திலே தம் இனத்துக்குண்டான ஷேமலாபங்களை மட்டுமே பார்க்காமல் “லோகோ சமஸ்தா சுகினோ பவந்து” அதாவது உலகத்திலே இருக்கும் அனைவருமே ஷேமமாக லாபமாக நலமாக நல்வாழ்வு வாழட்டும் என்றும் ஒற்றுமை உணர்வும் உலகச் ஷேம எண்ணமும் எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும்

என்னும் பரந்த மனப்பான்மையுடன் கூடிய வேண்டுதலும் நம் இந்து மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திலுமே காணமுடியாத அற்புதம் !

இப்படி இருக்க யாரால் நம் இந்து மதத்தை அழிக்க முடியும் பயப்படவே வேண்டாமைய்யா நம் இந்து மதத்தை அழிக்க இனி எந்த மதம் முயன்றாலும் நடக்காது. ப்ரளயம் வந்து உலகமே அழியும் வேளை வந்து அழிந்து மறு உலகமே தோன்றினாலும்

நம் இந்து மதம் மட்டுமே ஆலிலைக் கிருஷ்ணனாய் ஆழியிலே மிதந்து மறு உலகுக்கும் வழிகாட்டுபவனாய் மலர்வான் இப்படி இருக்க இந்து மதத்தை யாராலைய்யா அழிக்க முடியும் .

அப்படிப்பட்ட நம் சனாதன இந்து தர்மத்திலே பிராமணர்களுக்கென்றே சில கடமைகள் ஒதுக்கப்படுள்ளன. அவை உலக ஷேமத்துக்காக யாகம் செய்தல், ஹோமம் வளர்த்தல் , மேலும் தனக்கென்று எதையுமே

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வைத்துக் கொள்ளாமல் அன்றாடம் உஞ்சவிருத்தி செய்தே அதிலே கிடைப்பதிலே சிறிதளவு வாழ்வதற்கு உபயோகித்து விட்டு மீதத்தை உலக மக்களின் நலனுக்காவே செலவிடுதல் என்பதே உஞ்சவிருத்தி என்பதாகும்.

மஹாயக்யம்

அந்த மஹாயக்யமாகிய உஞ்சவிருத்தியை எப்படிச் செய்ய வேண்டும் தெரியுமா ?இங்கே மிக முக்கியமாக குறிப்பிட வேண்டிய செய்தி ஒன்று உள்ளது, உஞ்சவிருத்தி என்னும் ஒரு காரியம் பலனை எதிர்பாராமல் இறைவனின் நாமாவை சொல்லிக்கொண்டே போக வேண்டும்,

அப்படிப் போகும் போது யாரேனும் அவராகவே அழைத்து எதையேனும் அளித்தால் மறுக்காமல் வாங்கிக் கொள்ளலாமே தவிர எதையுமே கேட்டு வாங்கக் கூடாது என்பது சாத்திரம், அதுமட்டுமல்ல முன்பெல்லாம் இப்படி உஞ்சவிருத்தி வரும் பிராமணர்களின் முன்பாக சென்று அவரை வலம் வந்து அவர் காலிலே விழுந்து வணங்கியே அவருக்குண்டானதை அளிப்பார்கள் நம் மக்கள்

. நான் என் சிறு வயதிலே அப்படி உஞ்சவிருத்தி வரும் பிராமணர்களை சாலையிலேயே கீழே விழுந்து வணங்கி இருக்கிறேன் அப்படி வளர்த்தார்கள் என்னை. .அப்படிப்பட்ட புனிதமான உஞ்சவிருத்தி செய்யும் பிராமணரை அவமதித்தால் அப்படி அவமதிப்போருக்கு துன்பமே மிஞ்சும் என்பதை உணர்ந்தே வாழவேண்டும் இந்து மதத்தினர் அனைவருமே.

இந்து மதத்தைக் காக்க வேண்டும் காக்க வேண்டும் என்று வெறுமனே வாயால் சொல்லிப் பயனில்லை இந்துமத தர்மங்களை நாம் இனியேனும் தீவிரமாக கடைப்பிடிக்க வேண்டும். நாம் கடைப் பிடித்தால் தானே நம் வருங்கால சந்த்திகள் கடைப்பிடிக்கும் வழக்கத்தை மேற்கொள்வார்கள். அவர்களுக்கும் புரிகிறார்போல் நாம் எடுத்து சொல்லுதலும் இந்து தர்மங்களை கடைபிடித்தலுமே இந்துமதத்தைக் காக்கும் வழிகள் என்பதை இனியேனும் நாமெல்லோருமே உணர

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வேண்டும்.

மஹா பெரியவர் காஞ்சி மஹாமுனி அவர்களும் நம் வைணவ ஆசாரியர்களும் அனைத்து மத ஆசாரியர்களுமே அதைத்தானே அவ்வப்போது எடுத்துச் சொல்கிறார்கள். முதலில் நாமே கடைப்பிடிக்காமல் இருந்துவிட்டால் நமக்கு ஏது அருகதை மற்றவர்களைக் கடைப்பிடிக்கும்படி அறிவுறை சொல்ல

என்பதை உணர்ந்து நாமும் கடைப்பிடித்து மற்றவர்களையும் கடைபிடிக்கும்படி வேண்டுவோம் . கொஞ்சம் கொஞ்சமாக நாம் இழந்த ஆசாரங்களை மறுபடியும் மீட்டு நம் இந்துமதத்தை காக்கும் விதமாக செயல்பட ஆரம்பித்தால் இந்து மதத்தை யாராலுமே அழிக்க முடியாது. எறும்பூரக் கல்லும் தேயுமல்லவா அதுபோல நாம் இந்து மதக் கலாசாரத்தை கடைப்பிடிக்கத் தொடங்கினாலே மற்ற மதங்களின் தலையீடு தானாகவே குறைந்து போகும்.

உஞ்சவிருத்தி

அப்படிப்பட்ட மஹாயக்யமாகிய உஞ்சவிருத்தி நானும் செய்கிறேன் என்று கர்வம் கொண்டு “நான் பகவான் நாமத்தை சொல்கிறேன் எனக்கு மரியாதை தாருங்கள் என்று திமிராக நடத்தலோ, உங்களுக்காகத்தான் நான் பகவானை வேண்டுகிறேன் ஆகவே எனக்கு பொருளும் உணவும் நல்லாடைகளும் வசதிகளும் அளியுங்கள் என்று கேட்டு வாங்குவது எப்படிக் குற்றமோ எப்படிப்பட்ட இழிவோ

அப்படிப்பட்ட இழிவுதான், ஜாதகம் ஜோதிடம் பார்த்து சொல்லும் ஜோதிடர்கள் பேராசை கொண்டு கட்டணம் நிர்ணயித்தலும் . மனிதர்களின் பய உணர்ச்சியை பக்தியை பலகீனங்களை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு அதன் மூலமாக அவர்களை பயமுறுத்தி தேவையற்ற பரிகாரங்கள் செய்யச்சொல்லி அதன் மூலமாக பணம் பொருள் ஆகியவற்றை ஈட்டும் பேராசைக்காரர்களும், அதே போல நோயாளிகளை அவர்களுடைய உறவினர்களை தேவையல்லாத மருத்துவ அபாயங்களை மனதிலே ஏற்படுத்தி நோயாளிகளிடமோ அவரைச் சார்ந்த வர்களிடமோ பெரும் பணத்தை ஈட்டும் மருத்துவர்களும் இப்படிப்பட்ட இழிவான காரியங்களையே செய்கிறார்கள் என்பதிலே மாற்றுக் கருத்தே கிடையாது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜாதகர் அல்லது அவர் தொடர்பானவர் யாரேனும் அவர்களே விருப்பப்பட்டு அளிப்பதை வாங்கிக் கொள்ளலாமே தவிர , அதிரடியாக நான் ஜோதிடம் பார்த்து உங்கள் கர்ம வினைகளைப் போக்குகிறேன் என்று சொல்லி அதிகாரமாய் எதையுமே வாங்கக் கூடாது என்பதே சாத்திரம். அப்படி இல்லாமல் எப்போது ஜோதிடத்தையும் ஜாதகம் பார்ப்பதையும் வியாபர நோக்கிலே செய்ய ஆரம்பித்தார்களோ அப்போதே ஜாதகமும் ஜோதிடமும் பொய்த்துவிட்டது என்றே கொள்ளலாம்,

புலி வரும் போது எப்படி சில மான்கள் பூர்வ புண்ணிய பலனால் தப்பிக்கிறதோ அப்படி ஜாதகம் ஜோதிடம் பார்ப்பவர்களின் பேராசைக்கு பலியாகாகாமல் ஜாதகரும், பேராசை மருத்துவர்களின் பேராசைக்கு பலியாகாமல் நோயாளிகளும் இறையருளால் தப்பிப்பதும் அவரவர்களின் பூர்வபுண்ணிய பலனே இறையின் அருளே!

இப்படி இறையருளால் அவரவர் விதிப்படி.அதாவது பூரணமான பக்தியுடன் இறையை நம்பாமல் மாட்டிக்கொண்டு அவதிப்படும் மான்கள் போன்ற பல மனிதர்கள்தான் தம் தவறை மறந்து ஜோதிடம் ,ஜாதகம் பூர்வ புண்ணியங்கள் இறையருள் எல்லாமே போலியானவை என்று உளறித் திரியும் நாத்திகவாதிகளாக தம்மை மாற்றிக் கொள்கிறார்கள் .

இப்படி உளறுபவர்கள் தம் பூர்வ ஜென்ம பாவங்களையும் உணர்வதில்லை இந்த ஜென்ம பாவங்களையும் உணர்வதில்லை, மேலும் மேலும் பாவங்களையே செய்து அடுத்த ஜென்மத்துக்கும் இப்போதே பாவங்களை சேர்த்துக் கொள்கிறார்கள் அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் எல்லாமே இறையருள் கிடைக்காமையினால்தான் என்பதை உணராமல் மேலும் மேலும் நாத்திகம் பேசி மேலும் மேலும் பாவங்களை சேர்த்துக் கொண்டு அடுத்த ஜென்மத்துக்கும் பாவங்களை சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள்

கிரக கோசாரங்கள்

அல்லது கிரகங்களின் கோசார நிலைப்படி பெரிய பாதிப்பில்லாமல் தப்பிக்க ஏதேனும் ஒரு பரிகாரமும் ஜோதிடர் கூறக்கூடும் ஒரு புராண

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

செய்தி நினைவுக்கு வருகிறது . ஒரு முறை சிவபெருமானை சனிஸ்வரர் பிடிக்க வேண்டிய நேரம். ஈஸ்வரன் என்னும் பட்டம் பெற்ற இருவருள் ஒருவர் சிவன் (பரமேஸ்வரன்) மற்றொருவர் சனீஸ்வரன்.

சனீஸ்வரன் பரமேஸ்வரனிடம் சென்று இப்போது நான் உம்மை பிடிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன் விதிப்படி என்றார், அதற்கு பரமேஸ்வரன் என்னை பிடிக்க உன்னால் முடியாது என்று கூறிவிட்டு ஈரேழு பாதாள லோகங்களைக் கடந்து கீழே சென்று அமர்ந்து கொண்டாராம்.

அந்த சனீஸ்வரன் பிடிக்கும் வேளையிலிருந்து விடும் வேளை வரை அங்கேயே இருந்துவிட்டு , அந்த வேளை கழிந்த பின் மீண்டும் சனீஸ்வரன் முன்னால் வந்து
பார்த்தாயா உன்னால் என்னைப் பிடிக்க முடியவில்லை என்றார்.

அதற்கு சனீஸ்வரன் சிரித்துக்கொண்டே மன்னிக்க வேண்டும் பரமேஸ்வரா நான் உம்மைப் பிடிக்க வேண்டிய நேரத்தில் பிடித்துவிட்டேன்,
அதனால்தான் சர்வேஸ்வரனாகிய நீர் சனீஸ்வரனாகிய எனக்கு பயந்து நீங்கள் இருக்க வேண்டிய கைலாயத்தை விட்டு எங்கோ ஓரிடத்தில் பாதாளத்தில் பதுங்கி உட்கார வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றார்.

இதிலே ரகசியம் என்னவென்றால் சர்வேஸ்வரனுக்கு தெரியாதா இல்லை சனீஸ்வரர் அறியாததா இருவருக்குமே தெரியும். ஆனாலும் இந்த லீலைகள் அற்ப மானுடர்களான நமக்கு அறிவுறுத்தவே என்பதை நாம் உணர வேண்டும்.

ஆக விதியை யாராலும் வெல்ல முடியாது, ஓரளவு பரிகாரம் செய்து அதிக பாதிப்பில்லாமல் தப்பிக்கலாம் அவ்வளவே .

ஆகவே நாம் எப்போது ஜோதிடரைப் பார்க்கவேண்டுமோ அப்போதுதான் பார்க்க முடியும். எப்போது சரியான வித்தையுள்ள ஜோதிடரைப் பார்க்க முடியுமோ அப்போதுதான் அவரைப் பார்க்கவும் முடியும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இறைக்கும் விதி உண்டு

ஆகவே மனிதர்களுக்கு மட்டுமல்ல இறைக்கும் விதிகள் உண்டு என்று தோன்றுகிறது, இல்லையென்றால் பார்வதி பரமேஸ்வர பிரிவும் பார்வதியின் தவமும், ராமரின் கானக வாசமும் சீதையின் பிரிவும் அசோகவன வாசமும் சீதை கர்ப்பவதியாக இருக்கும்போதும் வால்மீகி ஆஸ்ரமத்திலே இருக்க வேண்டிய அவசியமும் நேர்ந்திருக்குமா?
தனிமை வாசமும் நடந்திருக்குமா? ஆகவே விதி ஆட்டி வைக்கிறது நாம் ஆடுகிறோம். ஆனால் சீதை ராமரையே நினைந்திருந்தாள் பார்வதி பரமேஸ்வரனையே நினைத்து தவமிருந்தாள்

அது போல நாமும் நல்லதையே வேண்டித் தவமிருந்தே நம் விதியின் கொடூரத்தைக் குறைத்துக் கொள்ள முடியுமே தவிர விதியை மாற்ற முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்

சரியான ஜாதகம்

1. ஜாதகம் சரியான முறையில் கணிக்கப்பட்டிருந்தால் 2. ஜாதகத்தை சரியான முறையில் அலசி ஆராய்ந்து முறையாகச் சொல்லும் ஜ்யோதிடர் கிடைத்தால் 3. ஜாதகரின் ஜாதகத்தோடு முறையாக தொடர்புபடுத்தி கோள்களின் இருப்பைச் சரியாக கணித்து, முறையாக சொன்னால்.நிச்சயம் பல பரிகாரங்களைச் செய்து நம் அவதியின் கடுமையைக் குறைத்துக் கொள்ளலாம் . ஆனால் கைதேர்ந்த ஜோதிடர்களே கனிக்க முடியாத பல ரகசியங்களும் உண்டு.
துல்லியமாக கணிக்கப்படாத ஜாதகங்கள் எப்படிப்பட்ட விளைவை ஏற்படுத்தும் என்பதற்கு வாய்வார்த்தையாக வந்த ஒரு கதையை இங்கே உதாரணமாக எழுதவிருக்கிறேன்

ஒருவர் ஒரு பெரிய ஜோதிடரைக் காணச்சென்றார், அவர் வந்த நேரத்தை வைத்தே அவரின் ஜாதகத்தை வாங்கி வைத்துக்கொண்டு ஆராய்ந்த ஜோதிடர் அறிந்தார் அந்த ஜாதகர் அன்று இரவே மரணிப்பாரென்றெண்ணி அதை அவரிடம் சொல்லாமல் நீங்கள நாளை வந்து என்னைப் பாருங்கள் என்று சொல்லி அனுப்பினார் ஜோதிடர் அந்த ஜாதகர் அன்று பயணிக்கும் போது ஒரு மண்டபத்திலே தங்குவாரென்றும் அந்த மண்டபம் இடிவிழுந்து இடிந்து அந்த ஜாதகரும் இறைவனடி சேர்வாரென்றும் ஜோதிடர் கணித்தார். அதே போல் அந்த

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜாதகர் மண்டபத்திலே மழையின் காரணமாக ஒதுங்கினார். மறு நாள் அந்த ஜாதகர் ஜோதிடரைப் பார்க்க வந்தார் . ஜோதிடருக்கு ஆச்சரியம் எப்படி அவர் வந்தார் முதல் நாள் இரவு என்ன நடந்தது என்று கேட்டார் .

அந்த மண்டபத்தின் மேல் இடி விழும் சில வினாடிக்கு முன் அந்த ஜாதகருக்கு யாரோ ஒருவர் எழுந்திருக்க முடியாமல் மழையில் அவதிப்படும் காட்சி கண்ணில் படவே மண்டபத்திலிருந்து வெளியே வந்து அவருக்கு உதவி செய்து நிமிரும்போது அவர் நின்ற மண்டபம் இடிந்து விழுவதைக் கண்டார் அவர். என்பதை விவரித்தார் அந்த ஜாதகர் . அப்போதுதான் வெகு நுணுக்கமான அந்த நிகழ்வை கணிக்க தம்மால் முடியவில்லை என்பதை உணர்ந்தார் அந்த ஜோதிடர்.

ஒரே நாளில் ஒரே நேரத்தில் பிறக்கும் குழந்தைகள் ஒரே ஜாதகம் அமைவதில்லையே.

..

இரட்டை குழந்தை ஜனனத்தில் இருபது நிமிடங்கள் வித்தியாசம் கூட ஜாதக அமைப்பு மாறுகிறதேன்...அதுதான் பிறப்பின் ரகசியம் பரணீ நக்ஷத்திரக் காரன் தரணி ஆளுவான் ஆண்மூலம் அரசாளும் என்கிறார்கள் எல்லா பரணியும் எல்லா மூலமும் அரசாள்கிறதா? பிரசன்னம் பற்றியும் கட்டாயம் தெரிந்திருக்க வாய்ப்பு உள்ளது.எங்களுக்கு சாதகம் தானே.

விஷய ஞானம் அறிய.நான் முதலில் விவரங்கள் அறிய வேண்டும் அதற்கு பல புத்தகங்களை படித்தே விவரம் திரட்ட வேண்டும்

பல இடங்களிலே திரட்டிய செய்திகளைத்தான் நான் அளிக்கிறேன் என் மூளையில் ஒன்றுமே இலை ப்ரசன்னம் என்பது ஒவ்வொரு இடத்திலே ஒவ்வொரு மாதிரி பார்க்கிறார்கள் அதைப் பற்றி பின் வரும் பாகங்களில் எழுதுகிறேன் விவரங்கள் திரட்ட வேண்டும்

ப்ரசன்ன நுணுக்கங்கள்

ஆகவே பல நுணுக்கமானவற்றை நுணுக்கி வைத்திருக்கும் ஜாதகத்தை முறையாக கணிக்கவோ அதை ஆராய்ந்து முறையாக நுணுக்கங்களை சொல்லவோ திறமையில்லாத இடத்திலே இருந்து கொண்டு ஜோதிடம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பொய் ஜாதகம் பொய் என்றெல்லாம் நாம் நினைத்தல் சரியாக என் மனதுக்கு படவில்லை

ப்ரபஞ்சத்தில் ஒரு சூரியக் குடும்பம் இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம் ஆனால் பல சூரியக் குடும்பங்கள்உள்ளது என்று விஞ்னானமே ஒப்புக்கொள்கிறது. ஒவ்வொரு சூரியக் குடும்பதைச் சுற்றியும் கிரகங்கள் சுழல்கின்றன, ஆனால் ஜோதிடம் என்பது நவக் கிரகங்களின் அடைப்படையில் சொல்லப்படுவதே .

ஜனன காலத்தில் ஒவ்வொரு கிரகத்தின் இருப்பை கணித்து அந்தந்த இருப்புக்கேற்ப ராசி- நவாம்சம் என்று இரு கட்டங்கள் வரைந்து அந்தக் கட்டங்களில் அந்தந்தக் கிரகங்களின் இருப்பைக் அந்தந்த ஜாதகரின் துல்லியமான பிறப்பு நேரத்தைக் கணிக்கிறார்கள்

அவர் பிறந்த நேரம், பிறந்த நக்ஷத்திரம் பிறந்த ராசி போன்றவைகளை வைத்து அதன் மூலமாக அதனை வான சாத்திரமென்னும் கணிதம் மூலமாகக் கணித்து அவற்றுக்குண்டான அதாவது அந்தந்தக் கோள்கள் ஜாதகருடைய ஆயுட்காலத்தில் எப்படி எந்த வருடம் எங்கே இருக்கும் என்றெல்லாம் கணிக்கிறார்கள்.

, ஒவ்வொரு கிரகங்களின் சஞ்சாரத்தையும் கணித்து அவை எப்போது நீசமடைகிறது எப்போது பலம் பெறுகிறது நீசமடைந்தால் என்ன விளைவு பலம் பெற்றால் விளைவு எப்போது நேர்ப்பார்வையாக சந்திக்கின்றது என்றெல்லாம் கணித்து அதன் படி பதவீ பூர்வபுண்யானாம் என்று தொடங்கி அவர் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதைக் கணித்து அவருக்கு பலன் சொல்வதே ஜாதகம்.

ஆர்ய பட்டர்

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் ஆர்யபட்டார் சன்னதியில் நவகிரகங்களும் 12 ராசிகளும் படியில் பொறிக்கபட்டுள்ளதே அதை மிதித்து தானே சன்னதிக்குள்ளே செல்கிறோம். அதே போல நாள் என்ன செய்யும் கோள் என்ன செய்யும் நமசிவாயத்தை நான்றியேன் பராத்பரமேனு மாணிக்கவாசகர் பாடியிருக்கார் , அதே போல நாள் என்ன செய்யும் கோள் என்ன செய்யும் நமசிவாயத்தை நான்றியேன் பராத்பரமேனு மாணிக்கவாசகர் பாடியிருக்கார் என்று கேட்டு என் சிந்தனையை கிளறிவிட்டார் கிருஷ்ண சேஷாத்ரி அவர்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வைணவர்களாயினும் சைவராயினும் பௌத்தராயினும் சமணராயினும் தாயின் கர்ப்பத்தில் வாசம் செய்து தாயின் யோனி மூலமாக பிறக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் இறையை சரணடைந்தாலும் அவருடைய முற்பிறப்பு விதி யின் பயனே நடக்கும் இறையை சரணடைந்தால் ஊழ்வினையின் தீவிரம் வேண்டுமானால் குறையலாம் அடுத்த பிறப்பிலே இன்னும் மேம்பட்ட பிறப்பாகப் பிறக்கலாம் எத்தனை ஜென்மங்கள் எடுக்க வேண்டுமோ அத்தனை ஜென்மம் எடுத்த பின்னரே மோக்ஷம் கிடைக்கும் அது வரை கோள்களின் கட்டுப்பாட்டிலேதான் இருப்பர்

இறைவனை சரணடைந்தாலும் மற்ற மானுடர்கள் ஆழ்வார்கள் நாயன்மார்கள் இருந்தார்களே அவர்களைவிடவாஉயர்வு சிரஞ்சீவி ஹனுமன் முதற்கொண்டு இறையின் பக்கத்திலேயே இருந்து தொண்டு செய்தனரே அவர்களை விடவா இபோதிருக்கும் மானுடர்கள் உயர்வு

ஶ்ரீராமானுஜர் ஶ்ரீ நிகமாந்த மஹாதேசிகர் ஶ்ரீ மஹா ஆதிசங்கரர் ஶ்ரீ மத்வர் ஆகிய ஆசாரியர்களை விடவா இப்போதிருக்கும் மானுடர்கள் உயர்ந்தவர்கள் அவர்கள் சரணடையாத தெய்வங்கள் உண்டா? நம் காலத்திலே வாழ்ந்த வைஷ்ணவ ஜீயர்கள் ஆசாரியர்கள் ஶ்ரீ காஞ்சி மஹான் போன்றோர் வழிபடாத தெய்வங்களா?

ஆனாலும் அவர்களும் எல்லாவித இன்னல்களையும் அடைந்தனரே . ஆனாலும் தங்களது ஆன்ம பலத்தால் சமாளித்தனர் நம் கண்முன்னே பெரியவர் காஞ்சி மஹான் இறையடி சேர்ந்தார் இவர்கள் வாழ்ந்த காலதிலே வாழ்ந்தோம் எனும் ஒரு பெருமையுடன் நாம் வாழலாமே தவிர நம் விதிப்படிதான் எல்லாம் நடக்கும் கோள்களின் ஆதிக்கத்திலேதான் நாம் நம் வாழ்க்கையை நடத்தியாக வேண்டும் என்பதிலே மாற்றம் இல்லை நண்பரே

எத்தனையோ மஹான்கள் அவர்கள் வாழ்விலே அடைந்ததெல்லாம் துன்பங்களே அப்படி அவர்கள் துன்பமடைந்தாலும் அவர்கள் தங்கள் துன்பங்களிலிருந்து கற்றுக்கொண்ட அனுபவ பாடங்களை மற்றவருக்கு உபதேசம் செய்தே வாழ்ந்தனர் வாழும் வரையில் மனித குல மேம்பாட்டுக்காக உபதேசம் செய்தனர் ஶ்ரீமன் நாராயணனின் திருப்பதங்களை ஈசன் சிவனின் திருப்பாதங்களைப் பற்றிக்கொண்டால்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

துன்பங்களிலிருந்து மீளலாம் என்றுதான் உபதேசம் செய்தனர் . ஆனால் மக்கள் அவர்களின் விதியிலிருந்து மீளலாம் என்று சொன்னதே இல்லை விதியின் கோரத் தாண்டவத்தின் உக்கிரத்திலிருந்து மீளலாம் என்றே சொல்லிச் சென்றார்கள் (ஒரு குறிப்பிட்ட மதத்தினர் சொல்லி வருவதைப் போல் எந்தக் குற்றம் செய்தாலும் பாவ மன்னிப்பு கேட்டால் மன்னிக்கப்படுவார்கள் என்று சொல்லவில்லை) , குற்றம் செய்தால் அதற்குரிய தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும் ஆனால் மனமுருகிப் ப்ரார்த்தனை செய்தால் அந்த தண்டனையின் கொடூரத்தை தாங்கும் மன உறுதி கிடைக்கும் என்றே சொன்னார்கள் ஆகவே விதி வலியது அது கொடுக்கும் வலியைத் தாங்கும் வலிமை வேண்டுமானால் கிடைக்கலாமே தவிர எல்லாப் பாவங்களையும் செய்துவிட்டு மோக்ஷத்தை அடைய முடியாது என்பதுதான் உண்மை

கடவுளை நம்புவர்கள், ஜோஸ்யத்தினையும் கட்டாயம் நம்ப வேண்டும் என்று சொல்வது போலிருக்கிறதே. கடவுளிடம் சரணாகதி அடைபவர்களுக்கு மற்ற தேவைகள் ஏன்?

சரணாகதி தேவையா

அருமையான கேள்வி ஆனால் பரிபூரண சரணாகதி என்றால் என்ன என்பதை சரியாக உணராத காரணத்தால்தான் நமக்கு சந்தேகங்கள் எழுகின்றன இப்போதைய நிலையில் பரிபூரண சரணாகதி என்பதே இல்லை பரி பூரண சரணாகதி என்பதே ஒருவனைப் பற்றி ஓரகத்திரு என்பதே இருக்க முடிகிறதா நம்மால் ? இல்லை ஏதேனும் ஒரு தெய்வத்தை பற்றி பரிபூரணமாக அவன் பாதாரவிந்தங்களிலே நம்மை ஆழ்த்தி சரணாகதி என்று அடைந்து நமக்கு எது நடந்தாலும் அவனே காப்பான் என்று பரிபூரணமாக நம்புகிறோமா இல்லை அப்படி நம்பினால் அதுதான் பரிபூரண சரணாகதி நம்மால் அப்படி இருக்க முடியவில்லையே யாரேனும் வந்து ஏதேனும் கூறினால் உடனே மாறித்தான் பார்ப்போமே என்று மனம் சொல்வதைக் கேட்டு மாற்றிக்கொள்கிறோமே அப்படி இருக்கும் நம்மால் பரிபூரண சரணாகதி அடைய முடியவில்லையே அதனால்தான் சரணாகதி அடைந்துவிட்டால் அதன் பிறகு எதற்கு ஜாதகமும் ஜோதிடமும் ஏன் என்று கேள்வி கேடகிறோம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உலகிலேயே உயர்ந்த பக்தி சரணாகதி ஶ்ரீ ஹனுமனின் சரணாகதியே அவரே ராமன் மேல் வைத்திருந்த உண்மையான தூய்மையான சரணாகதி எனும் பக்தியால் கிருஷ்ணனையே ஏற்றுக்கொள்ள மறுத்தாரே கிருஷ்ணன் அவனே ராமன் வடிவிலே வந்ததும்தான் ஒப்புக்கொண்டாராமே அது போல நம்மால் பரிபூரண சரணாகதை அடைய முடியவில்லையே அதனால்தான் எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்று குழம்பி ஜாதகம் ஜோதிடம் பரசன்னம் நாடி ஜோதிடம் ஆரூடம் கைரேகை பார்த்தல் என்றெல்லாம் மனம் அலைபாய்கிறது கிளி ஜோசியம் வெள்ளை எலி ஜோசியம் ஸ்டவ் ஜோசியம் எல்லாம் பார்க்கிறோம்

பரண்யாசம்

பரந்யாசம் என்றால் பொறுப்புத் துறப்பு எல்லாப் பொறுப்புகளையும் துறந்துவிட்டு எல்லாவற்றையும் இறைவனே பார்த்துக் கொள்வான் என்று நம்பி நாம் எதையுமே செய்யாமல் ஒரே தெய்வத்தையே நம்பி ஒரே ஆசாரியனைத் தொழுது ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று மற்றவற்றை மறந்து ஒன்றிலே ஒன்றல்தான் பரந்யாசம்

இறைவனின் திருமஞ்சன அபிஷேகத்தின்போது எவ்வளவு நீர் ஊற்றினாலும் விக்ரஹத்தின் மீது சார்த்தப்பட்டு இருக்கும் மஞ்சளும் சந்தனமும் நீரோடு சேர்ந்து வழிந்தாலும் அந்த தெய்வத்தின் காலடியிலேயே விழும். அப்படியே அந்த மஞ்சளும் சந்தனமும் கரைந்தாலும் மூல விக்ரகத்தின் பெருமை ஒன்றும் குறைந்துவிடாது .

அப்படித்தான் இருக்க வேண்டும் பரமாத்மாவின் மேல் ஒட்டிக்கொண்டு இருக்கும் ஜீவாத்மா எத்தனை சோதனைகள் வந்தாலும் வீழந்தாலும் நாம் மறுபடியும் இந்தப் பரமாத்மாவின் காலடியிலேயே வீழ்வோம் அதனால் நமக்கு கவலையே இல்லை.

இந்த பரமாத்மா அவன் காலடியில் வீழும் நம்மைக் காப்பாற்றியே தீருவான் என்னும் நம்பிக்கைதான் உண்மையான பக்தி ஆத்ம சமர்ப்பணம்.

அதைத்தான் சரணாகதி பூரண சரணாகதி என்கிறார்கள் ஆன்மீகப் பெரியோர்கள். இந்தப் பரிபூரண சரணாகதி என்பது அவ்வளவு எளிதான காரியமா என்றால் சற்றே யோசிக்க வேண்டியுள்ளது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பலர் நீங்கள் பரண்யாசம் செய்துகொள்ளலாமே என்று அறிவுரை சொன்னார்கள். நான் யோசித்தேன், ஒரு பதவியோ அல்லது நற்பெயரோ அல்லது ஒரு நல்ல நிலையோ அடைவது எவ்வளவு கடினமோ அதைவிடக் கடினம் அந்த நிலையை சரியாக தூய்மையாகப் பராமரித்து நிலைநாட்டிக் கொள்ளல் என்று தோன்றுகிறது.

ஆகவே எந்த ஒரு நிலையை புகழை பதவியை அடையவேண்டும் என்று ஆசைப்பட்டாலும் அந்தப் பதவியை புகழை நிலையைத் தக்க வைத்துக் கொள்ள முடியுமா என்பதை ஆராயாமல் ஏற்றுக் கொள்ளவே கூடாது என்பதுதான் விடையாகக் கிடைக்கிறது.

இயல்பான வாழ்க்கை முறைகள்

தானாக வரும் புகழ் பதவி நல்ல நிலை ஆகையவற்றையே நிலைநிறுத்திக் கொள்ளல் என்பதே பெரும் அவதியாக இருக்கிறது எனும் போது நாமாக ஆசைப்பட்டு அதை அடைய பெரும் முயற்சிகள் செய்து அடைந்தே விட்டாலும் அதன் பிறகு அதை நிலைநாட்டிக் கொள்ளல் மிகவும் கடினமானதே.

அன்றாடம் இயல்பான நம் வாழ்க்கையில் ஒரு நாள் இருப்பது போல் ஒருநாள் இல்லை இன்று அமைதியாகக் கழிகிறது மறு நாள் ஏதேனும் ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது, மறுபடியும் ஒரு அதிர்ச்சி வருகிறது, இப்படி பற்றாக் குறை அபரிமிதமான பூர்த்திகள், ஆசைகள் நிறைவேறுதல் மனக் கவலை மனம்குமுறல் இசைவெள்ளம் மன ஆனந்தம் திகைப்பு அதிர்ச்சி என்று எதுவந்தாலும் எல்லாம்கடந்து போகும் என்னும் மனநிலையைக் கடைப்பிடித்தாலும் அந்த அதிர்வுகளிலிருந்து உடனடியாக மீண்டு இயலபாக இருக்க முடியவில்லை என்பதே நிதர்சனம்.

அப்படி இருக்க பரண்யாசம் செய்து கொள்ளலாம் ஆனால் அந்தப் ப்ரண்யாசம் செய்து கொள்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பரிபூரண விதி முறைகளைக் கடைப்பிடிக்க நம்மால் முடியுமா என்று யோசித்தால் சற்றே மனம் பின்வாங்குகிறது

பரண்யாசம் செய்து கொள்வது ஒன்றும் பெரிய காரியமல்ல ,அந்த

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பரண்யாசத்தின் நிலையில் சற்றும் பிறழாமல் நடந்து கொள்ளல் இயலுமா என்பதே பெரும் திகைப்பு. இருப்பதை விட்டுவிட்டு பறப்பதைப் பிடித்தால் கவிழும் அபாயம் உண்டு.

நம் மனதைக் கட்டுப்படுத்தி ஒரு நிலையில் வைத்துக் கொள்ளவே அரும்பாடு பட வேண்டும் எனும்போ து ஒரு உயர்ந்த நிலையை அடைய வேண்டும் எனும் ஆசையால் ஒரு உயர்ந்த நிலையை அடைய முயற்சி செய்து அடைந்தாலும் அந்த உயர்ந்த நிலையில் நம்மைப் பொறுத்திக் கொள்ள இயலாமல் போனால் அது நமக்கு இழிவுதான் என்றாலும் அந்த உயர்ந்த நிலைக்கு உகந்தது அல்ல என்பதே என் எண்ணம்.

பிராமணானகப் பிறந்தவன் கடல் தாண்டினாலே தோஷம் என்கிறார்கள் வேதம் அறிந்த பெரியோர் . நாம் ஆசார அனுஷ்டானங்களைக் கடைப்பிடிக்கிறோமா .என்றால் அன்றாட வாழ்க்கையில் அதுவே இயலாததாகிவிட்டது .

ஆகவே; நாம் ஒன்றும் சாதிக்காவிடினும் உயர்ந்ததாக இருக்கும் நிலைகளின் தரத்தைக் குறைக்காமல் இருப்பதே நல்லது என்றே தோன்றுகிறது. ஆக யாரும் இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே என்றே தோன்றுகிறது.

இன்னல்களும் சோதனைகளும்

நான் இன்னல்கள் என்று சொன்னதும் நீங்கள் சோதனை என்று சொல்தும் ஒன்றுதான் ஒரு மருத்துவர் எப்படி உபகரணங்கள் மூலமாக மருந்து மாத்திரைகள் மூலமாக நோயாளியைக் குணப்படுத்துகிறாரோ அப்படித்தான் இறைவனும் தானே நேரில் வந்து காப்பாற்றுவதில்லை ஆனால் செயல்படுத்துகிறார் கிரகங்கள் மூலமாக கிரகங்கள் அவரில் ஏவலர்களே அவர் சொல்வதைத்தான் கிரகங்கள் செய்கின்றன . நீங்கள் சொல்வது போல ஓவ்வொரு காலத்திலேயும் ஒரு மகான் உதித்து இந்து மதத்தைக் காப்பாற்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள் மிக உண்மையான வாசகமே நாத்திகர்கள்தான் ஆத்திகத்தை வளர்க்கிறார்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கோள்களினால் என்பதை நான் ஏற்கவில்லை. நாம் நம் பாரம்பர்யத்திலிருந்து தவறி நாம் படும் இன்னல்களுக்கு எது காரணம் என்பது தெரிந்தும் நாம் கோள்களினால் தான் கஷ்ட்டபடுகிறோம் என்று நினைக்கிறோம். இது நெருப்பு சுடும் என்று தெரிந்தும் கையை வைத்து விட்டு சுட்ட பிறகு இது கோளினால் தான் என்று கூறுவது escapism. நம் முட்டாதனத்தை மறைக்க வேறு ஒன்று மேல் போடும் பழி.

ஒவ்வொன்றிற்க்கும் ஒரு செயல்படும் முறை உள்ளது எல்லையைக் காக்க வீரர்களை நியமிக்கிறோம் அப்போது வீர்ர்களைத்தான் எல்லையைக் காக்க நம்பவேண்டும் முதல் மந்திரியே வந்துதான் எல்லையைக் காக்கவேண்டும் என்று நினைப்பதில்லை ஆனாலும் முதல்மந்திரி நியமித்த ராணுவ முதல்வரின் ஆணைப்படியே தான் எல்லை வீரர்கள் செயல் படுகிறார்கள் ராணுவ முதல்வரும் முதல் மந்திரியின் ஆணைக்கிணங்கவே செயல்படுகிறார் ஆகவே இறையை பரிபூரணமாக நம்ப வேண்டும் ஆனால் நாம் நேரிடையாக அணுக முடியாது அதனால் ஆசாரியர்கள் மூமலாகத்தான் அணுக முடியும் என்பதே உண்மை

எனக்குத் தெரிந்த அளவிலே பதில் சொன்னேன் ஆழ்வார்கள் சொல்லி வைத்த விவரங்களை மறுக்க நமக்கு அதிகாரமே கிடையாது ஆனாலும் எல்லா ஆழ்வார்களும் நாயன்மார்களுமே இறையைப் பற்று என்று சொல்கிறார்களே தவிர இயல்பான நடைமுறை வாழ்க்கையில் எதை செய்ய முடியுமோ அதை மனப்பூர்வமாக செய்துவிட்டு விளைவை இறிஅவனிடம் விட்டுவிடுங்கள் என்றுதானே சொல்கிறார்கள், கிருஷ்ணனும் அதைத்தானே கடமையை செய் பலனை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்கிறான்

அற்ப மானுட வாழ்க்கையிலே நம்மால் இறைவனை முழுமையாக நம்பினாலும் ஒன்றுமே செய்யாமல் சும்மா இருக்க முடியாதே பெரியவாச்சான் பிள்ளை பாடிய திருவாய்மொழி யை ஏற்றுக்கொள்ளாத மானிடர்களும் உண்டா பெரியவாச்சான் பிள்ளை எழுதிய ரஹஸ்யத சாரத்திலே படித்தால் சரணாகதியை பற்றி தெரிந்துகொள்லலாம், ஒன்றிலேதான் நான் உம்மிடமிருந்து மாறுபடுகிறேன் விதி என்பதை நாமே ஏற்படுத்திக்கொள்வதில்லை அது நம் பிறப்பின்   நம் முன்னோர்களின் புர்வ புண்ணிய பாவங்களின் மூலமாக ஏற்படும் நம் நடத்தையின் விளைவாகவும் ஏற்படுவதே , நம் நடத்தையே நம் விதியை சார்ந்ததே ஆகவே விதியை நம்மால்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஏற்படுத்த முடியாது நமக்கென்று இருக்கும் விதியின்படியே நடக்கவேண்டிய அற்ப மானிடர்கள் நாம் என்கிறேன்

திறமையான ஜோதிடர்கள்

திறமையான ஜோதிடரின் மூலமாக நம் விதியை அறியலாம், அதை அறிந்து பரிகாரங்கள் செய்து நம் விதியின் கொடூரத்தைக் குறைத்துக் கொள்ள முயலலாம் அதற்காக்த்தான் ஜோதிடமும் ஜாதகமும் escapism என்பதே கிடையாது ஏனென்றால் நம்மால் எதிலுருந்தும் தப்ப முடியாது ஆனால் கஷ்டங்களை தாங்கும் சக்தியைப் பெற பரிகாரம் வேண்டுமானல் செய்துகொள்ளலாம் அவ்வளவே

மீண்டும் சொல்கிறேன் பரிகாரம் மூலமாக சரிசெய்ய முடியாதென்றாலும் அதன் கடுமையைக் குறைத்துக்கொண்டு நமக்கு தாங்கும் சக்தியை பெறலாம் என்று

ராமாயணம் மஹா பாரதம் போன்றவைகளிலே கூட ஶ்ரீ ராமரே இப்படி பரிகாரங்கள் செய்ததுண்டு தவங்கள் யாகங்கள் போன்றவைகள் கூட பரிகாரமே சாபத்திலிருந்து விமோசனம் பெற அதற்கு மாற்று வழியாக பல பரிகாரங்களை செய்திருக்கிறார்கள் வழி வழியாக ஒரு குருவை வைத்துக் கொண்டு அவருக்கு கட்டுப்பட்டு அவர் சொல்வதைக் கேட்டு பரிகாரங்களை அடைந்திருக்கிறார்கள் இறைகளும் அப்படி இருக்க மானிடர்கள் பரிகாரங்களை செய்து கொள்வதில் தவறில்லை என்றே தோன்றுகிறது. லோக மாதா சீதையைக் கூட இந்த விதி விடவில்லை அவளைத் தயாகவே நினைத்த லக்ஷ்மணரை அவதூறாக பேசியதன் விளைவாகவே ஶ்ரீ ராமர் அவலையே அக்கினியிலே இறங்கின் பரிகாரம் செய்யப் பணிததார் ஏனென்றால் மனிதரை நோகடிக்கலாம் ஆனால் மனதை நோகடிக்கக் கூடாது என்னும் தத்துவத்தை உணர்த்த .மேலும் இல்லை நண்பரே அது கட்டுக்கதை இல்லை சீதை பரிசுத்தமானவள் என்று ஶ்ரீ ராமருக்குத் தெரியும் ஆனாலும் மக்களின் சந்தேகம் போகவும் சீதாதேவியின் பெருமயை உலகறியச் செய்யவும் மேலும் லோக மாதாவான சீதையே மாரீச்ன் ஶ்ரீ ராமரின் குரலிலே லக்ஷமணா சீதா காப்பாற்று என்று சூது செய்ததை அறியாமல் இயல்பான சாதாரண மானுடப் பெண்டிர்போல் மனம் மயங்கி லக்ஷ்மணா ஶ்ரீராமனுக்கு ஏதோ ஆபத்து உடனே சென்று அவரைக் காப்பாற்று என்று ஶ்ரீராமன் பர தெய்வம் என்பதை மறந்து ஆணையிட்ட போது ஶ்ரீராமனைப் பற்றி நன்கு அறிந்த

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆதிசேஷனான லக்ஷ்மணன் சீதையைக் காக்கும் எண்ணத்துடன் இல்லை ஶ்ரீராமருக்கு ஒரு ஆபத்தும் வராது என்று சொல்லியும் அதைக் கேளாமல் தகாத சொற்களை சீதா தேவியார் கூறினாரென்றும் அதற்கு பரிகாரமாகத்தான் சீதாதேவியை உணரச்செய்ய அக்னிப்ம்பரிக்ஷை வைத்ததாகவும் சம்பவம் உண்டு ராமாயணத்திலே ஶ்ரீ ராமாயணத்திலே கட்டுக்கதைகளே கிடையாது ராமாயணத்தை முதன் முதலாக எழுதிய வால்மீகி ராமாயணம் அதன் கம்பராமாயணம் தவிர அதன் ;பிறகு ராஜாஜி அவர்கள் எழுதிய ராமாயணம்

இன்னும் பலர் எழுதிய ராமாயணங்கள் வரையில் இடைச்செறுகல்கள் இருக்கலாம் ஆனால் கட்டுக்கதை கிடையாது மூல ராமாயணத்திலே

கட்டுக்கதையில்லை என்று சொன்னேன் ராமாயணம் கட்டுக்கதை என்று சொல்லவில்லை சீதையின் அக்னிப் ப்ரவேசமும் கட்டுக்கதையில்லை என்றே சொன்னேன் கிரகங்களும் விதியும் நம்மை ஆட்டிவைக்கிறதே இன்னுமா உங்களுக்கு கிரங்களின் மீதும் விதியின் மீதும் நம்பிக்கை வரவில்லை என்று கேட்பார்கள் அதுதான் மாயை ? அவனன்றி ஒரு அணுவும் அசையாது ஆனால் அப்படி அசையும் ஒவ்வொன்றிக்கும் ஒரு அதிகாரி நியமிக்கப்படுகிறார் அந்த அதிகாரிதான் விதி

நாம் கிரகத்தில் அமர்ந்து எழுதுகிறோமே அதுவும் கிரகஸ்தனாக ஆகமுடியாமல் சாமியாராக இருக்கிறார்களே அதுவும் விதிதான்

நான் இன்னல்கள் என்று சொன்னதும் நீங்கள் சோதனை என்று சொல்தும் ஒன்றுதான் ஒரு மருத்துவர் எப்படி உபகரணங்கள் மூலமாக மருந்து மாத்திரைகள் மூலமாக நோயாளியைக் குணப்படுத்துகிறாரோ அப்படித்தான் இறைவனும் தானே நேரில் வந்து காப்பாற்றுவதில்லை ஆனால் செயல்படுத்துகிறார் கிரகங்கள் மூலமாக கிரகங்கள் அவரில் ஏவலர்களே அவர் சொல்வதைத்தான் கிரகங்கள் செய்கின்றன . நீங்கள் சொல்வது போல ஓவ்வொரு காலத்திலேயும் ஒரு மகான் உதித்து இந்து மதத்தைக் காப்பாற்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள் மிக உண்மையான வாசகமே நாத்திகர்கள்தான் ஆத்திகத்தை வளர்க்கிறார்கள்

முக்தி அடையும் வழி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நல்ல முக்தியை அடையவேண்டலாம் என்றுமுக்திநாத் எனும் ஸ்தலத்துக்கு சென்று முக்திநாதனை தரிசித்து வரலாம் என்று சென்றோம் முக்திநாதனை சேவித்துவிட்டு திரும்பும்போது விமானம் ஓட்டுனர் அறிவித்தார் நாம் மிக மோசமான பனியிலே சிக்கிவிட்டோம் என்னாலியன்ற அளவிலே முயற்சி செய்கிறேன் என்று உடனே விமானத்திலே இருந்தவர்கள் நான் உடபட இறைவா காப்பாற்று என்று வேண்டினோம் ஆனால் விமானி சற்று நேரம் கழித்து விமானம் தப்பித்துவிட்டது என்றார் அப்போதுதான் உணர்ந்தேன் முக்தி வேண்டி முக்திநாதனை சேவிக்கச் சென்றோம் அவன் முக்தி அளிக்க முயன்றான் நாம்தான் காப்பாற்று என்று வேண்டிக்கொண்டு அவன் தரவிருந்த முக்தியை தடுத்துவிட்டோம் என்று.

உண்மையை சொன்னால் நான் ஜாதகம் பார்க்க மாட்டேன் ஜாதகம் ஜோதிடம் இவைகளை எப்போது எப்படி நம்பலாம் என்றுதான்கட்டுரை எழுதுகிறேன் என் திருமணத்தின் போது வலுக்கட்டாயமாக ஒரு முறை ஜாதகம் பார்த்தார்கள் அதைத் தவிர இது வரை நான் ஜாதகம் பார்ப்பதில்லை இறைவனைத்தான் திடமாக நம்புகிறேன் இடைத்தரகர்களை நம்புவதில்லை.

ஆனாலும் நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு எனக்குத் தெரிந்த வரையிலே என் சிற்றறிவுக்கு எட்டிய அளவிலேதான் பதில் சொன்னேன் வாதிட்டேன் இதுதான் வாதம் செய்யும் தர்மம்

எடுத்த வாதத்திலே தெரிந்ததை மறைக்காமல் வாதிடவேண்டும் அதன் பிறகு எதிரே வாதிட்டவர் கூற்றிலே உண்மை இருந்தால் ஏற்க வேண்டும் ஆக மொத்தம் நம் அறிவை வளர்த்துக் கொள்ளும் ஒரு சிறு முயற்சியே இது இதிலே வெற்றி தோல்வி எனும் பேச்சுக்கே இடமில்லை

ஆகவே ஏதேனும் உங்கள் மனதை நான் புண்படுத்தி இருந்தால் மன்னிக்க வேண்டுகிறேன்,

ஒவ்வொன்றிற்க்கும் ஒரு செயல்படும் முறை உள்ளது இறையை சரணடைதல் என்பதன் விளக்கம்,அது இன்றய சூழலில் சாத்யப்படும் நிலை அதன் மூலமாக அதாவது சரணடைந்ததின் மூலமாக மிகச்சாதாரணமனிதனாகிய நாம் எப்படி (இதில் அருளாளர்களை சேர்க்கவேண்டாம்) பயனடையலாம் என விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.சரணாகதி என்று முனைந்துவிட்டால் அது பரிபூரன சரணாகதியாய் இருக்க வேண்டும் அதிலே எந்த ஒரு விதி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மீறலும் இருக்கக் கூடாது ஆனால் நம்மால் இயல்பான வாழ்க்கையிலே அப்படி ஒரு சதவிகித விதிமீறலும் இல்லாமல் வாழமுடியவில்லை என்பதே யதார்த்தம் அதனால் சரணாகதி என்பதை சரியாகப் புரிந்து கொண்டு அப்படி சரணாகதி என்று இறைவனை சரணாகதி அடைந்துவிட்டால் என்ன நேர்ந்தாலும் அவன் பார்த்துக் கொள்வான் என்று இருக்க நம்மால் முடியுமா முடியாதே அதுதான் மனிதர்களின் இயலாமை ஆகவே மனதிலே உறுதி கொண்டு எப்படிப்பட்ட துன்பம் வரினும் உன்னைத் தவிர நான் வேறு எந்த வழியையும் பின்பற்ற மாட்டேன் என்று உறுதி பூண்டு அதனால் துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும் எல்லாமே உன் பொறுப்பு என்று திடமாக இருக்க முடிந்தால் சரணாகதி செய்துகொள்ளலாம் இன்றைய சூழலில் அது இயலாது என்றே தோன்றுகிறதுஇந்த சரணாகதியை கலிகாலத்தை முன்னிட்டு சாதாரண மக்களுக்கு விதிவிலக்கு ஏதேனும் கூறப்பட்டுள்ளதா?

இக்காலத்தில் கடைப்பிடிக்க வழிவகை யாக ஏதேனும் எளிய வழி உண்டா?
இக்கால சூழலுக்கு ஏற்ப சரணாகதியை எப்படி இயக்கவைக்கலாம்?
சரணாகதி என்றாலே இந்த உடல் மனம் ஆத்மா ஆகிய அனைத்தையும் முழுவதுமாக ஒப்படைக்கிறேன் என்று பொருள் அதிலே ஏதேனும் எளிய வழி என்பது ஒன்றே ஒன்றுதான் அது முழுவதுமாக ஒப்படைப்பதே சர்வம் கிருஷ்ணார்ப்பணமஸ்து என்று

பலன்களை நாம் உணரும் முறை

ஜாதகப்படி நன்றாக ஆராய்ந்து ஒருவருக்கு அந்த ஜாதகம் பார்க்கும் ஜோதிடர் உங்களுக்கு கூரிய ஆயுதத்தால் ரணம் ஏற்படும் என்று கூறினால் ஒரு வேளை அந்தக் கூறிய ஆயுதத்தால் ரணம் ஏற்பட்டு அவர் உயிரிழக்க நேரிடலாம், அதற்கு மாறாக அதே கூரிய ஆயுதத்தால் ரணத்தை ஏற்படுத்தி அறுவை சிகிச்சை செய்யப்பட்டு உயிர் பிழைக்கவும் பிழைக்கலாம்

இவை இரண்டுமே அந்த ஜாதகரின் விதியைப் பொறுத்தே அமைகிறது. இதை அவ்வளவு துல்லியமாக கணிப்பது மிகக் கடினம். இவை இரண்டில் எது நடக்கும் என்று ஜோதிடராலும் அறிய முடியாமல் மறைந்திருக்கும் நுணுக்கங்களும் ஜாதகத்திலே உண்டு .

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நான் பணி புரிந்துகொண்டிருந்த காலத்தில் ஒரு முறை என்னுடைய ஜாதகத்தை என் தாயார் என் திருமண விஷயமாக ஒரு ஜோதிடரிடம் காட்டினார்கள். அந்த ஜோதிடர் என் ஜாதகத்தைப் பார்த்து பலன்களைச் சொன்னார். அதெல்லாம் என் வாழ்க்கையில் நடந்ததா ? நடந்ததெனில் எப்படி நடந்தது? நடக்காமல் போயிருப்பின் எப்படி நடக்காமல் போனது என்பதைப் பார்ப்போம்.

என்னுடைய ஜாதகப்படி நான் பிறந்த தேதியாகிய ஜூலை ஒன்று முதலில் தவறு என்றார், அடுத்ததாக அவர் மிகப் பழைய அதாவது நான் பிறந்த வருடமாகிய சர்வதாரி வருடப் பஞ்சாங்கத்தை எடுத்து , என்னுடைய பிறந்த தினம் ஜூலை இரண்டு என்று மெய்ப்பித்தார். ஆனால் என்னுடைய பிறந்த நாள் பிறப்பு சான்றிதழ்ப் ப்ரகாரம் என்னுடைய பிறந்த நாள் ஜூலை ஒன்றுதான். அப்படித்தான் அது வரை நான் நினைத்திருந்தேன் அதை ஒட்டியே என் எல்லா செயல்களும் இருந்தன .

அதன் பிறகு நான் செவ்வாய் தசையில் பிறந்திருக்கிறேன் என்றார் , அவர் வருட வாரியாக ஒவ்வொரு வருடமும் என் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று கணித்து அதை எழுதிக்கொடுத்தார். இப்போது நினைத்துப் பார்க்கிறேன் அவர் கூறியதெல்லாம் எப்படி நடந்தது என்று. 100 க்கு 80 சதவிகிதம் அவர் எழுதிக்கொடுத்ததே இன்று வரை. நடக்கிறது .

ஆச்சரியமான நுணுக்கம்

வைஷ்ணவக் குடும்பத்திலே பிறந்தாலும் என் சிறு வயது முதலே நான் அவ்வப்போது முருகா முருகா என்று கூறுவது என் வழக்கமாக இருந்தது. நானே ஆச்சரியப்பட்டிருக்கிறேன் நமக்கு முருகன் நினைவு எப்படி வருகிறது என்று. என் மாமா அடிக்கடி கேட்பார் வைஷ்ணவத்திலே பொறந்துட்டு எப்பிடிடா முருகான்னு சொல்றே ரங்கான்னு,நாராயணா ன்னு சொல்லேன் என்பார்
ஆனால் ஒரு ரகசியம் வெளிப்பட்டது ஒருநாள் முருகனைப் பற்றி ஒரு ஒரு ஆன்மீகப் பதிவு படித்தேன் அதிலே ஒரு சூக்ஷ்மமான விஷயம் எழுதியிருந்தார்கள் முருகனுக்கு மயில்தானே வாகனம் என்று நாம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஆடும் முருகனின் வாகனமாம் .

மேஷராசியின் அதிபதி செவ்வாய் ,செவ்வாய்க்கதிபதி முருகனாம் முருகனுக்கு இந்திரன் கொடுத்த யானை மற்றும் அன்னம், ஆடு, குதிரை ஆகியவையும் வாகனங்களாக இருந்து வருகின்றது.
திருப்பரங்குன்றத்தில் இந்த நான்கு வாகனங்களையும் காணலாம். சங்க இலக்கியமான பரிபாடலில் முருகனின் வாகனமாக ‘மேடம்’ எனும் ஆடு குறிப்பிடப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் மருங்கூர் சுப்பிரமணிய சுவாமி கோயில், தக்கலை அருகிலுள்ள குமாரகோயிலில் உற்சவ காலங்களில் முருகன் குதிரை வாகனத்தில் பவனி வருவார்.

விஸ்வரூப முருகனிடம் தேவர்கள், சூரபத்மனால் சிறைபிடிக்கப்பட்ட தேவர்களை விடுவிக்க வேண்டிக் கொண்டார்கள். அவன் மகிழ்வுடன், தேவர்களே கலங்க வேண்டாம், எனது அவதாரமே சூரவதத்தின் பொருட்டு உருவானது தான், தங்கள் கோரிக்கையை விரைவில் நிறைவேற்றுவேன், என்றான்.

இந்நிலையில், தனக்கு ரிஷபம் வாகனமாக இருப்பது போல், தன் மகனுக்கு ஒரு வாகனம் வேண்டும் என விருப்பப்பட்டார் சிவபெருமான். தேவகான பாவலர் நாரதர் மூலமாக இதற்கான ஏற்பாட்டைச் செய்தார். நாரதா ! நீ யாகம் ஒன்றிற்கு ஏற்பாடு செய், என்றார். என்ன காரணத்துக்காக யாகம் நடத்தச் சொல்கிறார் என்பது புரியாவிட்டாலும், ஏதோ ஒன்று செய்ய தனக்கு நேரம் வந்துவிட்டதாக கருதிய நாரதர்,

சிவனின் கட்டளையை பதிலேதும் பேசாமல் ஏற்றுக் கொண்டார். யாகத்திற்காக அதவாயு என்ற பசுவை யாகத்திற்கு கொண்டு வந்தனர் சிலர். யாகம் துவங்கியதும், அந்த பசு பயங்கரமாக சத்தமிட்டது. அனைவரும் ஆச்சரியமும், பயமும் கொள்ளும் வகையில் அந்த பசுவின் வயிற்றில் இருந்து ஒரு பயங்கர ஆடு தோன்றியது.

அது யாகத்திற்கு வந்தவர்களை நாலாதிக்கிலும் விரட்டியடித்தது. நேரம் செல்லச் செல்ல அதன் உருவம் வளர்ந்து கொண்டே போனது. யாரும் அதன் அருகே நெருங்க முடியவில்லை. தேவர்கள் கதறினர். பார்த்தாயா ? சிவன் சொன்னதாகச் சொல்லி இந்த நாரதன் யாகத்தைத் துவங்கினான்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

யாகத்திற்கான காரணத்தையும் சொல்ல மறுத்தான். யாகத்தின் பலனை பெற்றுக் கொள்ள வந்த நம்மை, துன்புறுத்தி பார்க்க அவனுக்கு ஆசை. மாட்டை ஆடாக்கினான். ஏதோ மாயாஜாலம் செய்து, பெரிய கொம்புகளுடன் அது நம்மை முட்ட வருகிறது. இதென்ன கொடுமை. என்று திக்குத் தெரியாமல் ஓட்டம் பிடித்தனர்.

எல்லாரையும் கலகம் செய்பவன் நான் தான்; என்னையே கலக்கி விட்டாரே, இந்த சிவபெருமான், என்று நாரதரும் அங்கிருந்து தப்பினால் போதும், என ஓடினார். அஷ்டதிக்கஜங்கள் எனப்படும் எட்டு யானைகள் உலகத்தில் எட்டு திசைகளையும் தாங்குகின்றன. அந்த ஆடு அந்த யானைகளையும் விரட்டியது. யானைகள் தங்கள் இருப்பிடத்தை விட்டு நகர்ந்ததால், உலகமே ஆடத் தொடங்கியது.

தேவர்கள் நிலையில்லாமல் தவித்தனர். இதையெல்லாம் உணர்ந்தும் உணராதவர் போல் அயர்ந்திருந்தார் கண்ண பரமாத்மா. அந்த வைகுண்டத் திற்குள்ளும் புகுந்த ஆடு அட்டகாசம் செய்தது. இந்த தகவல் முருகப் பெருமானுக்கு சென்று விட்டது. அவர் தன் தலைமை தளபதி வீரபாகுவிடம் கண் ஜாடை காட்டினார். தலைவனின் கண்ணசைப்பிலேயே அனைத்தையும் புரிந்துகொண்ட வீரபாகு, உடனடியாக புறப்பட்டான்.

வைகுண்டத்தை கணநேரத்தில் அடைந்ததுமே, பலம் வாய்ந்த அவனை கண்டு ஆடு பின் வாங்கியது. இருப்பினும். அவனை முட்ட வருவது போல் பாசாங்கு செய்தது. வீரபாகு ஆட்டின் கழுத்தை ஒரே அழுத்தாக இழுத்து பிடித்தான். கொம்பை பிடித்து தரதரவென இழுத்து வந்து முருகனின் முன்னால் விட்டான்.

முருகப்பெருமானை பார்த்ததோ இல்லையோ, அந்த ஆடு அவர் பாதத்தில் பணிந்தது. முருகப்பெருமான் கருணைக் கடவுள். மிகப் பெரும் தவறு செய்தாலும், அவரிடம் பணிந்து விட்டால், கருணையுடன் மன்னித்து விடுவார். அவர் அந்த ஆட்டின் மீது ஏறி அமர்ந்தார். முருகப்பெருமானுக்கு அந்த ஆடே வாகனமாயிற்று.. ‘அசம் (அஜம் – ஆடு) மேவிய பெருமாளே (கனவாலங் – திருப்புகழ்) தகர் இவர் வல் (குன்றுங் குன்றுந் - திருப்புகழ்) என்று அருணகிரியார் குறிப்பிடுகிறார்.

வாழ்வியல் ஒப்பீடுகள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்த சம்பவத்தை வாழ்வியலோடு ஒப்பிடலாம். கடவுள் இருக்கிறார் என்பது தெரிந்தும், ஒவ்வொரு ஜீவனும் தங்களை உயர்ந்த ஒரு பிறவியாகக் கருதிக் கொண்டு ஆணவத்துடன் திரிகின்றன; அநியாயம் செய்கின்றன. இறைவன் அவற்றை தம் பக்கம் இழுக்கிறான். அவை அவனைச் சரணடைந்தால், தனக்கும் ஐக்கியமாக்கிக் கொள்கிறான்.

திருந்தாத ஜென்மங்களை கடுமையாகச் சோதிக்கிறான். இங்கே ஆடு அடங்கிப் போனதால், அவனுக்குரிய வாகனமாகும் பாக்கியம் பெற்றது. தேவர்கள் முருகனை மேஷ வாகனனே வாழ்க! எனக்கூறி வாழ்த்தினர். யாகம் நடத்தி அதிர்ந்து போன நாரதர், முருகனிடம் ஓடோடி வந்தார். ஆடு முருகன் முன்னால் பெட்டிப்பாம்பாக நிற்பதைப்

பார்த்து, ‘இதென்ன அதிசயம். பசு ஆடானதும், அது உன்னைத் தேடி வந்ததும், எனக்கும் ஏதும் புரியவில்லையே என்றார்.’. முருகன் சிரித்தான். ‘நாரதரே ! தாங்கள் தவத்தில் உயர்ந்தவர். யாகத்தின் பலனை இந்த உலகுக்கு எடுத்துக் காட்டவே இத்தகைய நாடகம் ஒன்றை என் தந்தையின் ஏற்பாட்டால் நடத்தினேன்.

நீங்கள் யாகம் செய்த போது தோன்றிய இந்த ஆடு எனக்கு காணிக்கை ஆயிற்று. இதுபோன்ற சிறு காணிக்கையைக் கூட நான் பெரிய மனதுடன் ஏற்பேன். மனமார்ந்த பக்தி செய்ததாகக் கருதி, ஒன்றுக்கு பத்தாக பலனளிப்பேன். தாங்கள் தொடர்ந்து இந்த யாகத்தை செய்யுங்கள். யாகத்தில் தோன்றிய இந்த ஆட்டை எனக்கு பரிசளித்ததால், உங்களுக்கு நூறு யாகம் செய்த பலன் கிடைக்கும்’, என்றார்.

இன்னோரு வரலாரும் உண்டு. சிவபுராணத்தில் முருகனை பற்றிய கதை தான் அது. நாரதர் எங்கேயோ ஒடிப்போய்வீட்ட தன்னுடைய ஆட்டைப்பற்றிக் கேட்டார் ஒருமுறை. அதைக்கண்டு பிடிக்குமாறு தன்படையை அனுப்பினான் முருகன். அந்த ஆட்டை விஷ்ணு இருந்த இடத்தில் கண்டு அதை எடுத்து வந்தனர். முருகன் அதன் மீது அமர்ந்து உலகை வலம் வந்து திரும்பினான். நாரதர் அந்த ஆட்டை திருப்பித்தர வேண்ட ‘இனி ஆடுகளை பலிதர வேண்டாம்’ என கூறிவிட்டு எதற்காக ஆட்டை பலி கொடுத்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறிவிட்டதாக சொல்லி முடித்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அக்கினிக்கு வாகனம் ஆடு. அக்கினி சொருபமான முருகனுக்கு ஆடு வாகனம் பொருத்தம்தானே. இப்படியெல்லாம் தொடர்பு இருப்பதால்தான் மேஷ ராசிக்காரனான நான் என்னை அறியாமலே முருகனுடன் ஒன்றி யிருக்கிறேன் என்பது புரிந்தது

(இந்த ஆடு பற்றிய விஷயம் இணையத்திலே யாரோ ஒருவர் அளித்திருந்த செய்தியை நான் எழுதும் கட்டுரைக்கு வலு சேர்க்கவே இந்தக் கட்டுரையிலே சேர்த்தேன் இந்த விவரங்கள் அளித்தவருக்கு என் நன்றி)

இன்னும் கற்க வேண்டியது ஏராளமாக உள்ளது இதைத்தான் "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு " என்று ஔவை மூதாட்டி சொல்லிவிட்டுச் சென்றாள். ஆனால் ஔவையை விட நான் அறிஞனா என்ன.இல்லை என்பதை நன்கறிவேன்.

ஆனாலும் கற்றது கைமண்ணளவு என்பதையே என் மனம் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு கைப்பிடி மண்ணை எடுத்துப் பாருங்கள் அந்த ஒவ்வொரு மணல் துகளிலும் எத்தனை சக்திகள் இருக்கின்றன எத்தனை சரித்திரங்கள் இருக்கின்றன எத்தனை ரகசியங்கள் இருக்கின்றன எத்தனை வேதங்கள் அடங்கியுள்ளன எத்தனை பாகவத

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சிரோன்மணிகளின் பக்தி அடங்கியிருக்கிறது

எத்தனை போராட்டங்களின் சரித்திரம் இருக்கிறது எத்தனை மரங்கள் செடிகள் கொடிகளின் மூல விதையின் சக்தி இருக்கிறது என்றெல்லாம் அறிவோமா நாம்? அப்படி இருக்க கைப்பிடி மண்ணின் ஒரு துகளிலேயே இருக்கும் இத்தனை செய்திகளையே அறியாத நாம் எப்போது முழுமையான கைப்பிடி மண்ணின் ரகசியம் அறிவோம்? ஆயுட்காலம் போதாது மனிதர்களுக்கு ப்ரப்ஞ்ச ரகசியம் முழுவதையும் அறிய .

அப்படி இருக்கையில் எல்லாவற்றையுமே நான் கைக்கொண்டு விட்டேன் என்னை விஞ்ச இந்த பூவுலகிலே யாருமில்லை என்னும் இறுமாப்பு எதற்கு என்பதே என் வாதம் ஆய கலைகள் அறுபத்தி நான்கிலுமே ஒவ்வொரு கலையையும் தனித் தனியே ஆராய்ந்தால் ஒரு சதவிகிதம் கூட நாம் கற்கவில்லை என்பது புரியும்.

படைத்தவன் படைத்தான் ஆனால் அவன் கூட இறுமாப்பு எய்தவில்லை இத்தனை பெரிய ப்ரபஞ்சத்தை நான் படைத்தேன் என்று ஆனால் இத்தனை பெரிய ப்ரபஞ்சத்தின் ஒரு மணல் துளியின் மூலத்தைக் கூட இன்னமும் அறிய இயலாத அற்ப மானுடர்களாகிய நாம் கர்வம் கொள்கிறோம் ஏதோ எல்லாம் தெரிந்தாற்ப் போல்!

நமக்கு ப்ரும்மனின் படைக்கும் தொழில் நுணுக்கம் தெரிந்துவிட்டால், காக்கும் நராயணனின் காக்கும் தொழிலின் ரகசியம் புரிந்துவிட்டால் உலகைச் சமன் படுத்தும் உன்னதமான அழிக்கும் கடவுளான சிவனின் ப்ரபஞ்சத்தின் கனத்தை சமனப்படுத்தும் அற்புதமான கலையின் நுணுக்கத்தை நாம் அறிந்துவிட்டால் நம்மை பிடிக்கவே ஆளிருக்காது,

நம் கர்வம் உச்சத்தை தொடும் அதன் மூலமாக ப்ரப்ஞ்சம் அழிவை சந்திக்க நேரிடும் என்பதை உணர்ந்தே பாத்திரமறிந்து பிச்சையிடு என்னும் தத்துவத்தை நன்கு அறிந்த தெய்வங்கள் மானுடர்களுக்கு அந்த அறிய சக்திகளை அளிக்காமல் இருக்கின்றன தெய்வங்கள்

நுணுக்கமுணர்தல்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பல உள்ளர்த்தங்கள் இருக்கின்றன நாம் அறியாமலே .ஆகவே நாம் ஆழமாக ஆராயாமல் மேம்போக்காக நம் மனதிலே படுவதை உண்மையென நம்புகிறோம். காரணமில்லாமல் காரியம் இல்லை என்பார்கள் முன்னோர்கள். ஒவ்வொன்றிற்க்கும் தகுந்த காரணங்கள் உள்ளன,ஆனால் அதை அறியமுடியாத பேதையாக நாம் இருக்கிறோம் என்பதை மறந்து நாத்திகம் பேசுவதும் ஜாதகம் ஜோதிடம் எல்லாம் பொய்யென்று கூறித்திரிவதும் முறையல்லவே.

ஜ்யோதிடக் கலையை முழுமையாக ஆராய்ந்து ஸ்ரத்தையுடன் கற்று வந்தால் நல்லது ஜ்யோதிடத்தில் ப்ரச்சனை இல்லை ஆனால் கற்பவரிடம்தான் ப்ரச்சனை எனக்குத் தெரிந்து இது வரை எல்லா ஜ்யோதிடர்களும் நடந்ததை ஓரளவு சொல்கிறார்கள் ஆனால் வருங்காலத்தைக் கணிக்க எந்த ஜ்யோதிடராலும் இயலவில்லை ஆனால் ஜ்யோதிடத்தை முழுமையாகக் கற்றோரால் வருங்காலத்தையும் கணிக்க முடியும் என்பதே ஜ்யோதிடத்தின் முழுமை

வேலைக்கு சேர்ந்து சில நாட்கள் சென்ற பின் ஒரு நண்பரைச் சுற்றிலும் பல நண்பர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்ததைக் கவனித்துவிட்டு நானும் அந்தக் கூட்டத்தில் பங்கெடுக்க அவர்களை சமீபித்தேன். வாப்பா தம்பி வா உக்காரு உன் பேரு என்னா என்றார் நடு நாயகமாக உட்கார்ந்திருந்த ஒரு மூத்த நண்பர். சார் என் பேரு கிருஷ்ணமாச்சாரி, நான் வேலைக்கு சேந்து ஆறு மாதம் ஆச்சு என்றேன். அப்போதுதான் கவனித்தேன் அந்த நடு நாயகம் அங்கிருந்த அனைவருக்கும் உள்ளங் கையில் உள்ள ரேகைகளைப் பார்த்து ஜோதிடம் சொல்லிக் கொண்டிருந்தார். என் கையை நீட்டச் சொன்னார். கடந்த காலத்தைப் பற்றி எல்லோரும் சொல்வார்கள், என் வருங்காலத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா என்றேன். இங்க பார்ரா நான் கடந்த காலம் , வருங்காலம் எல்லாம் சொல்வேன் என்றார், சரி சொல்லுங்கள் என்றேன். நான் சொல்றது இருக்கட்டும் நீ உன் வருங்காலத்திலே என்ன ஆகப் போகிறாய் என்றார்.

நான் ஒரு நடிகனாவேன், இயக்குனராவேன், எழுத்தாளனாவேன் என்றேன். கொல்லென்று ஒரு சிரிப்பலை எழும்பியது அங்கே! இதோ பாரு தம்பி என்னோட முன்னோர்கள் ஜோதிடத்திலே வல்லவங்க, அவங்ககிட்டேருந்துதான் நான் இந்தக் கலையைக் கத்துகிட்டேன். ஆமாம் உனக்கு இந்தக் கலையிலே நம்பிக்கை இருக்கிறதா என்றார் நாயகம். எனக்கு இந்தக் கலையிலே நம்பிக்கை இருக்கிறது, ஆனால்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜோதிடம் சொல்பவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்றேன் . புரியலையே என்றார் நடுநாயகம்.

ஆய கலைகள் 64

இந்தக் கலை மிக நல்ல கலை, அதில் சந்தேகமில்லை, ஆனால் இந்தக் கலையைக் கற்றுக் கொள்பவர்கள் முழுமையாகக் கற்றுக் கொண்டு சொல்கிறார்களா என்பதுதான் என் சந்தேகம் என்றேன். எப்படி உனக்கு இந்த சந்தேகம் வந்தது என்றார் நடுநாயகம் .

ஆண்களுக்கு வலது கை ரேகையையும் பெண்களுக்கு இடது கை ரேகையையும் பார்த்துதான் கைரேகை ஜோதிடம் சொல்வார்கள், ஆனால் நீங்கள் இங்கே ஆண்களுக்கே இடது கை ரேகையைப் பார்த்து சொல்கிறீர்கள் என்றேன்.
மீண்டும் ஒரு முறை கொல்லென்று சிரிப்பு ஒலி கேட்டது,

இதோ பாரு எல்லாம் தெரிஞ்சா மாதிரிப் பேசாதே, இப்போ உன்னோட வலது கை ரேகையைப் பார்த்து நான் பலன் சொல்றேன் என்றார். ஐயா இப்போது மாலை 7 மணி, பொதுவாக இரவில் கை ரேகை ஜோதிடம் பார்க்கமாட்டார்கள், பார்க்கவும் கூடாது என்றேன்.

திகைத்துப் போனார் அவர் அவரிடம் நான் சொன்னேன் உங்களை எல்லாம் தெரிந்தவர் என்று காட்டிக் கொள்ள ஜோதிடக் கலையைப் பயன்படுத்தாதீர்கள். இங்கே இருப்பவர்கள் நீங்கள் கூறுபவைகளை உண்மையென்று நம்பி அதனால் ஏதேனும் அவதிக்குள்ளானால் அந்த அவதிக்குண்டான பலன் உங்களைச் சேரும்

, வீணாக பாவம் செய்யாதீர்கள் என்றேன். நீ இன்னும் என்னைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை அரைகுறையாக எதையோ தெரிந்து கொண்டு கதையளக்கிறாய். சரி நாளை நமக்கெல்லாம் விடுமுறை அப்போது உன் கையைப் பார்த்து நான் பலன் சொல்கிறேன் , அப்போது தெரிந்து கொள்வாய் என் திறமையைப் பற்றி என்றார்.

இன்று அமாவாசை நாளைக்கு ப்ரதமை, ப்ரதமையில் யாரும் ஜ்யோதிடம் , ஜாதகம் , கைரேகை பார்க்க மாட்டார்கள் என்றேன். ஜ்யோதிடம் ,ஜாதகம் கைரேகை போன்றவைகளை நல்ல நேரத்தில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தான் பார்க்க வேண்டும்.

அதுவும் குறிப்பிட்ட நல்ல நாளில் வெற்றிலை பாக்கு போன்றவைகளை காணிக்கையாக வைத்து முதலில் ஜ்யோதிடம் பார்ப்பவருக்கு அளித்துவிட்டு அவரையே நம்பி, மனதில் உறுதியுடன் , நம்பிக்கையுடன் கேட்பவர் கேட்டால்தான் பலிக்கும் என்றேன்.

அது மட்டுமல்ல கொண்டு வருபவரிடம் வெற்றிலை பாக்கு இவைகளை வாங்கி அந்த வெற்றிலைகளை முதலில் எண்ணுவார்கள். அதன் பிறகு தனித்தனியே பிரித்து அந்த வெற்றிலைகளை பின் புறமாக அமைந்திருக்கும் நரம்புகளைப் பரிசோதிப்பார்கள் என்றேன்.

வெற்றிலை ரகசியம்

இதோ பார்றா கைரேகையைப் பாருடான்னா வெற்றிலையோட நரம்புகளைப் பாப்பாங்களாம் என்று எக்காளமிட்டு சிரித்தார் நாயகம். ஆமாம் ஐயா அந்த நரம்புகள் அமைப்பில் வித்யாசம் உண்டு. வெற்றிலையின் காம்பின் பகுதியிலிருந்து சீரான நடு நரம்பும் ,அந்த நடு நரம்பிலிருந்து பிரியும் பக்கவாட்டு நரம்புகள் தொடங்கும் ஒவ்வொரு இடத்திலிருந்தும் வெற்றிலையின் வால் பக்கம் சேரும் இடம் வரையில் சீராக, அமைந்து

முடியுமிடத்தில் இரண்டு ஒரு புள்ளியில் சந்தித்தால்,சீரான. ஒரு புள்ளியில் சந்தித்தால்
அது பெண் வெற்றிலை அப்படி இல்லாமல் தொடக்கத்திலிருந்து நரம்புகள் சீராக இல்லாமல் வெற்றிலையின் வால் பக்கத்தில் அந்த நரம்புகள் மேலும் கீழுமாய் சந்தித்தால் அவை ஆண் வெற்றிலை என்றும் சொல்வார்கள். என்றேன் நான்

ஆமாம் உனக்கு என்னா வயசு என்றார் நாயகம், நான் சொன்னேன் 20 முடிந்து ஆறு மாதங்கள் ஆகின்றன என்றேன். அதுக்குள்ள வெற்றிலையிலேயே ஆண் பெண் விதயாசம் பாக்க ஆரம்பிச்சிட்டியா உருப்பட்டாப் போலத்தான் என்றார் நாயகம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஐய்யா நான் பார்க்கிறேன் என்று சொல்லவில்லை ஜோதிட விவரமறிந்தவர்கள் இதையெல்லாம் கூர்ந்து கவனிப்பார்கள் என்று சொன்னேன்.

ஓஹோ சரி சரி நானும்தான் கேக்கறேன் உனக்குத் தெரிந்ததை யெல்லாம் சொல்லு , நாங்க நம்புவோம் என்று நக்கலடித்தார் நாயகம். நானும் அமைதியாக அப்படியே ஐயா சொல்கிறேன் நம்புவதும் நம்பாததும் உங்கள் இஷ்டம்.

இப்படி நாம் கொண்டு செல்லும் வெற்றிலைகளை நம்மிடம் பேசிக் கொண்டே நமக்கே தெரியாமல் அவைகளில் பெண் வெற்றிலை எவ்வளவு, ஆண் வெற்றிலை எவ்வளவு என்று எண்ணிக்கையை மனதில் வைத்துக் கொள்வார்கள்.

அதில் பெண் வெற்றிலைகள் எவ்வளவு ஆண் வெற்றிலைகள் எவ்வளவு என்று எண்ணி அந்த எண்ணிக்கையை மனதில் கொண்டு பலன்களை சொல்வர் என்றேன்..

ஆண் வெற்றிலையும் பெண் வெற்றிலையும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வெற்றிலை என்பது வெற்று இலை அல்ல, விஷயமுள்ள இலை என்பது என் அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். கும்பகோணத்து மக்கள் வெற்றிலை போடும் அழகை ரசித்திருக்கிறீர்களா! நல்ல விருந்தை உண்டுவிட்டு, சாவகாசமாக திண்ணையில் காற்றாட வந்து உட்கார்ந்து இடுப்பில் வேட்டி மடிப்பில் இருக்கும் அந்தச் செல்லத்தை ,அந்த வெற்றிலைப் பெட்டியை எடுத்து கனிவோடு ஒரு முறை அதைப் பார்த்துவிட்டு,

கையால் அன்பாக இதமாக அந்தப் பெட்டியைத் தடவிக் கொடுத்து விட்டு, பெட்டிக்கு வலிக்காமல் மெல்லத் திறந்து அதன் உள்ளே இருக்கும் வெற்றிலையை, ஒவ்வொன்றாக எடுத்து உள்ளங்கையால் சுத்தமாக ,இதமாகத் தடவி, வெகு லாவகமாக மனதுக்கு இதமான சொற்களை, கலைகளை , ஆராய்ந்து கொண்டே, சங்கீத ஞானத்தையும் விவரித்துக்கொண்டே, கூடவே சில குறும்புக்காரர்கள்.

சங்கீதம் பாடிய பெண்மணியின் சாரீரத்தையும் ,கூடவே சரீரத்தையும் பற்றி மிக லாவகமாக நுணுக்கமான சொற்களால் குறும்புடன் ஸ்லாகித்துக்கொண்டே

இதமாக சுண்ணாம்பை எடுத்து வெற்றிலையில் தடவி, லாவகமாக

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வெற்றிலையை பின் பக்கமாக மடித்து நடு நரம்பில் மடித்து நடு நரம்பை மட்டும் கிழித்து, மடித்து கையில் வைத்துக்கொண்டு, மணக்கும் தூள் பாக்கை வாயில் போட்டுக்கொண்டு, மடித்த வெற்றிலையை வாயில் போட்டு வெற்றிலைக்கு வலிக்காமல் இதமாக மென்று அதன் சாறை வாயில் குதப்பிக்கொண்டே அப்படியே ஊரிலுள்ள அத்தனை பேரின் அந்தரங்கத்தையும் போட்டுக் கடித்து குதப்பிக் கொண்டே சுவையாக பன்னீர் புகையிலையையும் வாயில் போட்டு அதோடு சுவைத்து கடைவாயில் அதை அடக்கிக்கொண்டு சிவந்த உமிழ் நீர் வழிய எதிரே இருப்பவர்மீது தெறிக்காமல் பேசும் நளினம் இருக்கிறதே அடடா!

வெற்றிலைச் செல்லம்

இத்தனை கலைகளும் அந்த வெற்றிலைப் பெட்டியில்தான் இருக்கிறது என்று நம்பும் அவர்களுக்கு இந்த வெற்றிலைப் பெட்டி செல்லம்தான். வெற்றிலைப் பெட்டி செல்லமாக இருக்கலாம், ஆனால் வெற்றிலையே செல்வம் என்று நாம் உணர்வோம். வீட்டில் வெற்றிலைக் கொடி வைத்து அந்தக் கொடி நன்றாக வளர்ந்தால் செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை. தேனி மாவட்டம் பெரியகுளம், ஜெயமங்கலம், மேல்மங்கலம், வடுகபட்டி, சில்வார்பட்டி, நல்லகருப்பன்பட்டி, பெரியகுளம் கீழவடகரை, தெய்வேந்திரபுரம், தாமரைக்குளம் மற்றும் போடி, சின்னமனூர் பகுதியில் அதிக அளவில் வெற்றிலைக் கொடி பயிரிடப்படுகிறது.

வெற்றிலையில் எத்தனை ரகம் இருக்கிறது என்று பார்த்தால் கருப்பு வெற்றிலை அல்லது கார வெற்றிலை என்னும் கும்பகோணத்து கொழுந்து வெற்றிலை ஒரு ரகம். கம்மாறு வெற்றிலை, கற்பூரவெற்றிலை மற்றும் சாதாரண வெற்றிலை என்பன.கற்பூர மணத்துடன் சறிது காரமாகவும் இருப்பது கற்பூர வெற்றலையாகும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வெற்றிலைக்கு நல்ல மணமும் , காரமும் உண்டு. கருப்பு நிறமுடன் நல்ல காரமாக இருப்பது கம்மாறு வெற்றிலை. அகத்தி மரங்களை இடையில் வளர்த்து அதில் வெற்றிலைக் கொடிகளைப் படர விடுவார்கள். சில வெற்றிலைகள் நன்றாகப் படர்ந்து பெரியதாக வளரும், சில வெற்றிலைகள் சிறு வடிவமாய் இருக்கும் ,பெரிதாக வளராது.

பொதுவான குணம். சீதம் நீக்கும், வெப்பம் தரும், உமிழ்நீர் பெருக்கும், பசி உண்டாக்கும், பால் சுரக்க வைக்கும், காமத்தைத் தூண்டும். நாடி நரம்பை உரமாக்கும், வாய் நாற்றம் போக்கும். வெற்றிலைச் சாறு சிறுநீரைப் பெருக்குவதற்கும் பயன்படுகிறது. வெற்றிலைச்சாற்றுடன் நீர் கலந்த பாலையும், தேவையான அளவு கலந்து பருகி வர நீர்ச்சுருக்கு என்னும் நோய் குணமாகும்.

வெற்றிலையில் விளக்கெண்ணெய் தடவி அதை அடுப்பில் காயவைத்து லேசான சூட்டுடன் குழந்தைகளின் மார்பில் பரப்பினால் நாள்பட்ட சளி கரைந்து குழந்தை சுகமாக மூச்சுவிடும். வயிற்றுப் பொறுமல் மந்தம் போன்றவைகளுக்கு இதே முறையில் வெற்றிலையை வாட்டி வயிற்றில் இட்டால் சற்று நேரத்தில் குழந்தை வலி நீங்கிச் சிரிக்கும்

வெற்றிலை மகத்துவம்

மேலும் வெற்றிலைச் சாறுக்கு தொண்டையிலுள்ள குரல் நாளங்களைச் சரிப்படுத்தும் குணம் உண்டு, அதனால் குரல் வளமாகும் . அதனால்தான் இசைக்கலைஞர்கள் வெற்றிலை போடும் பழக்கம் மேற்கொள்ளுகிறார்கள்.

மன்னருக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்க அடைப்பைக் காரர்கள் என்று ஒரு வேலையாள் உண்டு. அவர்கள் வெற்றிலையை பின்பக்கமாக மடித்து நடு நரம்பு நீக்கி அளவாக சுண்ணாம்பு தடவி தேவையான பாக்கை அதிலிட்டு மன்னர்களுக்கு சுவைக்கக் கொடுப்பார்கள்.

தாம்பூலத்தில் பயன்படும் வெற்றிலை இல்லாத வைபவமே கிடையாது. இன்று வரை வெற்றிலை இல்லாத வைபவங்களோ, பண்டிகைகளோ கிடையாது. வெற்றிலையில் மை தடவிப் பார்த்து குறி சொல்லுபவர்கள் உண்டு. திருமண சம்பந்தத்தை உறுதி செய்ய வெற்றிலை பாக்கு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வைத்து தட்டு மாற்றிக்கொண்டு தொடங்குவார்கள்.

வெற்றிலையில் ஒரு ரகசியம் உண்டு. நல்ல நாட்கள் பார்க்கவோ, திருமண சம்பந்தம் பேசவோ நாம் ஜோசியரிடம் செல்லும்போது நாம் வெற்றிலை அவரிடம் அளித்தால், அவர்கள் எத்தனை வெற்றிலை நாம் கொண்டு சென்றோம் என்பதை எண்ணியே நாம் நினைத்த காரியம் நடக்குமா நடக்காதா என்று கூறிவிடுவார்கள்.

அது மட்டுமல்ல வெற்றிலையின் அமைப்பில் கிளை நரம்புகள் வெற்றிலையின் இருபக்கத்திலும் சமமாகப் பரவி நடு நரம்போடு வந்து இணையும் வடிவத்தை வைத்துக்கொண்டே அந்த வெற்றிலை ஆண் வெற்றிலையா ,அல்லது பெண் வெற்றிலையா என்று கண்டறியும் அறிஞர்கள் நம்மிடையே உண்டு அப்படி கண்டு பிடித்து பெண் வெற்றிலை அதிகமாக இருந்தால் அதை வைத்து வந்தவரின் காரியம் நடக்க சாத்தியக் கூறுகள் எவ்வளவு சதவிகிதம் என்பதையும் கண்டறிவார்கள்.

பெண் வெற்றிலை அதிகமாயிருந்தால் அதை சக்தியின் வடிவம் என்பர். காரிய சித்திக்கு அதிக எண்ணிக்கை கொண்ட பெண் வெற்றிலை சக்தி கொடுக்கும் என்பது நம்பிக்கை.பெண் வெற்றிலையை சக்தியின் வடிவம் என்று சொல்வார்கள்.

“அந்ததை அடைக்காய் தின்பதில் ஊறு
முதல் நீர் நஞ்சாம்-அதி பித்தம்
இரண்டாவதூறு நீரே-கடையமிர்தம்
மூன்றாவதூறு நீர் தான்
கனமதுர நான்காவதூறு மந்நீர்
மடையெனவே ஐந்தாறிற் சுரந்துள் ஊறி
வருநீர் களைச் சுகித்து
தடையுருப் பித்தமொடு மந்த நோயும்
தளர்பாண்டு நோயும் உண்டாம் தரம் சொன்னோம்.””

என்று தேரையர் என்னும் சித்தர் எழுதியிருக்காரு என்றேன் .அடேங்கப்பா எங்கே படிச்சே இதெல்லாம் என்று என்னைச் சமாளிக்கும் விதமாக தன் தோல்வியை சமாளித்தார் நடுநாயகம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு மூன்றும் சேரும்போது ஏற்படும் ரசாயன மாற்றம் அதையும் நம் பற்களால் கடிக்கும்போது அதிலே சேரும் நம் உமிழ்நீரும் சேர்ந்து ஏற்படும் ரசாயன மாற்றத்தை வெளியே இந்த வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு மூன்றையும் அரைத்தாலும் கிடைக்காது அது நம் உமிழ்நீரின் விசேஷம் அப்படி உமிழ்நீரால் ஏற்படும் விசேஷமே நம் வயிற்றில் சென்று நம் உடலிலே கால்சியம் போன்ற புரதங்களையும் ஜெரிமானம் ஆவதற்குண்டான வகைகளையும் செய்கிறது அதனால் ஜெரிமானமும் எலும்புகளுக்கு தேவையான கால்ஷியமும் எளிதே கிடைக்கிறது.

பெரியவர்கள் சொன்னதில் தவறில்லை சிறு வயதில் வெற்றிலை பாக்கு போடும் வழக்கம் கூடவே கூடாது அது அதற்கென்று ஒரு பருவ்சம் உள்ளது அதைத் தவறாக நினைக்க வேண்டாம். வெற்றிலை எவ்வளவு இருந்தால் எவ்வளவு பாக்கு இருக்க வேண்டும் எவ்வளவு சுண்ணாம்பு இருக்க வேண்டும் என்று கூடத் தெரியாத வயதில்வெற்றிலை போட்டால் திரு கிருஷ்ண சேஷாத்ரி அவர்கள் சொன்னது போல் ஒன்று

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வாய் சிவக்கும் இல்லையேல் கண் சிவக்கும் ,இரண்டுமே ஆபத்தானவை, மேலும் பாக்கை அதிகமாக போட்டால் சோகை நோய் வரும் , வெற்றிலை போடுவதில் பல முறைகள் உள்ளன, அதை விலாவாரியாகப் பார்ப்போம் ஏன் விலா வாரியாகப் பார்க்க வேண்டுமென்றால் நம் விலா எலும்புகள் போல் வெற்றிலையில் இருக்கும் விலா ந்ரம்புகளில் ஏகப்பட்ட செய்திகள் உள்ளன, மேலும் வெற்றிலை அடிப்பாகத்தில் ஒரு பூச்சி இருக்கும் அதை நீக்காமல் போட்டால் உயிருக்கே ஆபத்தாய் முடியும், இன்னும் ஏராளமான செய்திகள் உள்ளன.

வெற்றிலை செடி என்பது ஆண்டு முழுவதும் படர்ந்து குட்டையான பல தண்டுவேர்களை கொண்ட ஒல்லியான செடியாகும். இந்தியாவில் தமிழ் நாடு, மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், ஒரிசா போன்ற மாநிலங்களில் வெற்றிலைகள் பயிரிடப்படுகிறது வெற்றிலை... `Piper betle'' என்ற தாவரவியல் பெயர்கொண்ட இதற்கு தாம்பூலம், நாகவல்லி, வேந்தன், திரையல் போன்ற பல பெயர் உண்டு. வெற்றிலையில், கம்மாறு வெற்றிலை, கற்பூர வெற்றிலை, சாதாரண வெற்றிலை போன்ற வகை உள்ளது. வெற்றிலையில் அதன் இலையும் வேரும் மருத்துவ பலன்களை தரக்கூடியவை. கொடி வகையை சேர்ந்த இது, இந்தியாவில் வெப்பமான இடங்களிலும் சதுப்பு நிலங்களிலும் வளரக்கூடியது.இதில், கால்சியம், இரும்புச்சத்து அதிகம் உள்ளன. வீரியம்மிக்க நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட சவிக்கால் (Chavicol) என்னும் பினைல்புரோபின் (Phenylpropene) பொருள் உள்ளது. இது, உடலுக்கு உஷ்ணம் தரக்கூடியது. வெற்றிலையை தீயில் வாட்டி, அதனுள் ஐந்து துளசி இலைகளை வைத்து, கசக்கி பிழிந்து சாறு எடுத்து, 10 மாத குழந்தைக்கு காலையும் மாலையும் 10 சொட்டு வீதம் கொடுத்து வந்தால் சளி, இருமல் குணமாகும். வெறும் இலையை தீயில் வாட்டி, மார்பில் பற்றுப் போட்டுவந்தால் சளி குறையும். விதைப்பையில் ஏற்படும் வலி, வீக்கம் மற்றும் கீல்வாத கோளாறுகளுக்கு இதன் இலையை அரைத்து கட்டிவந்தால் கைமேல் பலன் கிடைக்கும்.

* கம்மாறு வெற்றிலைச்சாறு 15 மி.லி எடுத்து அதனுடன் வெந்நீர் கலந்து குடித்து வந்தால், வயிற்று உப்புசம், மந்தம், தலைவலி, நீரேற்றம், வயிற்றுவலி போன்றவை குணமாகும்.

* இலையில் ஆமணக்கு எண்ணெய் தடவி வாட்டி, கட்டிகளின் மேல்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வைத்து கட்டினால் கட்டிகள் உடைந்து சீழ் வெளியாகும். இதை இரவில் கட்டுவது நல்லது. தேள் கடிப்பதால் ஏற்படக்கூடிய விஷத்தை முறிக்க இரண்டு இலையுடன் ஒன்பது மிளகு சேர்த்து நன்றாக மென்று விழுங்க வேண்டும். அத்துடன் தேங்காய்த்துண்டுகள் சிலவற்றையும் மென்று சாப்பிட்டால், கைமேல் பலன் கிடைக்கும். தேள் கடி மட்டுமல்ல, விஷப்பூச்சிகள் எதுவும் கடித்தால் இதேபோல செய்து, நோய் பாதிப்பிலிருந்து நம்மை காத்துக்கொள்ளலாம்.

வெற்றிலை வைத்தியம்

* வெற்றிலை 4, வேப்பிலை ஒரு கைப்பிடி, அறுகம்புல் ஒரு கைப்பிடி எடுத்து சிறிது சிறிதாக நறுக்கி 500 மி.லி தண்ணீர்விட்டு, கொதிக்கவைத்து 150 மி.லி ஆக வற்றியதும் வடிகட்டி, தினமும் மூன்று வேளையும் உணவுக்கு முன்னர் 50 மி.லி குடித்துவந்தால்சர்க்கரையின் அளவு சீராகும். வாயை, சிவக்க வைக்க கூடியது மட்டுமல்ல, வெற்றிலை. பல நோய்களை தீர்க்கும் அற்புதமான மருந்தாக பயன்படுகிறது. வெற்றிலையில், கால்சியம், இரும்பு சத்து அதிகளவில் உள்ளன. கெடினின், சாவிகால், பைரோ கெடிசால், யூஜினால், எக்ஸ்ட்ராகால், ஆக்சாலிக் அமிலம் போன்ற வேதிக் பொருட்கள், வெற்றிலையின் மருத்துவ குணங்களுக்கு அடிப்படையாக உள்ளது.

நரை, திரை, மூப்பு, சாக்காடு போன்றவற்றை நீக்கி, உடலை என்றும் நோயின்றி காக்கும் தன்மைகொண்ட கற்பக மூலிகை என்று கூட சொல்லாம்

* வெற்றிலை, உமிழ்நீரை பெருக்கும், பசியை உண்டாக்கும், பால் சுரக்க வைக்கும், நாடி நரம்புகளை உரமாக்குவதுடன், காமத்தையும் தூண்டும். இது, இயற்கை தந்த அற்புதம்.

இதன் பயன்பாடு 2000 ஆண்டு காலமாக இருந்து வருகிறது. அதற்கு ஆதாரமாக இலங்கையை சேர்ந்த பழமையான வரலாற்று புத்தகமான மகாவஸ்மாவில் (உலகத்தின் பழமையான மொழிகளில் ஒன்றான பாலி மொழியில் எழுதப்பட்டதாகும்) அதனை பற்றிய குறிப்புகள் உள்ளது.வெற்றிலையில், வெற்றிலையில் 84.4% நீர்ச்சத்தும், 3.1% புரதச் சத்தும், 0.8% கொழுப்புச் சத்தும் நிறைந்துள்ளது. இதில் கால்சியம்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கரோட்டின், தயமின், ரிபோபிளேவின் மற்றும் வைட்டமின் சி உள்ளது. கலோரி அளவு 44% சத்துக்கள் உள்ளது.பழங்காலத்தில் இருந்தே இதனை வாசனை ஊக்கியாகவும், வாயுவை தடுக்கும் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. சுரத்தல் மற்றும் இரத்த கசிவு போன்றவற்றை தடுத்து நிறுத்தி, பாலுணர்ச்சி ஊக்கியாகும் விளங்குகிறது

வெற்றிலையில் இருந்து வரும் சாற்றில்பாலில் கலந்து குடித்தால், சிறுநீர் கழிவதில் எந்த பிரச்சனையும் ஏற்படாது.

கீல்வாதம் மற்றும் விரையழற்சி போன்றவற்றிற்கு சிகிச்சை அளிக்க வெற்றிலைகள் பயன்படுத்தப்படுகிறது. அதிலும் வெற்றிலையின் மேல் விளக்கெண்ணெயை தடவி, அதனை கொப்பளங்கள் ஏற்பட்ட இடங்களில் தடவினால், அவைகள் உடைபட்டு சீழ் வடிந்து ஆறிவிடும். சில மணிநேரங்களுக்கு ஒரு முறை இலைகளை மாற்றியாக வேண்டும். வெற்றிலை அல்லது அந்த இலைகளின் சாற்றை தேங்காய் எண்ணெய் போன்ற எண்ணெய்யோடு கலந்து, இடுப்பில் ஒத்தடம் கொடுத்தால், கீழ் முதுகு வலிக்கு நல்ல பலனை அளிக்கும்.

வெற்றிலைகளை எண்ணெயில் நனைத்து, அதனை மார்பகங்களில் தடவினால், பால் சுரக்க உதவும். அதனால் பால் சுரப்பது அதிகரிக்க இதனை பயன்படுத்தலாம்.

இருமல் மற்றும் மூச்சு விடுவதில் பிரச்சனை இருந்தால், வெற்றிலையை கொண்டு அவைகளை சரிசெய்யலாம். அதற்கு வெற்றிலையை கடுகு எண்ணெயில் நனைத்து, அதனை நெஞ்சில் தடவுங்கள். இல்லையெனில் நசுக்கிய வெற்றிலை பழங்கள் அல்லது பெர்ரி பழங்களை தேனுடன் கலந்து குடித்தால், இருமலுக்கு நிவாரணியாக விளங்கும்.

வெற்றிலையில் இருந்து எடுக்கப்படும் சாற்றை தேனுடன் கலந்து குடித்தால், நரம்பு பிரச்சனைகள், தளர்ச்சி, ஆற்றலிழப்பு போன்றவைகளுக்கு அவை மருந்தாக விளங்கும்

வெற்றிலையில் வலி நீக்கும் குணமும், குளிர்ச்சியை உண்டாக்கும் குணமும் உள்ளதால், அவைகளை தலையில் வைத்துக் கொண்டால், எவ்வளவு தலை வலி வந்தாலும், அவை பறந்தோடிவிடும். வெற்றிலைகளை சாறெடுத்து, அதனை புண்ணின் மீது தடவி, பின் வெற்றிலையை கொண்டு கட்டிவிடுங்கள். 2-3 நாட்களில் உங்கள் புண்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆறிவிடும்.

வெற்றிலையுடன் சேர்த்து ஐந்து மிளகை கடித்துத் தின்றால் எட்டு வாரங்களில் உடல் எடை குறையும் ஊளைச்சதை குறையும் வாதம், பித்தம், கபம் என்ற மூன்றும் சரியான விகிதத்தில் உடலில் இருந்தால் நோய் வராது என்பதை விட நோய் எதிர்ப்பு சக்தி உடலுக்கு கிடைக்கிறது. பாக்கில் இருந்து கிடைக்கும் துவர்ப்பு பித்தத்தை கட்டுப்படுத்தும், சுண்ணாம்பில் உள்ள காரம் வாதத்தை போக்கவல்லது. வெற்றிலையில் உள்ள உரைப்பு கபத்தை நீக்கி விடும். இதனால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து விடும்.இதுமட்டுமல்லாது தாம்பூலத்தோடு சேர்க்கும் ஏலம், கிராம்பு, ஜாதிபத்திரி போன்றவைகள் வாயில் உள்ள கிருமிகளை கட்டுப்படுத்தும் ஆற்றலை பெற்றுள்ளது.

வெற்றிலையை வாயில் இட்டு மெல்லுவதால், ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. ஜீரண மண்டலம் நன்றாக செயல்பட்டால் பல நோய்கள் நம்மை அண்டாது. இதற்கு தான் விருந்துகளை முடித்ததும் வெற்றிலை போடும் பழக்கம் நமது மரபில் உள்ளது.

தாம்பூலம் போடுவதற்கென்று தனிப்பட்ட நெறிமுறை நமது முன்னோர்களால் வகுக்க பட்டிருக்கிறது. சித்தவைத்தியம் மற்றும் ஆயுர்வேதத்தின் படி மனிதர்களுக்கு நோய் ஏன் வருகிறது என்பதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்கும் போது வாதம், பித்தம், கபம் (சிலேத்துமம்)" போன்றவைகள் சரியான விகிதத்தில் இல்லாமல் கூடும் போதோ குறையும் போதோ நோய் வருகிறதாம். இது முற்றிலும் சரியான காரணமாகும்.

தாம்பூலம் தரிக்கும் ரகசியம்

காலையில் சிற்றுண்டிக்கு பிறகு போடும் தாம்பூலத்தில் பாக்கு அதிகமாக இருக்க வேண்டும். காரணம் மதிய நேரம் வந்து வெப்பம் அதிகமாகும் போது உடம்பில் பித்தம் ஏறாமல் அது பாதுகாக்கும். அதே போல மதிய உணவிற்கு பிறகு சுண்ணாம்பு சத்து அதிகம் எடுத்துகொள்ள வேண்டும் அது உணவில் உள்ள வாதத்தை அதாவது வாயுவை கட்டுபடுத்தும். இரவில் வெற்றிலையை அதிகமாக எடுத்துகொண்டால் நெஞ்சில் கபம் தங்காது இந்த முறையில் தான் தாம்பூலம் தரிக்க வேண்டும் என்பது நமது முன்னோர்களின் கட்டளை.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இதை மீறும் போது தான் சிக்கல் வருகிறது.

தாம்பூல பிரசன்னம்:

அமர கோசம் நூலின் கருத்துப்படி தாம்பூலம் என்று அழைக்கப்படும் வெற்றிலை கொடி நாகலோகத்தில் உண்டானது அதற்கு நாகவல்லி என்று பெயர்.அது மகா லட்சுமி அம்சமாகும்.

தாம்பூலத்தின் பின்பக்க இடதுபுறமும், தாம்பூல மத்திய பாகமும் இவை இரண்டும் சிவபெருமனைக் குறிக்கும்.

வெளிப்பக்கம்(உள்) வெற்றிலையின் மத்திய பாகம் சந்திரனைக் குறிக்கும்.

ஜோதிட வல்லுநர்கள் 6 அங்குல நீளம் 2 அங்குல உள்ள வெற்றிலையின் அடிப்படையில் பிரச்சனைக்கு உரிய பதிலைக் கூறுகிறார்கள்.

தாம்பூல பிரசன்னம் பார்க்கும் விதம்:

முதலில் பிரசன்னம் பார்க்க வருபவரிடம் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், கற்பூரம் ஊதுபத்தி வாங்கிவரும்படி கூறவும்.

குறிப்பு : வெற்றிலை வாங்கிவரும்பொழுது 12 வெற்றிலைக்கு மேல் வேண்டும். எனவே ஜோதிடர் வெற்றிலையின் விலையை அறிந்து வாங்கி வரும்படி கூறவும்.

வெற்றிலையின் எண்ணிக்கையை 2ஆல் பெருக்கிறோம்.

பின்பு இந்த உடல் 5 பூதங்களால் ஆனது என்பதைக் குறிக்க 5ஆல் பெருக்குகிறோம்.

பின்பு இந்த உடல் ஆண், பெண் இணைந்து பஞ்ச பூதங்களால் ஆன பின்பு மனிதனாக பிறக்கிறது என்பதைக் குறிக்க 1யைகூட்டுகிறோம்.

பிறகு, அந்த மொத்த எண்ணிக்கையை ஏழு கிரகங்களைக் குறிக்கும் எண்ணாகிய 7ஆல் வகுக்கிறோம். வரும் மீதியானது பிறந்த குழந்தையின் ஆத்மா கிரகமாகும். அது உள்ள இடமே லக்னம் அல்லது தாம்பூல லக்னம் ஆகும். அவ்வாறு மொத்த எண்ணிக்கையை 7ஆல் வகுத்து வரும் மீதி, தாம்பூல கிரகமாகும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ராசிகளும் பரிகாரங்களும்

மேஷம்:- வெற்றிலையில் மாம்பழம் வைத்து செவ்வாய்கிழமை முருகனை வழிபட்டு சாப்பிட துன்பங்கள் அகலும்.

ரிஷபம்:- வெற்றிலையில் மிளகு வைத்து செவ்வாய் கிழமை ராகுவை வழிப்பட்டு சாப்பிட்டால் துன்பம் விலகும்.

கன்னி:- வெற்றிலையில் மிளகு வைத்து வியாழக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் தீரும்.

மிதுனம்:- வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து புதன்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் விலகும்.

கடகம்:- வெற்றிலையில் மாதுளம்பழம் வைத்து வெள்ளிக்கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கஷ்டம் விலகும்.

சிம்மம்:- வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து வியாழக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கஷ்டம் விலகும். துலாம்:- வெற்றிலையில் கிராம்பு வைத்து வெள்ளிக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் தீரும்.

விருச்சிகம்:- வெற்றிலையில் பேரிச்சம்பழம் வைத்து செவ்வாய் கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துயரம் தீரும்.

தனுசு:- வெற்றிலையில் கற்கண்டு வைத்து வியாழக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

மகரம்:- வெற்றிலையில் அச்சு வெல்லம் வைத்து சனிக்கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

கும்பம்:- வெற்றிலையில் நெய் வைத்து சனிக்கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

மீனம்:- வெற்றிலையில் சர்க்கரை வைத்து ஞாயிற்றுக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் நோய் தீரும்.

அமரகோசம்

அமர கோசம் நூலின் கருத்துப்படி தாம்பூலம் என்று அழைக்கப்படும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வெற்றிலை கொடி நாகலோகத்தில் உண்டானது அதற்கு நாகவல்லி என்று பெயர்.அது மகா லட்சுமி அம்சமாகும்.

தாம்பூலத்தின் பின்பக்க இடதுபுறமும், தாம்பூல மத்திய பாகமும் இவை இரண்டும் சிவபெருமனைக் குறிக்கும்.

வெளிப்பக்கம்(உள்) வெற்றிலையின் மத்திய பாகம் சந்திரனைக் குறிக்கும்.

ஜோதிட வல்லுநர்கள் 6 அங்குல நீளம் 2 அங்குல உள்ள வெற்றிலையின் அடிப்படையில் பிரச்சனைக்கு உரிய பதிலைக் கூறுகிறார்கள்.

தாம்பூல பிரசன்னம் பார்க்கும் விதம்:

முதலில் பிரசன்னம் பார்க்க வருபவரிடம் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், கற்பூரம் ஊதுபத்தி வாங்கிவரும்படி கூறவும்.

குறிப்பு : வெற்றிலை வாங்கிவரும்பொழுது 12 வெற்றிலைக்கு மேல் வேண்டும். எனவே ஜோதிடர் வெற்றிலையின் விலையை அறிந்து வாங்கி வரும்படி கூறவும்.

1) இவைளை வாங்கி வந்தவுடனே பிரசன்னம் பார்க்க வந்தவரிடம் அவருடைய குலதெய்வம், வண்ங்கும் தெய்வத்தை வணங்கிக் கொள்ளும்படி கூறவும்.

2) பிறகு ஜாதகர் கொண்டுவந்த வந்த வெற்றிலையின் எண்ணிக்கையை முதலில் இரண்டால் பெருக்க வேண்டும்.

3) பெருக்கி வந்த தொகையை 5ஆல் பெருக்க வேண்டும்.

4) பெருக்கி வந்த தொகையுடன் 1யை கூட்டிக் கொள்ள வேண்டும்.

5) வரும் மொத்த தொகையை 7ஆல் வக்க வேண்டும். வரும் மீதி.........

1 எனில் சூரியன்

2 எனில் சந்திரன்

3 எனில் செவ்வாய்

4 எனில் புதன்

5 எனில் குரு

6 எனில் சுக்கிரன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

7 எனில் சனி எனக்கொள்ள வேண்டும்.

இது என்ன சித்திர குப்தர் கணக்கு என யோசிக்கிறீர்களா? (வெற்றிலையின் எண்ணிக்கை) எண்ணை 2ஆல் பெருக்க வேண்டும். பின்பு அத்தொகையுடன் 1யை கூட்ட வேண்டும்.இதுஏன்? என வாசகர்கள் மனதில் ஐயம் ஏற்படும். அதற்கான பதில் இதோ.

ஒரு குழந்தை பிறக்க, தாய், தந்தை ஆகிய இருவர் இணைய வேண்டும். எனவே தான் பிரசன்னம் பார்ப்பவர் கொண்டுவரும் வெற்றிலையின் எண்ணிக்கையை 2ஆல் பெருக்கிறோம்.

பின்பு இந்த உடல் 5 பூதங்களால் ஆனது என்பதைக் குறிக்க 5ஆல் பெருக்குகிறோம்.

பின்பு இந்த உடல் ஆண், பெண் இணைந்து பஞ்ச பூதங்களால் ஆன பின்பு மனிதனாக பிறக்கிறது என்பதைக் குறிக்க 1யைகூட்டுகிறோம்.

பிறகு, அந்த மொத்த எண்ணிக்கையை ஏழு கிரகங்களைக் குறிக்கும் எண்ணாகிய 7ஆல் வகுக்கிறோம். வரும் மீதியானது பிறந்த குழந்தையின் ஆத்மா கிரகமாகும். அது உள்ள இடமே லக்னம் அல்லது தாம்பூல லக்னம் ஆகும். அவ்வாறு மொத்த எண்ணிக்கையை 7ஆல் வகுத்து வரும் மீதி, தாம்பூல கிரகமாகும்.

சூரியன் என்றால் துக்கமும், சந்திரன் எனில் சுகமும், செவ்வாய் எனில் கலகமும், புதன் & குரு எனில் பணமும்;(புதன்-செய்யும் தொழிலின் மூலம் பணமும் குரு-ஞானம், ஆன்மீகப் பணி மூலம் பணம் கிடைப்பதைக் குறிக்கும்).

சுக்கிரன் எனில் எல்லா விருப்பங்களும் நிறைவேறும்.

சனி எனில் கண்டங்கள், தடங்கல்கள் ஏற்படும் .மாந்தியுடன் சேர்தால் மரணம் எற்படும்.

அடுத்து இந்த தாம்பூலம் கிரகம் உள்ள இடமே தாம்பூல லக்னம் எனப்படும். அதை எப்படி அறிவது?

பிரசன்னம் பார்க்க வந்தவர், வந்த நேரத்தில் பஞ்சாங்கத்தின் உதவியால் கிரகங்களைஉள்ள நிலையை கட்டத்தில் குறித்துக் கொள்ளலாம். பிரசன்னம் பார்க்க வந்தவர் நேரத்தின் அடிப்படையில் ராசிக்கட்டத்தில் கிரகங்களை குறித்துவிட்டோம். இனி பலன்கள் கூற வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜாதகமா சாதகமா

ஜாதகம் அதை சாதகம் என்று சொல்வார்கள் ஆகவே முறையான ஜாதகத்தைக் கணித்து தகுந்த ஜோதிடரிடம் காட்டி அதன் பலனை முழுமையாக அறிந்து அதிலே ஏதேனும் குறை இருப்பின் தகுந்தபரிகாரங்கள் மூலமாக சாதகமாக மாற்றிக் கொண்டு வாழவே ஜோதிடம் பயன்படுகிறது

எதையுமே நாம் எப்படிஅணுகுகிறோம் என்பதைப் பொறுத்தே விளைவுகள் ஏற்படுகின்றன. அப்படி முறையாக இறைவனை நம்பி அவரின் பாதாரவிந்தத்திலே முழுமையாக நம்பி சரணடைந்து ஜாதகத்தை சாதகமாக மாற்றிக் கொள்ள வேண்டும்

இறைவன் காந்தம் என்று வைத்துக்கொள்வோம். அந்த இறைவனிடம் நாம் ஒட்டவேண்டுமென்றால், அல்லது அந்தக் காந்தத்தினால் ஈர்க்கப்பட வேண்டுமென்றால், அல்லது அந்தக் காந்தத்தை நாம் ஈர்க்க வேண்டுமென்றால் ஈர்க்கும் குணம் ஆகிய பக்தியை உள்கொண்ட இரும்பாக மனதை ஆக்கவேண்டும், பழைய காசுகள் காந்தத்தில் ஒட்டும், இரும்பினாலானவை உறுதியானவை. நம் முன்னோர்கள் போல. உண்மையான பக்தி கொன்டவர்கள்.

புதிய காசுகள் ஒட்டாது.அலுமினியத்தினால் ஆனவை .இப்போதைய பெரும்பான்மை மக்கள் போல் ஆத்திகத்திலே தெளிவில்லாதவர்கள், உண்மையான பக்தி எது என்று உணராதவர்கள். ஆனாலும் பழைய காசானாலும் ,புதிய காசானாலும் அதைக் கொண்டு அந்தக் காசுக்குரிய பொருளைப் பெற முடியும்

என்றாலும் இறைவன் என்னும் காந்தத்தோடு ஒட்டவேண்டுமென்றால் பழைய காசைக்கூட ஆசாரியன் என்னும் புனிதர் தன்னுடன் ஒட்ட வைத்துக்கொண்டு இறைவனுக்கும் நமக்கும் நடுவே ஒரு காந்த சக்தியை ஏற்படுத்தி இறைவனுடன் ஒட்ட வைப்பார் ஆகவே ஆசாரியனின் பாதாரவிந்தத்தில் பணிந்து அல்லது ஒரு குருவின் பாதத்திலே பணிந்து அவர் அருளைப் பெறுவதன் மூலம் இறைவன் என்னும் காந்தத்தோடு ஐக்கியமாக முடியும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காந்தமும் குருவும்

புதிய காசையும் காந்தத்தையும் ஒட்டவைக்கும் பாலமாக குருவும் ஆசாரியனும் நம்மையும் சேர்த்து அரவணைத்துக்கொண்டு இறைவனிடம் அழைத்துச் செல்லும்போது நமக்கு அந்தத் தகுதி இல்லாவிடினும் ஆசாரியன் ,குரு இவர்களின் தகுதி விசேஷத்தால் நாம் இறைவனை அடைய முடிகிறது.

இரும்பைக் காந்தம் கவரும் ,இழுத்துப் பிடித்துக்கொள்ளும், அப்படிப்பட்ட காந்ததோடு இரும்பல்லாத ஒரு உலோகத்தையும் ஒட்டவைக்க வேண்டுமெனில் இரும்பாகிய குரு தன்னுடைய ஈர்க்கும் குணத்தினால் காந்தத்தோடு ஒட்டும்போது தான் சீடனாகத் தேர்ந்தெடுக்கும் ஒருவரை தனக்கும் காந்தத்துக்கும் இடையே கொண்டு வந்து தான் காந்ததோடு ஒட்டும்போது அவனையும் சேர்த்து ஒட்டுகிறார், இதுதான் குருவருள்..

கண்ணாடி முகம் காட்டும் உண்மைதான் ஆனால் அந்தக் கண்ணாடி முகத்தைக் காட்டவில்லை யென்றால் ஒன்று கண்ணாடியில் பின் புறம் பூசப்பட்டிருக்கும் பாதரசம் நீங்கியிருக்கும், அல்லது அந்த இடம் இருளாக இருக்கும், அல்லது அந்தக் கண்ணாடி காட்டும் உருவத்தைப் பார்க்க நமக்கு கண் பார்வை இல்லாமல் இருக்கும்

ஆகவே எங்கே குறையென்று அறிந்து அந்தக் குறையைக் களைந்தால் கண்ணாடியில் உருவம் தெரியும் , அது போல நாம் இறைவனை அடையவேண்டுமென்றால் பக்தி என்னும் ரசத்தை மனம் என்னும் கண்ணாடியில் பூசவேண்டும், அல்லது அறியாமை எனும் இருளகற்ற வேண்டும், அல்லது இறைவன் அருள் நமக்கு இருக்க வேண்டும்.

காந்த முனையின் இரு துருவங்கள்தான் நெகட்டிவ் பாசிட்டிவ் நீங்கள் எதால் கவரப்பட வேண்டும் என்று நீங்களேதான் முடிவு செய்ய வேண்டும் அதற்கேற்றபடி நல்வழியைக் கடைப்பிடித்தால் பாசிட்டிவ் பக்கமும் தீய வழிகளைக் கடைப்பிடித்தால் நெகட்டிவ் பக்கமும் ஈர்க்கப்படுவீர்கள்

காந்தத்தின் இரு புறமும் இருக்கும் நெகட்டிவ் சாத்தான் பாசிட்டிவ்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இறை இப்போது நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் எந்தப் பக்கம் உங்கள் ஆத்மா ஈர்க்கப்படவேண்டும் என்பதை அதற்கேற்றபடி ஆசாரியனிடம் சரணடைந்து இறையின் பால் ஈர்க்கப்பட வேண்டுமா

இல்லை தீய சக்திகளிடம் சரணடைந்து சாத்தானால் ஈர்க்கப்பட வேண்டுமா என்பதை தீர்மானம் செய்யலாம். ஆனால் நெகட்டிவும் பாசிட்டிவும் ஒட்டாது பாசிட்டிவும் பாசிட்டிவுமே ஒட்டும்

வடகாந்தம் ஆகிய வடதுருவம் எப்போதுமே இறையருள் தென் காந்தம் ஆகிய தென் துருவம் எப்போதுமே சாத்தான் வாழும் இடம் வடகிழக்குப் பகுதி ஈசான்ய மூலை அதாவது இறை இருக்குமிடம் என்று பெரியவர்கள் சொல்வார்கள்

வணிக நோக்கு பயன்படாது

ஜோதிடமோ கைரேகை சாத்திரமோ போன்ற எதையுமே அதை விடுத்து பொருள் சம்பாதிக்க வேண்டும் என்னும் நோக்கோடு இருக்கும் இடைத்தரகர்களை முழுமையாக நம்பி அறியாதவர்களிடம் போய் நின்றால் அந்த இடைத் தரகர் நம்மைக் குழப்பி

அப்படி நம்மைக் குழப்புவதன் மூலம் பொருள் சம்பாதிப்பார் அவ்வளவே ,அது கூடப் பரவாயில்லை , நம்மை திசை திருப்பி இறையிடமிருந்து நம்மை வெகு தொலைவிலே கொண்டு போய்விட்டு இறைத் தொடர்பை அறுத்துவிடும் அபாயமும் உள்ளது.

எப்போதுமே நேரிடையான தொடர்பு நல்லது. இடைத் தரகர்களை நாடினால் அவர்கள் இஷ்டப்படி நம்மை ஆட்டுவிப்பார்களே தவிர நம் இஷ்டத்துக்கு எதுவும் அவர்கள் செய்ய மாட்டார்கள். இது அனுபவ பூர்வமான உண்மை. அதனால் எப்போதுமே நேரிடையான தொடர்புகளையே நான் கொண்டிருக்கிறேன்.

நல்ல வெய்யிலிலே சென்று விட்டு ஒரு இளநீர் வாங்கிக் குடித்துப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பாருங்கள் அப்போது நீங்களே உணர்வீர்கள் உங்கள் உடலின் முழுச்சூடும் தலையிலிருந்து தணிந்து அப்படியே இறங்குவதை நீங்களே உணரலாம் அதை விட்டுவிட்டு ரசாயனம் கலந்த குளிர்பானங்களை அருந்தினால் மேலும் உடல் சூடாவதையும் உணரலாம். இறைவன் இளநீர்க்காயின் உள்ளே இருக்கும் இளநீரைப் போன்றவன். நல்லதைத்தான் செய்வான் குடுவையிலே அடைபட்டிருக்கும் குளிர்பானங்கள் சாத்தான்கள் அவை தீமைகளையே செய்யும்

ஆகவே சாத்தான்களை மறுத்து இறையை வணங்கி

உங்களுக்கு பிடித்த தெய்வத்தை மனமார மனமுருகி ப்ரார்த்தனை செய்யுங்கள் உங்களின் மனமுருகல் வலுப்பட வலுப்பட இறைவனின் அருளை நீங்கள் நெருங்கிக் கொண்டே இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கே தெளிவாக தெரியும்,

உங்கள் அனுபவத்திலேயே இது நடக்கும் நீங்கள் ப்ரார்த்தனை செய்யச் செய்ய உங்கள் கஷ்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாக விலகுவதை நீங்கள் உணர்வீர்கள். அதை விடுத்து இடைத் தரகர்களை ரசாயனக் குளிர்பானங்கள் போன்ற இடைத் தரகர்களை நம்பினால் மீண்டும் சூடாவதை தடுக்க முடியாது.

பிறவி நோக்கம் உணர்தல்

சமீபத்தில் துபாயிலே என் மகள் வீட்டிற்கு சென்றிருந்தேன் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் அதன் கீழே நடைபாதையிலே ஒரு பெரிய உயரமான தானியங்கிப் பெட்டி வைத்திருந்தார்கள். அதிலே குறிப்பிட்ட காசைப் போட்டு நமக்கு என்ன வேண்டும் என்பதை அந்தப் பட்டியலில் பார்த்து அந்தப் பட்டனை அமுக்கினால் இருக்கும் கோகா கோலாவோ, அல்லது பெப்சியோ நம் கைக்கு அளிக்கும். அந்த இயந்திரத்தில் காசைப் போட்டுவிட்டு என் பேரன் கேட்ட லிம்கா வேண்டுமென்று பட்டனை அமுக்கினேன்.

இயந்திரத்தில் உள்ளே ஏதேதோ சத்தம் கடைசியில் கண்ணாடி வழியே

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஒரு லிம்கா வருவது தெரிந்தது. சில நொடிகளில் அந்த லிம்கா ஒரு பெட்டியில் வந்து விழுந்தது. அதை எடுக்கக் கையை நீட்டினேன். அங்கே நீல நிறத்தில் இங்கே இருக்கும் பட்டனை அமுக்கவும் என்று அறிவிப்பு வந்தது. அந்த பட்டனை அமுக்கினேன். மீண்டும் சில சத்தங்கள், மறுபடியும் அந்த லிம்கா பாட்டில் வேறொரு பெட்டிக்குள் வந்து விழுந்தது ,

மீண்டும் கையை நீட்டினேன்; அங்கே ஒரு அறிவிப்பு! வேறு ஒரு பட்டனை அமுக்கும் படி. அது சரி லிம்கா எப்போது என் கைக்கு வரும் என்றே தெரியவில்லை. ஒரு பெட்டிக்குள்ளிருந்து வேறு பெட்டிக்கே மாறிக் கொண்டிருக்கிறது.கையில் உள்ள காசையும் உள்ளே போட்டாயிற்று. இப்போது என்ன செய்வது என்றே தெரியாமல் விழிக்கிறேன்.

நேராக ஒரு கடைக்குப் போய்ப் பணத்தைக் கொடுத்து லிம்கா கேட்டால் உடனே கிடைத்திருக்கும். அதற்கு சோம்பல் பட்டு அருகிலே கிடைக்கிறதே என்று அந்தப் பெட்டியிலே காசைப் போட்டுவிட்டு காத்திருப்பதைப் போல நாமும் நம் சோம்பேறித்தனத்தாலும் சொகுசாலும் அல்லது நேரம் கிடைக்காமையினாலும் கண்ட கண்ட ஜோதிடர்களிடம் காசைக் கொடுத்துவிட்டு காத்திருக்கிறோம் .

அப்படியல்ல வாழ்க்கை தகுந்த ஜோதிடரிடம் சென்று அவர் தரும் தரமான விளக்கத்தைக் கேட்டு அதன் படி பரிகாரம் செய்தால்தான் நமக்கு வேண்டிய லிம்கா அல்லது மாங்கோ சாறு கிடைக்காவிட்டாலும் ஓரளவாவது உண்மையாக நமக்கு என்ன வேண்டும் என்று தெரிந்து கொள்ளலாம் உண்மையை சொல்லப் போனால் நமக்கு என்ன வேண்டும் என்றே தெரியாமல்தான் நாம் இறைவனிடம் கூட எதையாவது யாசிக்கிறோம்.

இப்பிறவி நோக்கம் என்ன என்பதை நாம் உணரமாட்டோமே ஆகவே நம் மனதுக்கு தோன்றியபட்டி நம் வினைகள் அகல பரிகாரங்கள் செய்துகொள்கிறோம் உடம்பான் அழியின் உயிரால் அழிவர் என்றார் திருமூலர். ஆகவே உடலுக்கு வரும் நம்மால் தீர்க்க முடியாத வியாதிகள் தவிர அனைத்து வியாதிகளையும் அதற்கு பரிகாரமாய் மருந்து உண்டு சரி செய்து கொள்கிறோமே இப்பிறவியிலே நாம் அனுபவிக்க வேண்டிய வியாதி என்று விட்டுவிடுகிறோமா அதுபோலத்தான் ஜாதக ஜோதிட பரிகாரங்களும் எக்காலத்திலும் இவை போன்ற பரிகாரங்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உண்டு ஆனால் மனிதாபிமானத்தைக் கருத்திலே கொண்டு ஏமாற்று இல்லாத ஓரளவேனும் தீர்வு தரக்கூடிய பரிகாரங்களை முன்பெல்லாம் நுணுக்கமாக சொன்னார்கள் விஷயம் அறிந்தவர்கள். ஆனால் இப்போது விஷயமே தெரியாமல் மனிதாபிமானமே இல்லாமல் பணம் ஈட்டும் நோக்கோடு செய்கிறார்கள் அதனால் பலிப்பதில்லை. ஆனால் இறைவன் நம் குழந்தைத் தனத்தை உணர்ந்து நமக்கு வேண்டியதை அது கசப்பு மருந்தானாலும் அவனே தந்து நம் வியாதிகளை துன்பத்தை போக்கி அருளுகிறான் ஜோதிடர்கள் அப்படி அல்ல. அந்தத் தானியங்கிக் கருவி போல் நீலத்தை அமுக்கு சிவப்பை அமுக்கு என்றெல்லாம் சொல்லி நமக்கு வேண்டாத பரிகாரங்களை சொல்லி அவர்கள் பொருள் ஈட்டிக்கொள்கிறார்கள்.

சனிப்பெயர்ச்சி

அதே போல்தான் சென்றவருடம் ஜோதிடர் சனிப்பெயர்ச்சி உங்கள் மேஷராசிக்கு அஷ்டம சனியாக இருக்கிறார் என்றார். சரி நான் என்ன செய்யவேண்டும் என்றேன். தோஷபரிகாரம் செய்யுங்கள் சரியாகிவிடும் என்றார். சரி செய்வோம் என்ன செய்ய வேண்டும்? என்றேன்.. ஒரு ஹோமம் நடத்தலாம் அதற்கு 12 ரூபாய் செலவாகும் என்றார். அவர் சொன்ன 12 ரூபாய் எவ்வளவு தெரியுமா 12000 ரூபாய். நான் யோசித்து உங்களை அழைக்கிறேன் என்று சொல்லி அவரை அனுப்பிவிட்டு யோசித்தேன்.

ஹோமம் செய்தால் சரியாகலாம். அந்த ஹோமத்தின் வாயிலாக நாம் சனி பகவானை மகிழ்விக்கப் போகிறோம். அவரது கருணையை யாசிக்கப் போகிறோம்; அவ்வளவுதானே என்று தோன்றியது. சரி, தெய்வங்கள் எப்போதுமே உண்மையான பிரார்த்தனைக்குச் செவிசாய்க்கும் என்பார்களே வேதமறிந்த பெரியோர். ஆகவே மனப்பூர்வமான பிரார்த்தனையை நாமே செய்யலாமே என்று தோன்றியது.

அன்று முதல் சனீஸ்வர பகவானே கிரகங்களில் ஈஸ்வர பட்டம் பெற்றவர் நீர் ஒருவர் மட்டுமே. அப்படிப்பட்ட பெருமைகொண்ட நீர் என்னை ஆசீர்வதியுங்கள். எனக்குக் கருணை காட்டுங்கள், தினமும் உங்களை யாசிக்கிறேன், உங்களிடம் சரணடைகிறேன் என்று மனப்பூர்வமாக வேண்டிக்கொண்டு காலையிலும் இரவு படுக்கப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

போகும் போதும் அவரை வணங்கி பிரார்த்தனை செய்தேன். எனக்குச் சில கஷ்டங்கள் வந்தாலும் அவைகளைச் சமாளிக்க எனக்கு போதிய மனவலிமையையும் அளித்தார் சனீஸ்வரன். இப்படி நாமே சிலவற்றை யூகித்து செய்துகொள்ளவும் முடியும்.குறிப்பாக இரவு படுத்து தூக்கம் வரும் வரை அன்று செய்த காரியங்களையும், அடுத்து இறை சிநதனையையும் நம் முன்னோர்களுக்கு நன்றிசொல்வதையும் வழக்கமாகக் கொண்டேன்

ஈஸ்வர பட்டங்கள்

விக்னேஸ்வரர், சனீஸ்வரர், ராவணேஸ்வரன், சண்டிகேஸ்வரர் ஆகிய நால்வர் மட்டுமே ஈஸ்வர பட்டம் பெற்றவர்களாவர். ஆனால், கும்பகோணம் அருகிலுள்ள திருப்பேணுபெருந்துறை (திருப்பந்துறை) சிவானந்தேஸ்வரர் கோயிலில் உள்ள முருகப் பெருமான், பிரணவேஸ்வரர் என்றழைக்கப்படுகிறார்.சிவன் எல்லாம் அறிந்தவராக இருக்க, சிறியவனாகிய தான், தந்தைக்கு பிரணவ உபதேசம் செய்ததை எண்ணி வருத்தம் கொண்டார் முருகன். எனவே, அவர், இத்தலத்தில் லிங்க பிரதிஷ்டை செய்து சிவனை வழிபட்டு மன அமைதி பெற்றார். சிவன் அவருக்கு காட்சி தந்து, நீயும் நானும் ஒன்றே எனக்கூறி மைந்தனை தேற்ற, மனம் தெளிவடைந்தார் முருகன். எனவே, பிரண வேஸ்வரர் என்று பெயர் பெற்றார். திக்குவாய் உள்ளவர்கள் இந்த முருகனை வேண்டிக்கொண்டால் மனஆறுதல் கிடைக்கும் என்பது நம்பிக்கை. எனவே இத்தல முருகனை "தந்தை பட்டம் பெற்ற தனயன் என அழைக்கின்றனர்.

"சனை+சரதி இதி சனைச்சரன் என்பது மருவி சனீஸ்வரன் என்றாகிவிட்டது என்று சொல்வார்கள் மந்த கதி உள்ளவன் ஆனால் இன்னொரு செய்தியும் இருக்கிறது

தாயின் ஆலோசனைப்படி சனிபகவான் காசி சென்று லிங்கம் ஒன்றை பிரதிஷ்டை செய்து கடுமையான தவம் செய்தார். சனியின் தவத்தை கண்டு மனமகிழ்ந்த சிவபெருமான் அவருக்கு காட்சி கொடுத்து, உன் அரிய தவத்தால் மகிழ்ந்தேன். இன்று முதல் என்னுடைய மகேஸ்வர பட்டமாகிய ஈஸ்வர பட்டத்தை உனக்கு தருகிறேன். இனி நீ சனீஸ்வரன் என்று அழைக்கப்படுவாய்.

நவக்கிரகங்களில் ஸ்திர நிலையும் உனக்கே உரியது. நீ பூஜை செய்த லிங்கம் சனீஸ்வர லிங்கம் என்று அழைக்கப்படும். உனக்கேற்ற நாளான

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சனிக்கிழமையும் ஸ்திரவாரம் என்றே அழைக்கப்படும் எனக்கூறி அருளாசி புரிந்தார்.

ஆகவே சனீஸ்வரர் அருள் என்றுமே நமக்கு வேண்டும் ஆனால் அதற்காக சரியாக சனீஸ்வரரைப் ப்ரிதி செய்ய என்னென்ன செய்யலாம் என்று கூறு,ம் ஒரு நல்ல ஆலோசரகாப் பார்த்து யோசனை கேட்டு அதன் படி நடக்கலாம் ஆனாலும் எது செய்தாலும் அது சனிப்ப்ரீதியே ஆகவே அவர் காலிலே விழுந்து மனப்பூர்வமாக அவரை உள சுத்தியாக நினைத்து வேண்டிக் கொள்ளுதலே சிறந்த பரிகாரமாய் நான் நினைத்தேன்

திரு சந்திரசேகர குருக்கள் சொல்கிறார் ஆகசாஸ்திர ரீதியாக ஈஸ்வரபட்டம் கிடைத்தமைக்கு ஏதும் ஆதாரம் இல்லை என்பதே உண்மை சர ராசியான மகரம் ஸ்திர ராசியான கும்ப ராசிக்கும் உடையவரான. சனிபகவான் ஆயுள்காரகன் மேலும் அனைத்து ஆன்மாக்களும் கர்மவினைகளை அனுபவிப்பதற்கான தர்மத்தை நிர்ணயம் செய்து அதைசெயல் படுத்துபவர் அவரே ஆகும் என்று நம்மைவிட விவரம் அதிகமாக அறிந்தவர் அவர் ஆகவே இன்னும் ஆராய்ச்சிகள் தொடரும்

நீலாஞ்ஜன ஸமாபாஸம் ரவிபுத்ரம யமாக்ரஜம்

சாயா மார் தாண்டஸம்பூதம் தம் நமாமி சனைச்சரம்

ஸூர்யபுத்ரோ தீர்க்கதேஹோ விசாலாக்ஷ: ஸிவப்ரிய தீர்க்கசார: ப்ரஸந்நாத்மா பீடாம்ஹரதுமே ஸனி:

சூர்யபுத்திரனும், நீண்டதேஹமுள்ளவனும், சிவப்ரியனும் தெளிந்த மனம் உள்ளவனுமான சனீஸ்வரபகவான் என்னுடைய தோஷத்தை போக்க வேண்டும்.

சனீஸ்வர ஸ்தோத்ரம் :

ஸன்னோதேவீசரபிஷ்டய ஆபோ பவந்து பீதயே

ஸம்யோ ரபிஸ்ர வந்துந: என்று அவரையே நினைத்து மனமுருக வேண்டினால் நிச்சயம் பலன் கிடைக்கும்

அதற்காக ஹோமங்களுக்கும் யாகங்களுக்கும் பலனில்லை என்று நான் சொல்வதாக யாரும் நினைக்க வேண்டாம். அவைகளுக்கு உண்டான பலன்கள் நிச்சயமாக இருக்கிறது. ஆனால் அவற்றை மனப்பூர்வமாகப் பணத்தின்மேல் குறிக்கோள் இல்லாமல் பக்தியுடன் ஸ்ரத்தையுடன் செய்ய ஆள் கிடைத்தால் நிச்சயமாக செய்யலாம். அப்படிப் பணத்தாசை, பேராசை இல்லாத மனிதர் தெய்வத்துக்கு சமானமாவார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அப்போது அவரே தெய்வமாகிறார் இடைத்தரகராக ஆவதில்லை. சாட்சிக்காரன்காலில் வீழ்வதைக் காட்டிலும் சண்டைக்காரன் காலில் விழ்வதே மேல் கடந்த அஷ்டமச் சனிக் காலத்தில் இப்படியே நான் நேரிடையாக சனீஸ்வரரை வேண்டியே சமாளித்தேன். நம் விதி என்று ஒன்று இருக்கிறது என்ன வேண்டினாலும் ஹோமங்கள் யாகங்கள் செய்தாலும் விதியின் குரூரம் வேண்டுமானால் சற்றே குறையுமே தவிர முழுவதும் விலகாது. அதையும் தவிர சனிக் கிரகம் அல்லது சனி பகவான் நம்மை அறியாமலோ அறிந்தோ நாம் ஏற்கெனவே செய்திருக்கும் பாவங்களையும் இந்த ஜென்மத்தில் செய்யும் பாவங்களையும் கணக்கிட்டு அதற்குத் தகுந்தவாறு நமக்குச் சில சோதனைகளைக் கொடுத்து நம் பாவங்களின் அளவைக் குறைத்து நம்மை சமப்படுத்தும் துலாக்கோல் போல செயல்படுகிறார் என்பார்கள்.

பாவம் குறைய

ஆகவே நம் பாவங்களைக் குறைத்து நம் ஆத்மாவை சமனப்படுத்தும் அவரை வணங்கினாலே போதும். இடைத்தரகர்கள் எல்லாம் தெரிந்தது போல் ஏதேனும் சொல்லி நம்மிடம் பணம் பறிக்கும் செயலை அனுமதிக்க வேண்டாம். நேரிடைத் தொடர்பே எப்போதும் நல்லது என்பதை உணர்ந்தேன்.

நமக்கு சனீஸ்வரர் பீடிக்க வேண்டிய வேளை வந்தால் நம்மால் தப்ப முடியாது; ஆகவே அவரையே சரணடைவோம். அதைவிட முக்கியம் இந்தச் சனிப் பெயர்ச்சி இப்போது வருகிறது. அதே ஜோதிடர் என்னிடம் வந்து உங்களுக்கு சனீஸ்வரர் எட்டாம் இடத்திலிருந்து விலகிவிட்டார்.

அதனால் அஷ்டம சனியின் பாதிப்புகள் குறைந்துவிடும் ஆனால் உங்கள் மனைவிக்கும் இப்போது முதல் அஷ்டம சனி ஆரம்பம் ஆகவே ஹோமம் செய்யலாமா என்றார். நான் யோசித்துவிட்டு அழைக்கிறேன் என்றதும் அவர் சென்றுவிட்டார்.\

கடந்த அஷ்டம சனிக் காலத்தில் என்னோடு கூடவே இருந்து என்னைப் பார்த்துக் கொண்ட என் கோபங்களையும் சமாளித்த என் துணைவியார் போலவே இப்போது அவளுக்கு அஷ்டம சனிக் காலமாகிய இந்தக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காலத்தை நாம் அவளோடு இருந்து அவளுக்கு உதவியாய் இருக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்து மீண்டும் சனீஸ்வர பகவானிடம் வேண்டிக்கொண்டு நல்ல படியாக வாழ்வோம் என்னும் நம்பிக்கையில் காலையிலும் இரவிலும் சனீஸ்வர பகவானைப் பிரார்த்திக்கத் தொடங்கி இருக்கிறேன்..

27 நக்ஷத்திரங்களும் பலன்களும்

ஆகவே *27* நக்ஷத்திரத்திற்குள் ஏதோ ஒரு நக்ஷத்திரத்திலே தானே நம் வாழ்க்கைத் துணை பிள்ளைகள் எல்லோரும் இருக்கிறார்கள். கிரகங்களின் சுழற்சியும் இருக்கிறது அதற்கேற்ற பலன்களும் மாறும். கிரகங்களின் சுழற்சியை மாற்றவோ நிறுத்தவோ நம்மால் முடியாது. ஆனால் நாம் நேர்மையாக வாழ்ந்து இறையைத் தொழுது எல்லாவற்றையும் சமாளிப்போம்; நல்லதே நடக்கும் என்னும் நம்பிக்கையோடு. ஆகவே தீர்மானம் எடுங்கள் இடைத்தரகர்கள் யாரும் தேவையில்லை. நானும் இறையும் நேரிடையாகவே மனப்பூர்வமாக உரையாடிக் கொள்கிறோம்; இறையிடம் நாங்கள் நேரிடையாகவே வேண்டிக் கொள்கிறோம் என்று.

ஆகவே அப்படிப்பட்ட தெய்வாம்சம் பொருந்திய மனிதர் கிடைத்தால் நாமும் ஹோமங்கள், யாகங்கள் செய்யலாம். நல்ல பலன்கள் கிட்டும். மனிதன் என்பவன் தெய்வமாகலாம்; பேராசை வரும்போது தரகனாகிறான். உப்பானாலும் சர்க்கரை ஆனாலும் அமிர்தமே ஆனாலும் அளவுக்கு மிஞ்சினால் அது விஷம்தான் ஆனால் இங்கே ஒரு செய்தியை குறிப்பிடவேண்டும் ஓட்டுனரின் ஜாதகம் கூட அவரை நம்பி பயணிக்கும் அத்தனை பேரின் உயிரையும் வாங்கக் கூடும் அல்லது அத்தனை பேரின் உயிரைக் காக்கவும் கூடும் இந்த ரகசியம் அறிந்தவனான அர்ஜுனன் அதனால்தான் ஶ்ரீ கிருஷ்ணர் மட்டும் தங்களுக்கு போதும் என்றான் பெரும் படைகளைக் கூட வேண்டாம் என்றான் கிருஷ்ணனும் ஒப்புக்கொண்டான் ஓட்டுனராக அதாவது சாரதியாக

ஜோதிடர்கள் சொல்வது பலிக்காவிடினும் ஜோதிடம் பார்ப்பதும் கொடுத்த வாக்கை நிறைவேற்றாவிடினும் அரசியல்வாதிகளைப் போய்ப் பார்த்து மேடையிலே அவர்களின் ஜெகஜ்ஜாலப் பேச்சைக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கேட்பது போல

அமேசான் காடுகளிலிருந்து கொண்டுவரப் பட்ட மூலிகை என்று அளந்துவிட்டாலும் அதையும் நம்பி தலையிலே முடி முளைத்தாலும் முளைக்காவிட்டாலும் மீண்டும் மீண்டும் அதை வாங்கி தலையிலே தேய்ப்பது போல
இவையெல்லாம் நமக்கு வாடிக்கை ஆனால் இதற்காகவெல்லாம் நாம் ஜோதிடரையோ ஜோதிடத்தையோ நம்புகிறோம் என்றோ, அரசியல்வாதிகளை நம்புகிறோம் என்றோ விளம்பரங்களையோ விளம்பரப் பொருட்களையோ நம்புகிறோம் என்பதும் அல்ல,

அவற்றைப் பற்றித் தெரிந்து கொண்டோம் என்பது அல்ல. எப்படியாவது நமக்கும் பொழுதைக் கழிக்க வேண்டும் ஈட்டிய பணத்தை செலவழிக்க வேண்டும் அவ்வளவுதான். இது வரை ஏதேனும் ஒன்றைப் பற்றியாவது முழுமையாக அறிந்திருக்கிறோமா நாம் இல்லவே இல்லை.

உண்மையான ஜோதிடத்தைக் கண்டறிந்தால் அவர் உண்மை பேசுவார் அதுவும் பலிக்கும். உண்மையான மனிதநேயமிக்க தலைவரைக் கண்டு ஆட்சியை ஒப்படைத்தால் அவரும் சிறப்பாக ஆளுவார் .மக்களுக்கு தேவையானவற்றை செய்வார் அல்லவா
அதுபோல் உண்மையான மூலிகையைக் கண்டு பிடித்து அரைத்து தேய்த்தால் முடியும் வளரும் நாம் உண்மைகளை உணர்வதே இல்லையே அதற்கு மாறாக நேர்மையான மனிதரை சந்தேகப்படுவதும் உண்மையான மூலிகையை நம்பாமலிருப்பதும் உண்மையான ஜோதிடத்தை நம்பாமலிருப்பதும் தானே நாம் இயல்பாக செய்யும் காரியங்கள்

அபூர்வ மூலிகை

ஆனால் பல மூலிகைகள் நம்மைச் சுற்றியே இருக்கின்றன வளர்கின்றன ஆனால் நமக்கு அவை மூலிகைகள் என்று தெரியாது, அதன் அற்புத குணங்கள் தெரியாது,அதை எப்படி உபயோகிக்கவேண்டும் என்று தெரியாது ஆகிய காரணங்களால் நம் பக்கத்திலேயே இருக்கும் மூலிகைகளைக் கூட நமக்கு உபயோகப்படுத்திக் கொள்ளத் தெரியவில்லை

அதைப் போலத்தான் நம் ஆய கலைகள் அறுபத்து நாலும், ஆனால் நாம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அவைகளின் அற்புதங்களை உணராமல் அவைகள் எல்லாமே பொய் என்று கூறுவதைப் போலத்தான் ஜோதிடம் ஜாதகம் பொய்யென்று கூறித் திரிவதும்.

நம்மைச் சுற்றிலும் மூலிகைகள் இருந்தாலும் அவைகளின் அருமை உணராததைப் போலவே நம் முன்னோர்களாகிய சித்தர்கள் முனிகள் யோகிகள் தவஸ்ரேஷ்டர்கள் ஆகியோர் சொல்வதையும் நாம் உணர்வதில்லை . நம் முன்னோர்கள் இப்பிறவி எதற்காக எடுத்திருக்கிறோம் என்பதை சூசகமாக சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்கள்

ஆனால் அவைகளை நாம் உணர்வதில்லை
இப்பிறவியின் நோக்கம் என்ன என்பதை நாம் உணரமாட்டோமே ஆகவே நம் மனதுக்கு தோன்றியபடி நம் வினைகள் அகல பரிகாரங்கள் செய்துகொள்கிறோம் உடம்பான் அழியின் உயிரால் அழிவர் என்றார் திருமூலர்.

ஆகவே உடலுக்கு வரும் நம்மால் தீர்க்க முடியாத வியாதிகள் தவிர அனைத்து வியாதிகளையும் அதற்கு பரிகாரமாய் மருந்து உண்டு சரி செய்து கொள்கிறோமே இப்பிறவியிலே நாம் அனுபவிக்க வேண்டிய வியாதி என்று விட்டுவிடுகிறோமா அதுபோலத்தான் ஜாதக ஜோதிட பரிகாரங்களும் எக்காலத்திலும் இவை போன்ற பரிகாரங்கள் உண்டு

மனிதாபிமானம்

ஆனால் மனிதாபிமானத்தைக் கருத்திலே கொண்டு ஏமாற்று இல்லாத ஓரளவேனும் தீர்வு தரக்கூடிய பரிகாரங்களை முன்பெல்லாம் நுணுக்கமாக சொன்னார்கள் விஷயம் அறிந்தவர்கள். ஆனால் இப்போது விஷயமே தெரியாமல் மனிதாபிமானமே இல்லாமல் பணம் ஈட்டும் நோக்கோடு செய்கிறார்கள் அதனால் பலிப்பதில்லை.

பக்தியும் பரிகாரமே நம் முன்னோர்கள் பக்தி என்றொரு வழியைக் காட்டினார்கள் இந்த மானுடப் ;பிறவியிலிருந்து முறையான பரிகாரம் இறையை அடைய என்று பழக்கப்படுத்தினார்கள். ஆகவே பக்தியாக

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வருகிறார்களா பரிகாரத்துக்காக வருகிறார்களா என்பது முக்கியமில்லை நாம் இகோயிலுக்கு சென்று வந்து தான் காலை உணவு அருந்துவேன் என்ற நிலை இன்று இயலவில்லையே உங்கள் மன உடல் ஆரோக்கியம் மேம்பட ஆன்மஞானமும் உடல் திண்ணமும் பெற முறையான வழியே அதுதானே ஆனால் வயதாக வயதாக இயலாமல் போகிறது ஆனாலும் உங்கள் பக்தி குறைந்ததா இல்லையே. அதுதான் சில காலங்களிலே செய்ய முடிவதை எப்போதுமே தொடர முடிவதில்லை. அதற்குத்தான் அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன் அரங்க மா நகருளானே என்கிறார் ஆழ்வார் இறையிடம் வேண்டாமல் வேறெங்கு போக முடியும் பரிகாரமும் அவன்தானே அருளவேண்டும்.

ஹோமம் யாகம் யக்யம் தவம் எல்லாமே மனப்பூர்வமா மந்திரபூர்வமாக ஸ்ரத்தையுடன் செய்தாலே பலன் கிடைக்கும் ஒரு (த்ரஸ்தம்) துளி கவனச் சிதறல் இருந்தாலும் மாறான விளைவைக் கொடுக்கக் கூடியதே செய்தால் ஸ்ரத்தையுடன் செய்ய வேண்டும் இல்லையேல் மனப்பூர்வமாக வேண்டிக் கொண்டு

இறைவா நீயே பார்த்துக்கொள் எனக்கு பொறுமையும் திறமையும் இல்லை என்று பரிபூரண சரணாகதி அடைந்து என்னால் ஒரு சில வினாடிகளே மனதை லயமாக வைத்துக் கொள்ள முடிகிறது ஆகவே என் சக்திக்கேற்ப நான் ப்ரார்த்தனைசெய்கிறேன் ஆகவே என்னை மன்னித்து அருள் என்று அவன் காலிலே வீழ்வதைத் தவிர அவன் பாதாரவிந்தத்தை பற்றிக் கொள்வதை விட வேறொன்றும் செய்ய இயலாத மானுடர் நாம் என்பதை உணர்ந்தாலே போதும்

நம்மாழ்வார்

நூற்றி எட்டு திவ்ய தேசங்களில் மிக முக்கியமான, நவதிருப்பதிகளில் ஒன்றான திருப்புளிங்குடி திவ்ய தேசத்தைப்பற்றி ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் மனமுருகி மிகவும் பரவசப்பட்டு பாசுரத்தை படைத்திருக்கிறார்:

“எம் இடர் கடிந்து, இங்கு என்னை ஆள்வானே!
இமையவர் தமக்கும் ஆங்கு அனையாய்!
செம் மடல் மலருந் தாமரைப் பழனத்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தன் திருப்புளிங்குடி கிடந்தாய்!
நம்முடை அடியார் கவ்வை கண்டு உகந்து,
நாம் களித்து உளம் நலம் கூற,
இம்மட உலகர் காண, நீ ஒருநாள்
இருந்திடாய் - எங்கள் கண் முகப்பே.”

எங்களின் எல்லாத் துக்கங்களையும் போக்கி எங்களை ஆட்கொள்ளும் பெருமானே! தேவர்களையும் காப்பாற்றுகிறவனே! நீ, சிவந்த இதழ்களுடைய தாமரை மலரும் வயல்களுள்ள திருப்புளிங்குடியில் பள்ளி கொண்டுள்ளாய்! உன் அடியார்கள் உன்னைத் தொழும் பக்தியைப் பார்த்து நாங்கள் சிலிர்த்துப் போகிறோம். எங்களுக்கும் நீ அருள வேண்டும். எங்களையும் சற்று கண் திறந்து பார். என்று தமக்கே உரிய பாணியில் நம்மாழ்வார் நமக்கு உணர்த்துகிறார் .

திருச்சிக்குப் பக்கத்தில் உள்ள திருநெடுங்களம் தலத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கிற ஈசனிடம் இடர் அகல, துன்பம் பஞ்சாய்ப் பறக்க அவர் படைத்திருக்கும் அதி அற்புதமான தேவாரப் பாடலில்

“மறையுடையாய்; தோலுடையாய்; வளர் சடை மேல்
வளரும்பிறையுடையாய்; பிஞ்ஞகனே என்று உனைப் பேசின்
அல்லால்குறையுடையாய்; குற்றம் ஓராய் கொள்கையினால்
உயர்ந்தநிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே!”
என்று தேவாரம் பாடுகிறார் திருஞானசம்பந்தர்

தேவாரப் பதிகத்தின் பொருள்: ‘‘வேதங்களை உடையவனே! நீண்ட சடையில் இளம்பிறையைச் சூடியவனே. உன் பெருமையைப் பேசும் அடியார்களின் குற்றம் குறைகளை பெரிதாக எடுத்துக் கொள்ளாத பெருந்தகையே! மேன்மையானவனே! நெடுங்களத்தில் இருந்து கொண்டு அரசாட்சி செய்யும் அதி அற்புதமானவனே! என்னுடைய துன்பத்தைப் போக்கி மனஇருளை அகற்றி ஒளிவெள்ளத்தை எங்களுக்கு அருளுக.’’ என்கிறார்

ஆகவே நாம் அனைத்தையும் அவன் திருபாதங்களில் ஒப்படைத்துவிட்டு உண்மையாய் வாழத் தொடங்கினாலே அனைத்து ப்ரச்சனைக்கும் பரிகாரம் தானாய் வரும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கைரேகை

கைரேகைகளைப் பற்றிப் பேசினாலே எனக்கு மனதிலே நான் எழுதிய ஒரு வரி நினைவுக்கு வரும் “ நகத்தாலே சொரிந்து தலையெழுத்தை மாற்றிவிட முடியாது அகத்தாலே பக்தியை சொரிந்து வேண்டுமானால் முயற்சி செய்யலாம் “ என்று

கைரேகைகள் எப்படி உருவாகின்றன நம் உடலிலே கவனித்துப் பார்த்தால் பல இடங்களிலே ரேகைகள் உள்ளன உதாரணத்துக்கு புறங்கையைப் பாருங்கள் . முகத்திலே கூட நெற்றியிலே ரேகைகள் உண்டு . ஆனால் ஏன் உள்ளங்கையிலே இருக்கும் ரேகைகள் முக்கியத்துவம் பெறுகிறது?

உடலின் மற்ற பாகங்கள் கருவறையிலே இருக்கும் போது அது அது இயல்பாக இருக்கும் . ஆனால் இந்த உள்ளங்கை மட்டுமே நம் ஆத்மாவின் ரகசியங்களை உள்ளடக்கி மூடிக்கொண்டிருக்கும். அப்படி பத்து மாதங்கள் மூடிக்கொண்டே இருப்பதால்தான் அங்கே தசைகள் அமுக்கப்பட்டு உள்ளங்கை ரேகைகள் அழுத்தமாக நம் விதியை நம் ஜென்ம ரகசியங்களுக்கேற்ப பதியும்,

அதனால்தான் உள்ளங்கை ரேகை முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால் நம் உள்ளங்கை ரேகைகள் கூட நாம் வளர வளர மாறிக்கொண்டே வந்து ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக்குப் பின்னரே நிலைகொள்கிறது, நிலை கொள்கிறது என்றும் சொல்ல முடியாது மாற்றங்கள் குறைவாக இருக்கிறது என்று வேண்டுமானல் சொல்லலாம்.

நம் கைரேகைகளிலே தொடக்க காலத்திலே இருந்த ரேகைகள் சிலது வளரும் சிலது தேய்ந்து மறைந்தே போகும் ஆகவே ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பின்னரே கைரேகை பார்த்து சொல்வார்கள். அதனால்தான் கைரேகை பார்ப்பவர்கள் குழந்தைகளுக்கு பார்க்க மாட்டார்கள் .

கைரேகை வளர்ச்சியும் விதி மாறுபாடும்

அதே போல் நம் உள்ளங்கையிலே விரல் நுனியிலே இருக்கும் ரேகைகளிலே வித்யாசம் உண்டு ஒவ்வொரு விரலின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தொடக்கத்திலேயும் இருக்கும் ரேகைகளிலே சங்கு ரேகை சக்கர ரேகை என்று இரு பிரிவு உண்டு இந்த சக்கர ரேகை சங்கு ரேகை விரல்களிலே இருக்கும் நிலையைக் கணித்தும் எண்ணிக்கையைக் கணித்தும் பலன் சொல்வார்கள். கையிலே ஆயுள் ரேகை இருக்கும் நிலையைக் கொண்டும் அந்த ஆயுள் ரேகையிலே ஏதேனும் கோடோ தடங்கலோ இருந்தால் அதற்கேற்ற பலனும் சொல்வார்கள் ஆகவே அனைத்து வித ஜோதிடங்களும் எண்ணையும் ரேகைகளான எழுத்தையும் ஒட்டியே அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிற்து என்னும் உண்மையை நாம் உணரவேண்டும்

கையில் புதன் மேடு, சூரிய மேடு, சனி மேடு, குரு மேடு, செவ்வாய்மேடு, சுக்கிரமேடு, சந்திரமேடு என்று பல மேடுகள் உள்ளன. இந்த மேடுகள் குறைந்து காணப்பட்டால் பிணியால் பீடிக்கப்பட்டுள்ளான் எனலாம். நன்றாகத் தென்பட்டால் அவன் உடல் நலத்தோடு வாழ்கின்றான் என்று பொருள். புதன்மேடு, சூரிய மேடு, சனி மேடு, குருமேடு என்பன உள்ளங்கையில் இருக்கின்றன. நடு உள்ளங்கையில் ஒரு செவ்வாய் மேடு உள்ளது. இவைகளிலே எந்த மேடு முறையாக அமைந்திருக்கிறதோ அதைக் கொண்டுதான் அவர் வாழ்க்கையை சொல்வார்கள்

சாதாரண மானுடர்களுக்கு நடுவே தோன்றும் சித்தர்கள் கையிலே திரிசூல ரேகை இருக்கும். அவரது கையிலே கிரீடம் ரேகை இருக்கும். அவரது கையிலே வில் ரேகை இருக்கும் அவரது கையிலே வேல் ஆயுத ரேகை இருக்கும் இவையெல்லாம் அவர் ஞானியாக சித்தராக வடிவெடுக்கப் போகிறார் என்பதை முன்கூட்டியே குறிப்பிடும் சக்திகள் குரு மேட்டில் இந்த திரிசூல ரேகை சத்ருக்களை வெல்வது, நோய்நொடிகளை வெல்வது நீதிமானா நேர்மையானவரா என்றெல்லாம் அறிந்து கொள்ள உதவும் . கிரீட ரேகை என்பது அவர் ஒரு நல்ல தலைவனா என்னும் தகுதியை சொல்லும் தலைமை ஏற்று மக்களுக்கு நல்வழி காட்டுவதை குறிக்கும். சந்திர மேட்டிலிருக்கும் வில்போன்ற வளைந்தரேகை மனதை கட்டுப்படுத்தும் உறுதியையும், மந்திர, மாந்திரீகத்தில் வல்லவரா என்றும், சக்தியின் அருள் நிரம்ப பெற்று இருப்பவரா என்பதயெல்லாம் குறிக்கும்..

சந்திர மேட்டிலிருந்து குரு மேட்டிற்கு செல்லும் வேல்போன்ற ஆயுதம் ரேகையானது நீதியும் நேர்மையும்கொண்டவரா என்பதைக் குறிக்கும் அவருக்கு இறையருள் இருக்கிறதா என்பதையும் குறிக்கும்.

ஜாதகம் வேறு நாடி ஜோதிடம் வேறு கைரேகை பார்த்து சொல்வது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வேறு. ஆனால் எல்லாவற்றுக்குமே அடிப்படை ஒன்றுதான் அதன் படி ஆராய்ந்து அந்தக் கலையை முழுமையாகக் கற்று உண்மையை சொல்பவர்கள் இருந்தால்தான் எதுவுமே பலிக்கும் ஆனால் இன்றும் கிராமங்களிலே குடுகுடுப்பைக்கரன் சொல்லும் வாக்கையும் நம்புகிறார்கள் அது நடந்து கொண்டும் இருக்கிறது .

குடுகுடுப்பைக் காரர்கள்

குடுகுடுப்பைக்காரர்கள் அவர்களுக்கும் ஒரு இனமிருக்கிறது .அவர்களுக்கென்று சில வரையறைகள் இருக்கின்றன. விடியற்காலையிலே வந்து யார் என்ன கொடுக்கிறார்கள் என்பதைப் பறியே கவலைப்படாமல் அவர்கள் மனதிலே தோன்றும் உள்ளுணர்வை சரமாரியான வார்த்தைகளால் அவர்களை அறியாமலே சொல்வார்கள்.

அது அருள் வாக்கு போல் அப்படியே பலிக்கும். அவர்கள் அதற்கு விடிகாலைக்கு முன்னரே எழுந்து குளித்துவிட்டு சுத்தமாக முன் பூஜைகள் செய்து அந்தப் பூஜையிலே இருந்து எழுந்து வந்து நேரிடையாக எந்த வீட்டிலே யாருக்கு சொல்ல வேண்டுமோ அதை அவர்களே அறியாமல் ஆச்சரியமாய் வந்து சொல்லிவிட்டுப் போய்க்கொண்டே இருப்பார்கள்.

மாந்த்ரீகம் வசியம் போன்ற அதர்வண வேதத்திலே வருகின்ற வழி முறைகளை வம்சாவழியினராக கற்று மனதிலே கள்ளமில்லாமல் சொல்லிவிட்டு எதையுமே எதிர்பார்க்காமல் சொல்லிவிட்டு செல்வார்கள். யாரேனும் எதையேனும் அவர்களாகவே கொடுத்தால் வாங்கிக் கொள்வார்கள் அவ்வளவுதான்.

ஆனால் போலி குடுகுடுப்பைக்காரர்கள் பணம் சம்பாதிக்க உருவாகி உண்மையான குடுகுடுப்பைக் காரர்களோடு கலந்துவிட்டார்கள் அதனால் பலிப்பதில்லை. அதே போலத்தான் உண்மையாகவே ஜோதிடக் கலை கற்று ஜாதகம் பார்க்க முறையாகக் கற்று அவர்கள் சொல்வது பலிக்கும்.

ஆனால் இப்போது எல்லாவற்றிலுமே கலப்படக்காரர்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நிறைந்துவிட்டாரகள் அதனால் தான் சொல்கிறேன் ஜோதிடம் ஜாதகம் நாடி ஜோதிடம் கைரேகை எல்லாமே உண்மை ஆனால் அந்தக் கலை அறியாதவர்களால் அடிப்படையான இவைகளின் மேலேயே சந்தேகம் வருகிறது. குடுகுடுப்பைக் காரர்கள் வாக்கு பலிதம் உடையவர்கள்,

தொட்டியத்து நாயகன்கள் - கம்பளத்து நாயகன்கள் என்று சொல்வோம், இவர்கள் தொழில் பல தனித்தனியாய் இருக்கும், இவர்கள் வழக்குகள் கோர்ட் போனதில்லை, ஸ்ரீரங்கத்தில் ஒரு ஐயங்கார் கீழ அடை வளஞ்சான் வீதியில் இருந்தார், குறிப்பிட்ட ஆண்டுக் கொரு முறை இவர்கள் ஸ்ரீரங்கம் சிங்கப் பெருமாள் கோவிலில் இவர் தலைமையில் கூடுவர், எல்லா பஞ்சாயத்துகளும் ஐயங்கார் சொல்படி பைசல் செய்து கொள்வர்,

இது ஒரு வாரம் போல் நடக்கும், சவுகரியப்படி சாப்பாடு சமைத்தோ ஹோட்டலிலோ சாப்பிடுவர், இவர்கள் சொல்லி பல நடந்துள்ளன, என் நண்பர் உடல் முழுதும் சீழ் வடியும் புண்களால் அவதியுற்றார் பல மாதம் எந்த மருந்தும் வேலை செய்யல ஒரு குடுகுடுப்பாண்டி வந்து துணி கேட்டார் இவரிடம் அவர் வீட்டிலிருந்து துணி தர வாங்க மறுத்து அவர் மேலே போர்த்தியிருந்த சீழ் வடிந்த துண்டை பிடிவாதமாய் வாங்கிச் சென்றார்,

சித்தர்கள்

நம்புங்கள் 2 நாளில் புண் முற்றும் ஆறிவிட்டது புதுப்பொலிவு பெற்றார், அவரும் ஒரு நல்ல ஜோதிடர். நான் நம்புகிறேன் இதற்காகத்தான் பெரியவர்கள் வஸ்திர தானம் ஏற்படுத்தினார்கள் மேலும் நாம் உடுத்திய புடவை வேட்டி போன்றவைகளை கங்கை போன்ற புண்ணிய நதிகளில் விடுவார்கள் அப்படி விட்டால் விடுபவர்களின் தோஷம் நீங்கும் என்பது ஐதீகம்

ஒவ்வொரு குழந்தையும் கருவிலே இருக்கும் போது அதன் அன்றாட வளர்ச்சியில் தன் இரு கைகளையும் மூடிக்கொண்டே இருக்கிறது . அப்படி பலகாலமாக மூடிக்கொண்டே இருக்கும் கைகளின் உள்ளங்கையிலே அந்தக் குழந்தையின் விதிக்கேற்ப தசைகள் செயல் பட்டு மூடிக்கொண்டே இருந்த காரணத்தால் கோடுகள் விழுகின்றன,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அந்தக் கோடுகளே ரேகைகள், அந்த ரேகைகளும் அந்தக் குழந்தை எப்படிக் கையை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்று ஏற்கெனவே தீரமானித்த இறையின் விருப்பத்திற்கேற்பவே அந்தக் குழந்தையின் தசைகளும் தசைகளின் அழுத்தமும் அமைகின்றன எல்லாமே கணக்குதான் அவரவர் விதிக்கேற்ற கணக்கு . கூட்டிக்கழித்துப் பார்த்தால் எல்லாமே முறைப்படியேதான் நடக்கிறது என்னும் சூக்ஷுமம் புலனாகும்.

எப்படிப்பட்ட கல்விமான் ஆனாலும் இறையருள் இருந்தால்தான் தகுந்த நேரத்திலே அவன் கற்ற வித்தைகள் உதவும் .என்னதான் ஜோதிடத்தை முறையாகக் கற்றாலும் நீங்கள் சொல்வது பலிக்க வேண்டுமானால் மிக முக்கியமாக யாருக்கு சொல்கிறீர்களோ அவர்களின் விவரங்கள் உண்மையாக இருக்க வேண்டும்.

அது ஜாதகமானாலும் சரி வேறு எதுவாக இருந்தாலும் சரி அதற்கும் மேல் எல்லாமே மிகச்சரியான முறையிலே துல்லியமாக கனிக்கப்பட்டிருந்தாலும், விவரங்கள் அத்தனையும் உண்மையானாலும் .அவரவர் விதிக்கேற்ப உங்கள் பார்வையும் பலன்களும் மாறிவிடக்கூடும் .

இது இறையருளின் மிகவும் நுணுக்கமான கருணையைப் பொருத்ததே . உள்மன ஆன்ம சக்தி வேலை செய்யாமல் வெற்றுக் கல்வி மட்டுமே உதவும் என்று நினைத்தால் அது சரிப்படாது. எதற்குமே அவன் அருள் இருந்தால் மட்டுமே மனிதர்களின் கணிப்புகள் கூட பலிதமாகும்.

என் தாத்தா ஒரு நல்ல ஜோதிடர் அவர் சொன்னது 100 க்கு 80 பேருக்கு பலித்தது, ஆனால் அவர் தன் மகளாகிய என் தாயாருமாகிய கமலம்மாள் அவர்களுக்கு சொன்னது பலிக்கவில்லை எங்கே தவறு என்று இது வரை தெரியவில்லை அதை அறியவும் முடியாது இது போன்ற தேவ ரகசிங்களை அறியும் அளவுக்கு சக்தியில்லாத அற்ப மானுடர்கள் நாம்

ஜனன ரகசியம்

ஒரு குழந்தை பிறக்கிறது என்பது ஒரு ஆண் ஒரு பெண் தொடர்பான விஷயம் மட்டுமல்ல அது தாய்மை, அந்தக் கர்ப்பம் இறைவனின் அருள்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அந்தக் குழந்தையின் பூர்வஜென்ம ப்ராப்தம், ஒரு ஆத்மா மானிடரின் கருவிலே வந்து அடைவது என்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல,

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இல்லற சுகத்திலே ஈடுபட்டுவிட்டால் குழந்தை பிறந்தவிடுமா ? நன்றாக யோசித்துப் பாருங்கள் ஒரு நாட்டையே வாங்கும் அளவுக்கு ,அல்லது ராக்கெட்டிலே சந்திர மண்டலத்துகே போக செலவழிக்க இயலும் அளவுக்கு செல்வம் மலைபோல் குவிந்திருந்தாலும் ஒரு குழந்தைச் செல்வத்தை அடைந்து விடமுடியுமா என்று யோசியுங்கள், முடியாது ! அதனால்தான் பல பணக்காரார்கள் குழந்தைச் செல்வத்துக்காக தவம் இருக்கிறார்கள், யார் எதைச் சொன்னாலும் உடனே பதறி ஓடிப்போய் பரிகாரம் செய்கிறார்கள். சாமியாரையும் போய்ப் பார்க்கிறார்கள், சாமியார் நினைத்தால் குழந்தை பாக்கியம் கிட்டுமா? இவர்கள் வம்சத்திலே இவர்களுக்கு முன்னோர்கள் செய்த பாவத்தின் பலன். அதுதானே நிர்ணயிக்கிறது.

ஒரு குழந்தை பாக்கியம் என்பது இறையின் அருள், பூர்வ ஜென்ம புண்ணியம் அதனால்தான் குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பார்கள். இறைவன் மனது வைத்தால் அவனே குழந்தையாய் வருவான். ஆனால் இறைவன் அருள் இல்லையென்றால் குழந்தை பாக்கியம் என்பது வெறும் கனவே! இதை மனப்பூர்வமாக உணர்ந்தாலே பாவங்கள் செய்வது குறையும் .

வாடகைத்தாயார் வைத்துக் கொண்டு அதிகப் பணத்தை அளித்து அவர் மூலமாக குழந்தை பெற்றுக் கொண்டாலும் அது இவர்களின் வம்சமாக வாரிசாக கணக்கிலே எடுத்துக் கொள்ள முடியுமா? அல்லது தத்து எடுத்துக் கொன்டாலும் அந்தக் குழந்தையை இவர்கள் என்னதான் பாசமாக வளர்த்தாலும் அந்தக் குழந்தையும் இவர்களிடத்தே பாசமாக இருந்தாலும் அந்தக் குழந்தை சட்ட பூர்வமாக வேண்டுமானால் இவர்களின் வாரிசாகவோ வம்சமாகவோ இருக்கலாம் ,

ஆனால் பூர்வ ஜென்ம தொடர்பிலே இதுவும் ஒரு விதி என்று எடுத்துக் கொண்டு திருப்திப் படலாமே தவிர உண்மையான ரத்த பந்த வாரிசாகுமா? வம்சமாகுமா? அந்தக் குழந்தைக்கு உண்மையான முன்னோர்களின் குணம்தானே அந்தக் குழந்தையின் (ஜீனில்) கருவிலே விதைக்கப்பட்டிருக்கும் என்பதை உணருங்கள். ஆகவே ஒரு குழந்தை பிறப்பு ஒரு கர்ப்பம் ஒரு தாய்மை என்பது எவ்வளவு புனிதமாக கருதப்படவேண்டும் என்பதை உணருங்கள், அணுவைச் சதகூறிட்ட

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அணுவிலும் உளன் என்று இறையை வர்ணிப்பது போலவே அணுவைச் சதகூறிட்ட அணுவிலிருந்து பிறப்பதுதானே குழந்தை ?
புரியவில்லையா மேலும் பார்ப்போம்

ரெட்டைக் குழந்தை ரகசியம்

கருவுறுதலின் போது, ஆண்களிடம் இருந்து வரும் ஆயிரக்கணக்கான விந்து செல்களில் ஒரு விந்து செல் மட்டும் பெண்களின் கருப்பையில் உள்ள அண்டத்துடன் இணைந்து கருமுட்டையை உருவாக்குகிறது. இவ்வாறு ஆண், பெண் இணைந்த கரு முட்டை இரண்டு இரண்டாகப் பிரிந்து, ஆயிரக்கணக்கான செல்கள் கொண்ட கரு முட்டைகளாக மாறுகின்றன. இது (மொருலா) என்று அழைக்கப்படுகிறது.

இந்த மொருலா வளர்ச்சியடைந்த பின், அதன் குறிப்பிட்ட பகுதிகள் குழந்தைகளின் உடலுறுப்புகளாக மாறுகின்றன. மொருலாவானது அதனுடைய வளர்ச்சிக்கு முன்பாகவே இரண்டாகப் பிரிந்தால், பிரிந்த இரண்டு மொருலாக்களும் இரண்டு குழந்தைகளின் உடலாக, தனித்தனியே வளர்ச்சிபெறத் தொடங்குகிறது. அவை முழு வளர்ச்சியடைந்து ரெட்டைக் குழந்தைகளாகப் பிறக்கின்றன. இவ்வளவு தான் ரெட்டை குழந்தை ரகசியம்

இரண்டாவதாகப் பிறந்த குழந்தையே மூத்த குழந்தையாக கருத வேண்டும் ஏனென்றால் அதுதான் முதலிலே கருத்தரித்திருக்கும் ஆனால் ரெட்டையர்கள் தான் ஏனென்றால் ஒன்பது முதல் பத்து மாதங்கள் ஒரே கருவரையிலே ஒரே நேரத்திலே வளர்ந்த குழந்தைகள் அதனால் ரெட்டையர்கள்தான், முதலில் பிறந்த குழந்தைக்கு அது பிறந்த அன்று தான் பிறந்த நாள், அன்று பிறந்த குழந்தைக்கு அது பிறந்த அன்றுதான் பிறந்த நாள் ஆனாலும் மூத்த குழந்தை இரண்டாவதாகப் பிறந்ததே. நான் பிறந்த நேரம் மற்றும் சூலுற்ற நேரம் இதில் எதை வைத்து ஜோதிடம் பார்ப்பது என்று கேட்டதற்கு ஜோதிடம் படித்து விட்டு ஒரு உறவினர் சொன்னது...

சூலுற்ற நேரம்தான்.ஜாதகம் கணிக்க சரியான நேரம் என்று ஒரு கருத்து சொல்கிறார்கள், ஆனால் சூலுற்ற நேரத்தை கணிக்க பின்னோக்கி போடும் கணக்கு உத்தியை பயன்படுத்தலாம் என்கிறார்கள், சூலுற்ற நேரத்தைக் கண்டுபிடிக்க உலகில் இயற்கையாகப் பிறந்தநேரத்தில் இருந்து பின் கணக்கிட்டு சூலுற்ற நேரத்தை நிர்ணயிக்கிறோம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ராசி அம்சம்

ராசி அம்ச கிரகங்களின் நிலை சூலுற்ற நேரத்தில் இருந்தே கணக்கிடப் படுகின்றன. கர்ப்ப செல் நீக்கி மீதி உள்ள நாட்கள்தான் கிரக சஞ்சாரக் கணக்கில் எடுக்கப்படும். பிறந்த தேதியில் இருந்து அல்ல சிஸேரியன் செய்து நமக்கு வேண்டிய நேரத்தில் எடுத்தாலும், கிரக பாதிப்பு மாறப் போவதில்லை. மாறாக அதனால் சூலுற்ற நேரம் தவறாகக் கணிக்கப்பட்டு ஜாதகமே தவறாகப் போய்விடும். என்கிறார் திரு கண்ணன் ராமசாமி அவர்கள்

ஆனால் சூலுற்ற நேரத்தைக் கணிப்பது மஹாகடினமான காரியமாயிற்றே சற்று பிசகினாலும் எல்லாமே வீணாகிவிடுமே. இப்போது அது போல் சூலுற்ற சரியான நேரத்தைக் கணிக்க ஆளிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. எல்லா நல்ல ஜோதிடர்களும் கணிக்க முடியும்.

ஜாதகத்தில் "கர்ப்ப செல் நீக்கி balance ....தசை இருப்பு.....வருடம்...மாதம்.....நாள் " என்று எழுதுவார்களே அதுதான் நான் கேள்விப்பட்ட வரையிலே சூரியன் புறப்பட்டு சுமார் எட்டு நிமிடங்களுக்கு பிறகே சூரியக் கதிர் பூமியை அடைகிறது குழந்தை பிறந்த நேரத்திலிருந்து பத்து நிமிடத்துக்கு முன் சூரியனிலிருந்து புறப்பட்ட கதிர்கள் தான் அக் குழந்தையை அடைகிறது என்று கணிக்கிறார்கள் என்று சொல்வார்கள்.

ஆனாலும் குழந்தை பிறந்த நேரத்திலிருந்து சுமார் 15 நிமிடத்துக்கு முன்பாக இருக்கும் நேரத்தையே குழந்தை பிறந்த நேரமாகக் கணிக்கிறார்கள். இந்தக் கணிப்பிலேயே எட்டு நிமிடம், பத்து நிமிடம், பதினைந்து நிமிடம் என்று கணக்கு வேறு படுகிறது அப்படி இருக்க கருவான நேரத்தைக் கணிப்பது அவ்வளவு எளிதான செயலா என்னும் திகைப்பிலிருக்கிறேன் நீங்கள் அப்படிக் கருவான நேரத்தை சரியாகக் கணிக்க வழிகள் உங்களுக்கு தெரிந்தால் எழுதுங்கள் எல்லோருமே தெரிந்து கொள்ளலாம் பயனடையலாம்

துல்லியமான கருவாகும் நேரக்கணிப்பு

ஆனால் இவை இயலாத காரியமாகும்.யாராலும் கரு உருவாகும் நேரத்தை துல்லியமாக கண்டறிய முடியாது.இது படைப்பின் இரகசியமாகும். Sri Prahaspathi Advanced K.P. Astrology Institute -

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

Chennai என்கிற இன்ஸ்டியூட்டில் உயர்கணித சார ஜோதிடமுறையான இந்தக் கேபீ கணிப்பு முறையைக் கற்றுத் தருகிறார்கள் ஆனால் இந்த கேபீ கணிப்பு முறையையும் முறையாக உபயோகப்ப படுத்துவதில்லை பலர் அதனால் இன்னும் சூலுற்ற மிகச்சரியான துல்லியமான நேரத்தை கணிக்க இயலவில்லை என்பதே உண்மை

நான் பதிவின் ஆரம்பித்திலே கூறியதுபோல .ஒவ்வொறு பிறப்பும் குறிப்பிட்ட காரணத்திற்காக ஒரு குறிப்பிட்ட நேரம் ,இடம் மற்றும் பெற்றோரை தேர்ந்தெடுத்தே பிறப்பு எடுக்கிறது. குழந்தையானது கருவாகி வளர ஆரம்பிக்கும்போது பிரபஞ்ச கதிர்களின் தாக்கம் அக்குழந்தைக்கு கிடைத்துவிடுகிறது.

ப்ரபஞ்சத்தில் சூரியக் குடும்பம் என்பது பல உள்ளது, ஒவ்வொரு சூரியக் குடும்பத்தைச் சுற்றியும் கிரகங்கள் சுழல்கின்றன. ஆனால் ஜோதிடம் என்பது நவக் கிரகங்களின் அடைப்படையில் சொல்லப்படுவதே.
ஜனன காலத்தில் ஒவ்வொரு கிரகத்தின் இருப்பை கணித்து அந்தந்த இருப்புக்கேற்ப ராசி அம்சம் என்று இரு கட்டங்கள் வரைந்து அந்தக் கட்டங்களில் அந்தந்தக் கிரகங்களின் இருப்பைக் காண்பித்து அதனை வானசாத்திரம் கணிதம் மெய்ஞ்ஞானம் மூலமாகக் கணித்து அவற்றுக்குண்டான, அதாவது அந்தந்தக் கோள்கள் ஜாதகருடைய ஆயுட்காலத்தில் எப்படி எந்த வருடம் எங்கே இருக்கும் என்பதைக் கணித்து அதன் படி பதவீ பூர்வபுண்யானாம் என்று தொடங்கி அவர் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதைக் கணித்து அவருக்கு பலன் சொல்வதே “ஜாதகம்”

அவர் பிறந்த நேரம், பிறந்த நக்ஷத்திரம் பிறந்த ராசி போன்றவைகளை வைத்து ஒவ்வொரு கிரகங்களின் சஞ்சாரத்தையும் கணித்து அவை எப்போது நீசமடைகிறது எப்போது பலம் பெறுகிறது. எப்போது நேர்ப்பார்வையாக சந்திக்கின்றது என்பவை இதிலடங்கும்.

அதையும் தவிர எப்படிப்பட திறமையான ஜோதிடராயிருந்தாலும் வாக்கு பலிதம் என்னும் வரம் அமையவில்லை என்றால் அவர் சொல்லும் ஜோதிடமுமும் கூட பலிக்காமல் போகும் . வாக்கு பலிதம் என்பது ஒரு வரம் ! எல்லோருக்கும் அமைவதில்லை அப்படி அமையும் ஜோதிடரையே அனேகரும் நாடிப் போவார்கள் அவரை விட திறமையான ஜோதிடர்களும் இருக்கலாம் ஆனால் வாக்கு கைவரப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெற்ற ஜோதிடரே புகழ் பெறுவார் அவருடைய ஜாதகம் அப்படி அனுஷ நக்ஷத்திரம் அதாவது அனுஷம் என்பது இந்திய வானியலிலும் சோதிடத்திலும் இராசிச் சக்கரத்தில் சொல்லப்படுகின்ற இருபத்தேழு நட்சத்திரக் கோணப் பிரிவுகளுள் 17 ஆவது பிரிவு ஆகும். இந்தியப் பஞ்சாங்க முறையில் சந்திரன் புவியைச் சுற்றி வரும்போது அனுஷ நட்சத்திரக் கோணப் பிரிவுக்குள் இருக்கும் காலம் அனுஷ நட்சத்திரத்துக்கு உரிய காலம் ஆகும். இந்திய சோதிடத்தின்படி, இந்தக் காலப் பகுதியில் பிறக்கும் ஒருவருடைய "பிறந்த நட்சத்திரம்" அல்லது "ஜன்ம நட்சத்திரம்" அனுஷம் ஆகும்.அனுராத (Anuraadha) என்பது "தெய்வீக ஒளியின் சீடர்" என்னும் பொருள் கொண்டது. இதன் அடையாளக் குறியீடு "தாமரை" ஆகும். அனுஷ நகஷத்திரக் காரர்களுக்கு வாக்கு பலிதம் உண்டு அதனால் ஜோதிடரைக் கேளுங்கள் அவர் அனுஷ நக்ஷத்திரமா என்று

சுயம் உணர்தலும் தெய்வ பக்தியும்

இப்படி சுய உணர்தல் மூலமாகவோ அல்லது அடுத்தவர் அனுபவத்தின் வாயிலாகவோ தெரிந்துகொள்ளவேண்டிய செய்தியைத்தான் சில கருத்துக்கள் மூலமாக புரிய வைக்க நான் முயன்றேன்

தெய்வ பக்தியும் இறை நம்பிக்கையும் எல்லாம் சுயமாக உணர்தல் போல் வராது , ஆனாலும் பக்தியைப் பற்றியும் இப்படிப்பட்ட ஜோதிட சாத்திரங்கள் பற்றியும் நம்பிக்கைகள் பற்றியும் நம் அனுபவத்தை வைத்து நாம் விளக்கி சொல்லும் போது ஒரு தெளிவு கிடைக்கலாம் எனும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் நானும் முயன்றேன்

ஒவ்வொரு நாளும் இருவர் உணர்ச்சிகளும் சூழ்நிலையும் சம்பவங்களும் மன இறுக்கங்களும் மாறிக்கொண்டே இருப்பதால் முறைப்படி ஜாதகம் பார்த்து பொருத்தம் பார்த்து மனப்பொருத்தமும் பார்த்து திருமணம் செய்துகொண்டு ஒன்றாக சுகதுக்கங்களிலே பங்குகொண்டு பல தியாகங்கள் செய்து பலரை வளர்த்து ஆளாக்கி பலபேருக்கு நன்மை செய்து நாற்பது வருடங்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து

இயன்றவரையிலே மனமொத்து ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முயற்சித்து ஒற்றுமையாய் வாழ்ந்த தம்பதிகளாலேயே

நாற்பது வருட தாம்பத்தியத்துக்கு பிறகும் முழுமையாக பூரணமாக

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடிவதில்லை என்பதே உண்மை.நிதர்சனம் . அப்படி இருக்க ஒருநாள் பழகியோ ஒரு வாரம் பழகியோ ஒருவருடம் பழகியோ அல்லது திருமணத்துக்கு முன் சேர்ந்து வாழ்ந்தோ கூட ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது நிச்சயமாய் இயலாத காரியம். உண்மை இப்படி இருக்க கண்டதும் காதல் எப்படி வாழ்க்கைக்கு ஒத்துவரும்?

இந்தக் கால இளைஞர்களும் யுவதிகளும் காதல் கொள்கிறார்களே அதற்கே இவ்வளவு விளக்கம் சொல்ல வேண்டியுள்ளதே அப்படி இருக்க சரியான பருவத்துக்கே வராத பதிமூன்று அல்லது பதினான்கு வயதிலே காதல் என்னும் காலமாகிப் போய்விட்டதே ! இதை எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? மீண்டும் " பாலிய விவாஹம் " என்னும் நிலைக்கே தள்ளுகிறர்களா நம்மை?

பாலியல் காதல் பாலியல் விவாஹம் ஆகியவைகளை விட பாலிய விவாஹம் ஒன்றும் குறைவானதல்ல

என்றே தோன்றுகிறது , குழந்தை மனமாய் இருக்கும் போதே உனக்கு அவன் தான் புருஷன் உனக்கு இவதான் பொண்டாட்டின்னு ஒரு ஒப்பந்தம் போட்டு அவர்கள் வயதுக்கு வந்தபிறகு முறையாக திருமணம் செய்யவேண்டிய கட்டாயத்துக்கு நம்மை இந்த ஊடகங்களும், திரைப்படங்களும் கொண்டு வந்து விட்டதே . வருத்தமாய்த்தான் இருக்கிறது. ஆனாலும் யோசனை செய்ய வேண்டிய செய்தி தான் இது

நுணுக்க இல்லறம்

இந்த நுணுக்கத்தை அறிந்த பெரியோர்கள் ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் தான் என்னும் வரைமுறையை ஏற்படுத்தி வைத்தார்கள், திருமண ஒப்பந்தம் செய்துகொண்டு இருகரமும் கோர்த்துக்கொண்டு

பஞ்சபூதங்களை சாட்சியாக வைத்துக்கொண்டு அக்கினியின் முன்னால் சப்தபதி என்னும் ஏழு அடிகள் எடுத்து வைத்து இனி இணையாக வாழ்வோம் பிரியோம் எத்தனை துயர் வந்தாலும் கடைசீ வரை ஒன்றாய் சேர்ந்து வாழ்வோம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

“யாயும் ஞாயும் யாயும் ஞாயும்
யாயும் ஞாயும் யாரா கியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்,
யானும் நீயும் எவ்வழி யறிதும்,
செம்புலப் பெயனீர் போல,
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.
என்று

சங்கப் புலவர்களில் ஒருவரான . -செம்புலப் பெயல்நீரார் என்னும் புலவர் குறுந்தொகையில் பாடிய குறுந்தொகை- 40) பாடலின் நம் தாயும் தந்தையும் ஒருவரை ஒருவர் அறியாதவர்கள். ஏற்கெனவே எவ்வகையிலும் உறவினர்களும் இல்லை. ஆயினும் கண்ணியம் தவறாது இணைந்தே வாழ்ந்தனரே அது போல நீயும் நானும் கூட இதற்கு முன்பாய் அறிமுகமானவர்கள் இல்லை. ஆயினும் நாம் ஒருவரை ஒருவர் கண்ட கணத்தில் பாலை நிலத்தில் பெய்த மழை போல நம்மிருவர் நெஞ்சங்கள் தாமாகக் கலந்துவிட்டன." அதனால் மண்ணும் நீரும் போல வானும் நிலவும் போல் இணைந்தே வாழ்வோம் என்னும் பொருளுக்கேற்ப

“நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு தாளுஞ் சிலம்புஞ் சதங்கையும் தண்டையுஞ் சண்முகமுந் தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே”
என்று திரு அருணகிரிநாதர் அருளிச்செய்த கந்தர் அலங்காரப் பாடலில் வருவது போல் எது வரினும் எமை இறைவன் இமையாமல் காப்பான் என்னும் மனத்திண்மையுடன்

அன்புடன்
தமிழ்த்தேனீ

நாடி ஜோதிடம்

நாடிஜோதிட முறைக்கு சமஸ்கிருதத்தில் " பத்ததி " எனப் பெயர். பத்ததி என்றால் வழி அல்லது பாதை எனப் பொருள். பாரத தேசத்தில் எத்தனையோ பத்ததி முறைகள் இருந்தன. நடைமுறையில் சில பத்ததிகளே பயன்படுத்தப்படுகிறது. பிரபலமான சில பத்ததி என்றால்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்ரீபத்ததி மற்றும் தெற்கில் கண்டுபிடிக்கப்பட்ட கிருஷ்ணமூர்த்தி பத்ததி ஆகியவையாகும்

நாடிகள்

1. சப்த ரிஷி நாடி 2. சந்திரகலா நாடி 3. மீன நாடி 4. பிருகு நாடி 5. சிவ நாடி 6. நந்தி நாடி 7. கால சக்கர நாடி 8. கணேச நாடி 9. சூரிய நாடி 10. சந்திர நாடி 11. அங்கார நாடி 12. புதன் நாடி 13. குரு நாடி 14. சுக்கிர நாடி 15. சனி நாடி. என்று பதினைந்து வகை நாடிகள் உள்ளன . இவற்றுள் எந்த நாடி பார்க்கிறார்கள் என்பதையே நாம் அறிய முடியாது

ஆரூடம் :

ஆரூடம் என்று ஒரு ஜோதிடக்கலை உண்டு மற்றும் சோழி ஜோதிடம் என்றும் உண்டு, சோழி என்று சொல்லும்போது நமக்கு நினைவுக்கு வரும் விஷயம், ஜோதிட ரீதியான பிரசன்ன முறை பார்ப்பது தான்.

உப்புக் கடலின் ஆழங்களில் உருவாகும் சோழிகளில் அராபிய சோழி, புலி சோழி, முட்டை சோழி, கத்தரிப்பூ சோழி, மான் சோழி, பூனை சோழி, பாம்பு தலை சோழி, மோதிர சோழி, பண சோழி, வெள்ளை சோழி என்று பத்துக்கும் மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. மகாலட்சுமியின் பிறப்பிடமான கடலில் தோன்றிய காரணத்தால்,

நமது நாட்டில் ஆன்மிக பயிற்சி மற்றும் பூஜைகளுக்கு சோழிகள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, வீட்டில் மகாலட்சுமிக்கு உரிய பூஜைகளை செய்யும்போது சோழிகளை பயன்படுத்துவது வழக்கத்தில் உள்ளது. பொதுவாக, நவராத்திரி காலங்களில் வீடுகளுக்கு வரும் பெண்கள், தேவியின் வடிவமாக கருதப்பட்டு

மஞ்சள், குங்குமத்தோடு சோழிகளை வழங்குவதும் நமது நாட்டில் பல இடங்களில் வழக்கத்தில் இருந்து வருகிறது. சோழிகளில் சுண்ணாம்பு சத்தான ‘கால்சியம்’ பெருமளவுக்கு இருக்கிறது. கால்சியத்தின் தொடர்பு அன்றாட வாழ்க்கையில் பெண்களுக்கு ஏற்படும் பொழுது கெட்ட ஆவிகளின் தொல்லைகள் ஏற்படாமல் பாதுகாக்கப்படுவதாக நம்பிக்கை உண்டு.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சோழிகள் போட்டு பலன் சொல்லல்

சோழிகளை குலுக்கிப் போட்டு, அவை விழுகின்ற முறைகளுக்கு ஏற்ப பலன்கள் நிர்ணயம் செய்யப்பட்டன. நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே மேற்கு ஆப்பிரிக்க பழங்குடி மக்கள் 'ஓபி கணிப்பு' என்ற முறையை கையாண்டு வந்துள்ளார்கள்.

அதாவது, நான்கு சோழிகளை மட்டும் குலுக்கி போட்டு அவை விழும் விதங்களுக்கு ஏற்ப, நினைத்த காரியம் நடக்கும் அல்லது நடக்காது என்ற முடிவுக்கு வந்தனர். சோழிகளை தரையில் போடுவார். அவ்வாறு போடப் படும்போது நான்கு சோழிகள் நிமிர்ந்து இருந்தால் காரியம் நடக்கும் என்றும், நான்கு சோழிகளுமே கவிழ்ந்து இருந்தால் நடக்காது என்றும் சொல்வார்கள்.

அமெரிக்க நாட்டு பழங்குடியினரும் சோழிகளை பயன்படுத்தி எதிர்காலத்தை கணிக்கும் முறையை வழக்கத்தில் கொண்டிருந்தனர். மூன்று நிமிர்ந்து இருந்தால் சற்று கால தாமதம் என்றும், இரண்டு நிமிர்ந்து இருந்தால் காரிய வெற்றி என்றும், ஒன்று மட்டும் நிமிர்ந்து இருந்தால் காரியம் நடக்காது என்றும் கணிக்கப்பட்டது.

இந்தியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, ஜப்பான் மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆகிய பல நாடுகளில் பெண்மையை பிரதிபலிக்கும் ஆன்மிக வடிவமாகவும், தாய்மை மற்றும் குழந்தைப்பேறு ஆகியவற்றை தரக்கூடிய இயற்கையின் பரிசாகவும் சோழிகள் கருதப்பட்டன.

ஜப்பானில் பிரசவத்தை எதிர்நோக்கும் பெண்கள் சோழியை தம்முடன் வைத்துக்கொள்வதன் மூலம் சுகப்பிரசவம் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. மேலும், ஆப்பிரிக்க பெண்கள் இடுப்பை சுற்றிலும் சோழிகளை கோர்த்து அணிவதன் மூலம் குழந்தை பேறு உள்ளிட்ட பிரசவம் சம்பந்தமாக சிக்கல்கள் விலகுவதாக நம்புகிறார்கள்.

சோழிகளைப் போட்டு அவைகளின் நிலையை உணர்ந்து அவை இருக்கும் திசை உணர்ந்து அவை கவிழ்ந்திருக்கிறதா நிமிர்ந்திருக்கிறதா என்றெல்லாம் பார்த்து பலனை சொல்லிவிடுவார்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜாமக்கோள் ப்ரசன்னம்

ஜாமக்கோள் ப்ரசன்னம் : ஆரம்ப காலத்தில் மனிதன் வழிப்போக்கில் சென்று கொண்டிருக்கும்போது எந்த திசையில் இருந்து கேள்வி கேட்கிறார்களோ அந்த திசையையும் அதற்கு எதிர் திசையில் உள்ள சகுனத்தையும் வைத்து பலன் சொல்லி வந்தார்கள் மற்றும் தனக்கு முன்னால் உதயமாகும் நிமித்தத்தை வைத்தும் பலன் சொல்லி வந்தார்கள். அதேபோல் அவர்கள் கொண்டு வரும் பூவின் . பழத்தின் தன்மைக்கேற்ப பலன்களை சொல்வார்கள்
எட்டு திக்குக்குள் எட்டு ஜாமத்தை வைத்து அமைத்து அதனுள் உதயத்தை ஓடவிட்டு உதயத்திலிருந்து சூட்சும ஆரூடத்தை எடுத்து பலன் சொல்லிவந்தார்கள். நிமித்த ஆரூடம், சகுன ஆரூடம், பறவைகள், கௌரி,பஞ்ச பட்சி, தொடுகுறி சாஸ்திரம் இது போன்ற பல பிரசன்னங்களையும், யுக்திகளையும் ஆராய்ந்து

அரசர்கள் மற்ற நாட்டின் மீது படையெடுத்து செல்லவும் , மற்ற நாட்டினர் எப்போது படையெடுப்பார்கள் என அறியவும் பயன்படுத்தி வந்தார்கள் சிலப்பதிகாரத்தில் பிரசன்னம் இருப்பதையும், சீவக சிந்தாமணியில் பிரசன்னம் பயன்படுத்தப் பட்டுள்ளதையும் தெளிவாக பார்க்கிறோம்.

வடமொழியில் ராவணேஸ்வரன் இயற்றிய ராவண காவியத்தில் ஜாமக்கோள் பிரசன்னத்தை பற்றியும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. சினேந்திர மாலையில் பிரசன்னத்தை பற்றியும் தெளிவாக கூறப்பட்டுள்ளது.
ஜாமக்கோள் பிரசன்னத்தை பற்றி தேவக்கோட்டையை சேர்ந்த ஜோதிடர்கள் சென்ற நூற்றாண்டில் நுணுக்கமான விஷயங்களை பற்றியும் ஆய்வு நோக்குடன் ப்ரசன்ன நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

ஓம் நமோ பகவதே வாசுதேவாய.. *என்னை இந்த உலகில் மனித பிறவியாக படைத்து நல்ல பெற்றோர்களை கொடுத்து என்னுடைய வாழ்வில் எனக்கு துணையாக எப்போதும் என்னுடன் இருந்து கொண்டிருக்கும் முழுமுதற் கடவுளான பகவான் ஶ்ரீ கிருஷ்ணன் திருவடிகளை சரண்அடைகின்றேன். * உலகிற்கே ஜோதிடம் என்ற கலையை கற்று கொடுத்த முனிவர் பராசிகர் அவர்களின் திருவடிகளை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சரண் அடைகின்றேன். குருவடி சரணம் திருவடி சரணம்.

ஜாதகம் பார்த்தல், ஜாமக்கோள் ஆருடம், சந்திர நாடி, பிருகு நாடி மருத்துவ ஜோதிடம் பூர்வகர்ம ஜோதிடம்,தாம்பூல பிரசன்னம் ,சோழிய பிரசன்னம் தேவப்பிரசன்னம், எண் கணிதம் பேர் ராசி முகராசி பட்சி தேவாங்கு ஜோதிடம், ஹீப்ரு முறையில் எண் கணிதம் பார்த்தல் போன்றவைகள் உள்ளன, இதைத்தவிர இப்போதெல்லாம் கணிணியே கணித்துவிடுகிறது ஜாதகத்தை லாட்டியூட் லாங்கிட்யூட் மட்டும் சரியாகக் கொடுத்து பிறந்த நேரம் நாள் அளித்தாலே போதும்

ஆனால் எல்லவற்றுக்குமே அடிப்படைநாம் கொடுக்கும் விவரங்கள் உண்மையாக திரித்துக் கூறப்படாமல் இருக்கவேண்டும் உண்மையான விவரங்களாயிருக்க வேண்டும் , மறைத்தோ திரித்தோ சொன்னால் அதற்கேற்ற பலன் தானே கிடைக்கும் அதன் பிறகு ஜோதிடரைக் குறை கூறுதல் முறையன்று . இவை எல்லாவற்றுக்கும் மேலாக மனப்பொருத்தம் என்று ஒன்று உள்ளது அப்படி மனதிலே இணையாமல் ஜோதிடம் பார்த்தல் ஒரு பலனையும் தராது . மனம் இணைந்தால் வாழ்க்கை வசப்படும்

பந்ததி

ஜோதிட முறைக்கு சமஸ்கிருதத்தில் " பந்ததி " எனப் பெயர். பந்ததி என்றால் வழி அல்லது பாதை எனப் பொருள். பாரத தேசத்தில் எத்தனையோ பத்ததி முறைகள் இருந்தன. நடைமுறையில் சில பந்ததிகளே பயன்படுத்தப்படுகிறது. பிரபலமான சில பந்ததி என்றால் வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்ரீபந்ததி மற்றும் தெற்கில் கண்டுபிடிக்கப்பட்ட கிருஷ்ணமூர்த்தி பந்ததி ஆகியவையாகும்

இந்த ஜென்மத்திலே நானும் நீயும் பிரியாமல் வாழ்ந்து முழுமையாய் வாழ்ந்தே கழிப்போம் என்னும் உறுதி மொழி எடுத்துக்கொண்டே வாழவேண்டும் என்னும் நியதியை ஏற்படுத்தினார்கள்.அப்படிப்பட்ட மன உறுதி ஒன்றுதான் எப்போதுமே நம்மைக் காக்கும் தாரகமந்திரம்

ஆகவே ஜோதிடம் ஜாதகம் எல்லாமே உண்மைதானென்றாலும் எப்போதும் பிரியமாட்டோம் என்னும் உறுதியான மனப்பாங்கே உண்மை என்பதை வலியுறுத்தவே இந்தக் கட்டுரையை எழுதினேன் ஹிட்டைட்ஸ் என்போர் சம்ஸ்கிருதம் தொடர்புள்ள இந்திய- ஐரோப்பிய மொழி ஒன் றைப் பேசினர். கி.மு.1600 முதல் கி.மு. 1200 வரை 400 ஆண்டுகளுக்கு சிரியா-துருக்கி பகுதிகளை ஆண்டஹிட்டைட்ஸ் (Hittites) மக்கள் ஜோதிட நம்பிக்கைகளைப் பார்ப்போம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கோள்களின் நிலை

“விமான பயணத்தில் ஒரு குழந்தை எந்த நாட்டின் மேல் பறக்கும் போது பிறந்ததோ அந்த நாட்டின் பிறந்த தாக கருதப்படுகிறது.இதற்கு Latitude longitude... எப்படி ? நான் சர்வே துறையில் சிலகாலம் தியாடலைட் total station GPS .பயற்சி பயன்பாடுகள்..எனவே. இந்த கேள்வி.கேள்வி கேட்பது கடினமாச்சே. என்னும் கேள்வியால் எழுந்த சந்தேகத்தின் பலனாய் மேலும் ஆராய்ந்ததில் கிடைத்த விவரங்கள் .

சட்டத்தின் படி எந்த நாட்டின் மேல் பறக்கும் போது அக்குழந்தை பிறந்ததோ அந்த நாட்டின் குடியுரிமை பெறுகிறது ஆனால் கோளின் படி அந்தக் குழந்தை பிறந்த நேரத்திலே கோள்களின் நிலை Latitude longitude.. இரவா பகலா இவைகளை ஆராய்ந்தே ஜாதகம் குறிக்கப்படல் வேண்டும் கம்யூட்டர் ஜாதகம் கணிக்கத் தொடங்கிய பின்னரே Latitude longitude. ஆராயப்பட்டன என்று நாம் நினைக்கிறோம்

ஆனால் அதற்கு முன்பாகவே அதை வேறு விதமாக ஆராய்ந்தார்கள் அதைப் பற்றி முழுமையாகப் படித்துவிட்டுத்தான் எழுத வேண்டும். நாம் கிளம்பும் நாட்டிலே இரவென்றால் செல்லவிருக்கும் நாட்டிலே பகலாயிருக்கலாம் ஆனாலும் அந்த நாட்டுக்கு நீங்கள் செல்லும் போது அந்த நாட்டிலே அது இரவாயிருக்கலாம்

ஆனால் நம் நாட்டிலே பகல் , ஆனாலும் விமானப் பயணத்தின் போது எந்த நாட்டின் மேல் பறக்கிறோமோ அந்த நாட்டிலே இரவா பகலா என்றுதான் யோசிக்க வேண்டும் ஆகவே தெளிவாக சிந்திக்க வேண்டும்.

சட்டப்படி எந்த நாட்டின் மேல் பறக்கும் போது அக்குழந்தை பிறந்ததோ அந்த நாட்டின் குடியுரிமை பெறுகிறது ஆனால் கோளின் படி அந்தக் குழந்தை பிறந்த நேரத்திலே கோள்களின் நிலை Latitude longitude.. இரவா பகலா இவைகளை ஆராய்ந்தே ஜாதகம் குறிக்கப்படல் வேண்டும் கம்யூட்டர் ஜாதகம் கணிக்கத் தொடங்கிய பின்னரே Latitude longitude. ஆராயப்பட்டன என்று நாம் நினைக்கிறோம்

ஆனால் அதற்கு முன்பாகவே அதை வேறு விதமாக ஆராய்ந்தார்கள் அதைப் பற்றி முழுமையாகப் படித்துவிட்டுத்தான் எழுத வேண்டும் இரவா பகலா என நீங்கள் சொன்னதால்...
அதிலும் குழப்பம்... கிளம்பும் போது இரவே ஊரில் அதேமாதிரி இரவே நீங்க கிளம்பும் நாட்டிலே இரவென்றால் செல்லவிருக்கும் நாட்டிலே

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பகலாயிருக்கலாம் ஆனாலும் அந்த நாட்டுக்கு நீங்கள் செல்லும் போது அந்த நாட்டிலே அது இரவாயிருக்கலாம்

ஆனால் உங்கள் நட்டிலே பகல் , ஆனாலும் விமானப் பயண்த்தின் போது எந்த நாட்டின் மேல் பறக்கிறோமோ அந்த நாட்டிலே இரவா பகலா என்றுதான் யோசிக்க வேண்டும் ஆகவே தெளிவாக சிந்திக்க வேண்டும் . குழந்தை பிறந்த நேரம்...
நம் கடிகாரப்படியா ? அந்த நாட்டின் நேரப்படியா ?
இது ஒரு குளறுபடியா ? கிளறுபடி கிளறவேண்டும் அப்போதுதான் குளறுபடிகள் சரியாகும் யாரும் கேள்வி கேட்காத காரணத்தால் தைரியமாக சில முடிவுகள் .எடுக்கிறார்கள் பணம் ஈட்டும் போலி ஜோதிடர்கள் கிளறுவோம்

"ஏதோ ஒரு மழைத் துளி கருக்கொண்டது
சிப்பியின் வயிற்றிலே ஆழ்கடலில்
அமிழ்ந்திருந்தேன் அமைதியாய் ஒரு
சிப்பியின் வயிற்றிலே சீண்டினார்கள்
விடைத்தேன் புடைத்தேன் வெடித்தேன்
உள்ளிருந்து முத்தாய்
வெளிப்பட்டேன் என் பிறந்த நேரம்
கணிக்கிறார்களாம் "

அட்சரேகை தீர்க்கரேகை

atitude longitude. அட்சரேகை தீர்க்கரேகை

Latitude என்னும் அட்ச ரேகைகள் (நில நேர்க்கோடு) கிழமேற்காக வரையப்பட்டுள்ள கற்பனைக் கோடு. இந்தக்கோடு பூமியின் மையப்பகுதியில் அதிக விட்டத்தைக்கொண்டது.பூமியை சரிபாதியாக பிரிக்கிறது.அதனை பூமத்தியரேகை என்கிறோம்.இந்த நிலநேர்க்கோடு தென் துருவம் மற்றும் வடதுருவம் செல்லச் செல்ல அதன் விட்ட அளவு குறையும்.அதாவது வெவ்வேறு விட்டங்களைக் கொண்டது.

பூமத்திய ரேகையை 0 டிகிரி என வைத்து வடதுருவம் வரை செல்லும்போது 90 டிகிரியாகவும்(N90 Degree) தென் துருவம் வரை செல்லும்போது 90 டிகிரியாகவும் கணக்கிடப்படுகிறது.Longitude என்னும் தீர்க்க ரேகைகள் (நிலநிரைக்கோடு) இவை பூமியின் தெற்கு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வடக்காக வரையப்படும் கற்பனைக்கோடுகள்.இவை அனைத்தும் பூமியை இரு சம பகுதிகளாகப் பிரிக்கின்றன.ஒரே அளவு விட்டமுள்ளவை.வளைகோடுகளாகத் தெரிகின்றன.இங்கிலாந்து நாட்டில் உள்ள கிரீன்விச் நகரத்தில் அமைந்திருக்கும் ராயல் வானிலை ஆய்வுக்கூடத்தை மையமாக வைத்து செல்லும் தீர்க்க ரேகையை 0 டிகிரி என ஆரம்பமாக கணக்கிட்டு கிழக்குப்பகுதி சர்வதேச தேதிக்கோடு வரை

180 டிகிரி கிழக்கு எனவும்,மேற்குப்பகுதி சர்வதேச தேதிக்கோடு வரை 180 டிகிரி மேற்கு எனவும் கணக்கிடப்படுகிறது Equator என்பது பூமியின் மத்தியில் அமைந்துள்ள பூமத்திய அட்ச ரேகை ஆகும்.

Prime Meridian என்பது இங்கிலாந்து நாட்டின் கிரீன்விச் நகரத்தில் உள்ள ராயல் வானிலை ஆய்வு மையத்தின் வழியாக செல்லும் ஆரம்ப தீர்க்க ரேகை ஆகும். இதை 0 டிகிரி என துவக்கமாக வைத்து காலநிலையைக் கணக்கிடப்படுகிறது.இந்த தீர்க்க ரேகையின் கிழக்கு நோக்கி செல்லச் செல்ல கூடுதல் மணியாகவும் இந்த தீர்க்க ரேகையின் மேற்கு நோக்கி செல்லச்செல்ல குறைவான மணியாகவும் கணக்கிடப்படுகிறது.இந்தக்கோட்டிற்கு மறுபகுதியில் அதாவது பூமிக்கு அடுத்த பாதியில் International Date Line எனப்படும் சர்வதேச தேதிக் கோடு வரையப்பட்டு உள்ளது. அதன் தீர்க்க ரேகை 180 டிகிரி ஆகும்

லக்னம்

லக்னம் மற்றும் ராசியை ஜாதகத்தின் இரு கண்கள் எனலாம் . ஒரு ஜாதகத்தின் (Horoscope) இரு கண்கள் என்று லக்னம் மற்றும் ராசியை சொல்லலாம். இந்த கணிதம் இல்லை எனில் ஜாதகம் இல்லை (Horoscope) என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு பிறந்த குழந்தை ஜாதகத்தை (birth chart) இங்கு உதாரணமாக கொள்வோம்.

1. ஒரு குழந்தை எந்த ஊரில் பிறந்ததோ அந்த ஊரில் அன்றைய தின சூரிய உதயம் என்ன வென்று குறித்துகொள்ளவேண்டும் . ஒரு ஊரின் சூரிய உதயம் அந்த ஊரின் அட்சரேகை

மற்றும் தீர்க்க ரேகை கொண்டு உதய நேரம் முடிவு செய்யப்படுகிறது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எப்படி ஒவ்வொரு நாட்டிற்கும் கடிகார நேரம் வித்யாசப்படுகிறதோ அதுபோல் சூரிய உதய நேரமும் வித்தியாசப்படும்.

கடிகாரநேரம் க்ரீன்விச் நேரப்படி அட்சரேகை தீர்க்கரேகை கணிததுடன் முடிவு செய்யப்படுகிறது. இதை ஆங்கிலத்தில் latitude மற்றும் longitude என்று சொல்லுவார்கள். ஆக ஒரு ஜாதகத்தை துல்லியமாக கணிக்க பிறந்த ஊரின் சூரிய உதய நேரம் தேவை.

இதை ஜோதிடத்தில் சூரிய உதயாதி நாழிகை என்று சொல்கிறார்கள் . ஒரு நாழிகை என்றால் என்ன என்று பழகியே ஆகவேண்டிய கட்டாயம் இப்போது . கீழ்க்கண்ட விபரங்கள் நமக்கு உதவும்.

1 நாழிகை = 24 நிமிடம் 2 1/2 நாழிகை = 1 மணி 3 3/4 நாழிகை = 1 முகூர்த்தம்
7 1/2 நாழிகை = 2 முகூர்த்தம் = 1 ஜாமம் 8 ஜாமம் = 1 நாள் (பகல் + இரவு சேர்ந்து)
7 நாள் = 1 வாரம் 15 நாள் = 1 பக்ஷம் (பட்சம்) 2 பக்ஷம் = 1 மாதம் 2 மாதம் = 1 ருது (பருவம்) 3 ருது = 1 ஆயனம் 2 ஆயனம் = 1 வருடம் ஆக இந்த முறையில்தான் முற்காலத்தில் தமிழ் முறையில் நேரங்கள் குறிக்கப்பட்டன.

செயல்பாடு : 1 (சூரிய உதய நாழிகை – உதயாதி நாழிகை)

ஒரு குழந்தை வியாழகிழமை சென்னையில் பிறக்கிறது. மிக சரியாக காலை 6.20 மணிக்கு பிறக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஆக அந்த குழந்தை ஜாதகத்தை கணிக்க கீழ்க்கண்ட முறை கணிதமாக கொள்ளப்படுகிறது.

சென்னையில் அன்றைய தினம் வியாழக்கிழமை சூரிய உதயம் : 6:30 (சூரிய உதயாதி நாழிகை) (இந்த சூரிய உதய நேரம் அனைத்து பஞ்சாங்கங்களிலும் அட்ச ரேகை, தீர்க்க ரேகை கணிதப்படி குறிப்பிட பட்டு இருக்கும். தமிழ் ஜோதிடத்தில் ஒரு நாள் என்பது அன்றைய சூரிய உதய நேரத்தில் இருந்து மறுநாள் சூரிய உதய நேரம் வரை என்று அர்த்தம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உதயாதி நாழிகை

குழந்தை பிறந்த நேரம் காலை: 6:20 ஆக மறுநாள் வெள்ளி கிழமை சூரிய உதய நேரம் : 6;35 (ஒவ்வொரு நாளுக்கும் சூரிய உதயநேரம் சில நிமிடங்கள் மாறுபடும்) இப்போது குழந்தை பிறந்த நேரத்தில் இருந்து மறுநாள் சூரிய உதயம் வரை கணக்கிட்டால் 22 மணி 15 நிமிடங்கள். ஆக இந்த மணி நேரத்தை நாழிகையில் கணிகிடும்போது (2 1/2 நாழிகை = 1 மணி) 55 நாழிகை 62 வினாடிகள்.

ஆக வியாழகிழமை 55 நாழிகை 62 வினாடி என்பது குழந்தை பிறந்த நேரம். செயல்பாடு 2 (அட்சாம்சம் மற்றும் தீர்காம்சம்) ஒரு ஜாதகத்தின் 12 ராசிகளை (zodiac) பூமியின் அட்சாம்ச பாகை (நில நேர்க்கோடு - latitude degree) கொண்டு 12 சம பாகைகளாக பிரிகின்றனர். அதாவது ஒரு ராசி என்பது 30 டிகிரி . (பூமி = 360 டிகிரி). ஒரு ஊரின் நேரம் பூமியில் உள்ள தேசாந்தரப்பாகை என்ற நில நிரைக்கோடு (Longitude) மற்றும் (latitude) கணித கணக்கீட்டின்படி ஒவ்வொரு பிரதேசத்திற்கும் மாறுபடும்.

ஆக இந்த அட்சாம்ச கணக்கீடுகளை வைத்தே ராசிகளின் காலத்தினை கணக்கிட வேண்டும் . அதாவது மெட்ராஸ் எந்த பாகையில் உள்ளது குழந்தை பிறந்த ஊர் எந்த பாகை என்று கண்டறிய வேண்டும். அதை வைத்து தான் லக்னம் கணக்கிட முடியும். இது ஊருக்கு ஊர் சில வினாடிகளோ சில நிமிடமோ மாறுபடும்.

ஆக ஒரு குழந்தை பிறந்தது எந்த ஊரின் பாகையோ அந்த பாகைக்கு உண்டான ராசியின் பாகையை (360/12 என்றால் மேஷம் முதல் 30 டிகிரியாக 12 ராசிக்கும்) சூரிய உதய நேரம் முதல் ஆரம்பித்து குழந்தை பிறந்த நேரம் வரை கூட்டினால் லக்னம் கிடைக்கும்.

செயல்பாடு : 3 (ராசி இருப்பில் உதய லக்னம்) பொதுவாக பஞ்சாங்கங்களில் (Almanac) ராசி இருப்பு என்ற பகுதியில் சூரிய உதயகால ராசி இருப்பு என்று கொடுத்திருப்பார்கள் ஒரு ஊரின் சூரிய உதயமானது ஒவ்வொரு மாதத்தின் ஒவ்வொரு தேதியும் ஒரு சில நிமிடங்கள் குறைந்து கொண்டே வரும்.

அதாவது சித்திரை மாதம் ஆரம்பித்து உதய காலம் குறைந்து கொண்டே வரும். ஆக வித்தியாசப்படும் ஒவ்வொரு நாள் சூரிய உதய நேரத்தினை கழித்துக்கொண்டே வந்தால் மீத நாழிகை உதய லக்ன சேஷம் எனப்படும் (சேஷம் என்றால் கழிவு) இன்றைய மதுரை சூரிய உதயம் 5;10 என்றால் நாளை 5;03.ஆக சூரிய உதய லக்ன சேஷம் : 0:7 வினாடி . இவ்வாறு கழித்துக்கொண்டே போகவேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அப்படி கழித்துக்கொண்டு போகும்போது மிஞ்சும் நாழிகை மற்றும் வினாடிதான் உதய லக்னமாகும். ஒவ்வொரு பஞ்சாங்கங்களிலும் ராசி இருப்பு பகுதியில் இதை பார்க்கலாம்

லக்னம் அறிதல்

செயல்பாடு: 4 பிறந்த லக்னம் அறிதல். (ஜனன லக்னம் அல்லது ஜன்ம லக்னம்)
மேலே சொன்ன உதய லக்ன கணிதம் முடிந்தபின் ஜனனமான நாழிகை வினாடிகள் வரை சேர்த்துக்கொண்டே செல்லும்போது எந்த ராசியில் கால நாழிகை வினாடி அமைகிறதோ அதுவே ஜன்ம லக்னம் அல்லது ஜனன லக்னம் என்று சொல்கிறார்கள்.

இதற்குப் பிறகு நவாம்ச லக்னம் அறிதல் ஒன்பதில் ஒரு பங்கு தான் நவாம்சம். அதாவது ஜென்ம லக்னத்தில் இருந்து 1/9 விகிதம்.
தசா-புக்தி எந்த ஒரு ஜாதகராயிருந்தாலும் தீர்க்காயுள் என்கிறோமே அந்த தீர்க்காயுஷ்மான் பவ என்று வாழ்த்துகிறோமே அதற்கு 120 வருடம் முழுமையாக வாழுங்கள் என்று பொருள்

அப்படித்தான் வாழ்ந்திருக்கின்றனர் நம் முன்னோர். . ஆனால் இப்போது இருக்கும் நிலையிலே இப்படி தீர்க்காயுஷ்மான் பவ என்று வாழ்த்தினால் ஏன் இப்பிடி சபிக்கிறீங்க என்கிறார்கள். ஆக மொத்தம் மனிதர்களின் வாழ்க்கை முறை மாறிவிட்டது, எதிலுமே திருப்தி இல்லாத நிலை. ஏன் இப்படிப்பட்ட நிலை என்று ஆராய்ந்தால் முற்காலத்திலே பெரியவர்கள் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் அவர்களைப் பொன்போல் பாவித்து மரியாதையாக நடத்தினர் , ஆனால் இப்போதைய காலகட்டத்திலே பெரியவர்களுக்கு மதிப்பில்லை. மேலும் உலகின் சூழ்நிலை மாற்றத்தால் புதுப் புது வியாதிகள். அவைகளை சமாளித்து பணப்பற்றாக் குறையை சமாளித்து வைத்தியம் செய்துகொண்டு அதன் மூலமாக அனைவரின் முணுமுணுப்புக்கும் ஆளாகி மனம் நொந்து போகிறார்கள் பெரியவர்கள். ஆகவே இப்போதெல்லாம் யாருமே 120 வயது வரை வாழவேண்டும் 100 வயது வரை வாழவேண்டும் என்றெல்லாம் நினைப்பதே இல்லை.

இறைவா என்னை சீக்கிரம் எடுத்துக்கொள் என்றே வேண்டுகிறார்கள். பல முதியவர்கள் நான் நெனைச்சவுடனே ஏறிப் போக ஏணியா இருக்கு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அப்பிடி ஒரு ஏணி இருந்தா நானே ஏறிப் போயிடுவேனே என்று இயலாமையால் புலம்புகிறார்கள்

அப்படிப்பட்ட அவமானங்களை சந்தித்து நொந்து போகிறார்கள் வயதிலே மூத்தவர்கள். ஆனாலும் ஒரு குறிப்பிட்ட வயது வந்து சரீரத்தாலும் மெலிந்து வியாதிகளாலும் அலைக்கழிக்கப்படும் போது அவர்களுக்கு இயல்பாகவே பயம் வந்துவிடுகிறது நாம் இறந்து விடுவோமோ என்று .

ஆக மனிதர்கள் வாழவும் விரும்பாமல் போகவும் மனமில்லாமல் தைரியமில்லாமல் நாம் போகுமிடத்திலே அந்த உலகம் எப்படி இருக்குமோ என்றே தெரியாததால் விரக்தி நிலைக்கே தள்ளப்பட்டு திரிசங்கு சொர்க்கம் என்பார்களே, அது போல் அந்தரத்திலே திரிசங்கு நரகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

ஆயுள் பலம்

இதிலே ஒவ்வொரு ஜாதகருக்கும் அவர் ஜாதகப்படி ஆயுள் நிர்ணயிக்கப்பட்டே இருகிறது ஆகவே முன்னால் போக வேண்டும என்று நினைத்தாலும் இன்னும் அதிக நாள் வாழலாமே என்று நினைத்தாலும் எதுவுமே அவர்கள் கையிலே இல்லை என்பதை பரிபூரணமாக அறிந்து தெளிந்து இறையை வேண்டி இருக்கும் வரை வாழ்ந்து

அழைத்தால் கிளம்ப நம் மனதை தயார் நிலையிலே வைத்திருப்பதே நாம் செய்யக் கூடிய புத்திசாலித்தனமான காரியம். இந்த விவேகமும் அவ்வளவு சுலபமாக சித்திக்காது மானிடர்களுக்கு.
ஆனால் மேற்கூறிய பூரண ஆயுள் ஆகிய 120 வருடங்கள் என்பது யுகத்துக்கு யுகம் மாறுபடுகிறது.

என்று யுக சாஸ்திரம் தெளிவாக கூறுகிறது. அதாவது யுகம் முடிய முடிய மனித ஆயுள் குறைந்து கொண்டே செல்லும். கிருத யுகத்திலே மனிதர்கள் 400 வயதுக்கும் மேல் வாழ்ந்திருக்கிறார்கள் , த்ரேதா யுகத்திலே இந்தப் பூரண ஆயுள் என்பது மேலும் குறைந்து த்வாபரயுகத்திலே இன்னும் குறைந்து இந்தக் கலியுகத்திலே 120 வருடங்கள் என்பது பூரண ஆயுள் என்று ஆகியுள்ளது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆனால் இந்த 120 வருடங்கள் கூட அரோக்கியமாக வாழமுடியாமல் நாம் நம்மைச் சுற்றி பல தீய வழக்கங்களைக் கைக்கொண்டு, சுற்றுப்புறச் சூழலைக் கெடுத்து மாசுபடிந்த உலகமாக ஆக்கி மாசு படிந்த காற்றையே ஸ்வாசித்து நம் ஆயுளைக் குறைத்துக் கொள்கிறோம்.

ஆக அரசாங்க வேலைக்கு 60 வயதானால் ஓய்வு என்பது போல் இந்த ப்ரபஞ்ச வாழ்க்கையிலே 60 வருடங்கள் வாழ்ந்துவிட்டாலே அதுவே மிகப்பெரிய அதிர்ஷ்டம், அதற்கு மேல் நாம் வாழும் ஒவ்வொரு மணித் துளியும் நமக்களிக்கப்படும் போனஸ் என்றே கொள்ள வேண்டும்

ஆக ஒரு மனித ஆயுளை ஒன்பது பகுதிகளாக பிரிப்பதே தசை. சூரியனை ஒவ்வொரு கிரகங்களும் சுற்றி வரும் காலம் சமமாக இல்லை என்பதால் இந்த ஒன்பது பகுதிகளும் சமமாகப் பிரிக்கப்பட்டிருக்காது .. ஆனால் கிரமமாக வரிசைப் படுத்ததுப் படுகிறது
அதாவது எல்லா ஜாதகருக்கும் எல்லாத் தசைகளும் அவர் வாழும் காலத்திலே வரும் என்று யாராலும் சொல்ல முடியாது

சில தசைகள் சில் ஜாதகருக்கு வருவதே இல்லை. ஒருவர் பிறந்த நேரத்தில் கர்ப்ப செல் நீக்கி இருப்புக் கட்டப்பட்ட தசையே ஆரம்ப தசை என கொள்ளப்படுகிறது என்பதால் ஆரம்ப தசை முதல் ஒன்பது தசை என்பதே ஆயுள்காலம் நடைபெறும் தசை. ஏழு வருடங்கள் கேது தசை, 20 வருடங்கள் சுக்கிரதசை ஆறு வருடங்கள் சூரிய தசை, பத்து வருடங்கள் சந்திர தசை ,

ஏழு வருடங்கள் செவ்வாய் தசை பதினெட்டு வருடங்கள் ராகு தசை பதினாறு வருடங்கள் குரு தசை 19 வருடங்கள் சனி தசை , பதினேழு வருடங்கள் புதன் தசை என்று 120 வருடங்களை பிரித்திருக்கிறார்கள் இப்படிப் பிரிப்பதைத்தான் தான் தசாபுக்தி என்பார்கள்.

கிரகங்கள்

அதாவது ஒன்பது கிரகங்களும் ஒவ்வொரு தசையின் காலத்தில் தசாபுக்தியாக பங்கெடுத்து ஆளத்தொடங்கும். ஒரு தசை 10 வருடம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்றால் அதை ஒன்பது சமம் இல்லாத காலமாக பிரித்து அதை தசாபுக்தி என்கிறார்கள் அதில் எந்த ஒவ்வொரு தசையும் முதலில் தனது புக்தி கொண்டு ஆரம்பிக்கும். அதாவது ராகு தசை என்றால் அதில் ராகு புக்தி முதலில் தொடங்கும் (தனது புக்தி). அதாவது தனது கிரகத்தின் பங்களிப்பை முதலில் செய்து விடும். அதன் பின்பு மேலே உள்ள வரிசை படி, குரு புக்தி, சனி புக்தி, புதன் புக்தி, கேது புக்தி, சுக்கிர புக்தி என தொடரும். அதேபோல் புதன் தசை என்றால் முதலில் புதன் புக்தி, (தனது புக்தி) அதன் பின்பு வரிசையாக கேது புக்தி, சுக்கிர புக்தி, சூரிய புக்தி என ஒன்பது புக்திகளும் நடந்து வரும்.

ஜோதிட துறையில் வழமையாக சொல்லுவது என்னவென்றால் எந்த ஒரு தசையில் தனது புக்தி ஒருவருக்கு நல்லதை செய்கிறதோ அந்த தசையில் மற்ற புக்திகள் கெடுதல் செய்யும். அதாவது கொடுத்து கெடுப்பது. ஆக ஒரு தசையின் தனது புக்தி காலமானது பலருக்கு நல்லது செய்யாமல் கெட்டதும் செய்யாமல் மந்தமாக அல்லது நடுத்தரமாக நடந்தால் மற்ற புக்திகள் விசேஷமாக இருக்கும் என்று சொல்லுகின்றனர். இப்படி புக்தி என்று சொல்லப்படுவதை ஒன்பது பகுதிகளாப் பிரிப்பதுதான் அந்தரம்.

எப்படி தசையில் ஒன்பது பகுதி புக்தியோ அதுபோல் புக்தியில் ஒன்பது பகுதிதான் அந்தரம். அதாவது ஒரு தசை நடந்தால் ஒன்பது கிரகங்கள் புக்தியாக பங்கு கொள்கிறதோ அதேபோல் ஒரு புக்தியில் ஒன்பது பகுதிகளாக அந்தரம் என்ற காலம் பங்கெடுக்கிறது.
ஒருவருக்கு குரு தசை நடக்கிறது என்றால் முதலில் குரு புக்தி, சனி புக்தி, புதன் புக்தி, என ஒன்பது கிரகங்கள் தொடரும். அதுபோல் அந்த குருதசையின் குரு புக்தி எடுத்துக்கொண்டால் குரு அந்தரம், சனி அந்தரம், புதன் அந்தரம் என ஒன்பது கிரகங்களும் அந்தரம் காலமாக செயல்படும்.

சில ஜோதிடர்கள் உங்களுக்கு குரு தசை நடக்கிறது என்பார்கள் நாம் உடனே நல்ல பலன் நடக்கும் என்று முடிவுக்கு வரமுடியாது . குரு தசையில் சனி புக்தி சேவை புக்தி கேது அந்தரம் என்று வரும்போது அது நம்மை ஆட்டி வைத்துவிடும் .   சனி கெட்டு போயிருந்தால் கெடுதலே நடக்கும் என்று நினைத்து வருத்தப்படுவதும் முட்டாள் தனம் அதில் நல்ல கிரகங்கள் புக்தி மற்றும் அந்தரம் நடக்கும்போது மூச்சு விட வாய்ப்பு வரும்.

சில ஜாதகங்களில் இயற்கையான கெட்ட கிரகங்கள் நல்ல பலனையும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இயற்கையான நல்ல கிரகங்கள் கெட்ட பலனையும் தருவதை கண்கூடாக பார்க்க இயலும். அதாவது அந்த கிரகம் அந்த ஜாதகத்தில் எப்படி அமைந்து பலமும் பெற்று உள்ளது என்பதை பொறுத்து பலன் நடக்கும். இதற்கு அடுத்து அந்தர கணிதம் என்கிறார்கள் அதன் உள்ளே போனால் தலை சுற்றும் மிகவும் கடினமான கணிதம் அதை எழுதவோ புரிந்துகொள்ளவோ என்னைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கு சக்தி கிடையாது.

ஜோதிட முறைகள்

வேறு பல வகையான ஜோதிடங்கள் உள்ளன பிராணிகளை அறுத்து அதன் உடலுறுப்புகளைப் பார்த்து ஜோதிடம் சொல்லும் முறை பாபிலோனியாவில் இருந்தது. இது இதாலியில் ரோம் நகரைச் சுற்றியிருந்த எட்ருஸ்கன் (Etruscan) நாகரீகத்திலும் காணப்பட்டது அதிசயமானதே.

பாபிலோனியர்கள் ஜோதிடம் ஒன்று இருந்தது அவர்கள் காசுக்காக ஜோதிடம் பார்ப்பதில்லை. ஹிட்டைட்ஸ்கள் என்போரும் காசு வாங்கிக் கொண்டு ஜோதிடம் சொல்வதில்லை .பறவைகள் பாம்பு ஜோதிடம் கிரகங்கள், கிரகணங்கள், நட்சத்திரங்களைக் கொண்டும் சோதிடம் சொன்னார்கள் மேலும் சகுன ஜோதிடம் என்று ஒன்று உண்டு அதாவது நாம் ஜோதிடம் பார்க்கும் நேரத்திலே ஏற்படும் சகுனங்கள் தும்மல் கழிதை கத்தல் கருடன் வட்டமிடுதல் போன்றவை ஆகும் பாம்பு, தேனீக்கள், பறவைகளின் வலம்போகின்றனவா இடம் போகின்றனவா பூனை வலம் போகிறதா இடம் போகிறதா நரி வலம் போகிறதா இடம் போகிறதா

காக்கைகள் கூட்டமாக கரைகின்றனவா அல்லது தனியே நின்று இடைவெளிவிட்டு இடைவெளி விட்டுக் கரைகிறதா என்று சகுன ஜோதிடம் பார்ப்பதும், பல்லி விழும் இட்த்துக்கேற்ப பலன் வால் நட்சத்திரம் வானில் தோன்றும் அறிகுறிகளை வைத்து கணிப்பதும் சுமேரிய , பாபிலோனிய மக்களின் நம்பிக்கை ஏறக்குறைய இந்தியர்களைப் போலவே இருந்ததாம்.

குறத்திகள், சாமி ஆடுவோர், கோடங்கி அடித்து சோதிடம் சொல்லுவோர், நாடி சோதிடக் குறிப்புகள் எழுதுவோர்

ஜோதிட சாத்திரங்கள் நாட்டுக்கு நாடு மாறுபடுகிறது இத்தாலி நாட்டில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இருந்த எட்ருஸ்கன் நாகரீகம் இந்துக்கள் போலவே பறவைகள் சகுனத்தில் நம்பிக்கை வைத்தனர். தமிழர்கள் புள் (பறவை) என்பர்; அவர்கள் புலோன் என்பர். வராகமிகிரர் சொல்லும் வாலாட்டிக் குருவிகள் ஆரூட கோட்சார பலன்களின்படி மேற்கண்ட 12 ராசிகளில் 27 நகஷத்திரங்களில் உள்ளவர்கள் ஒவ்வொரு முறை குருபகவான் மாறும் போதும் சனிபகவான் மாறும் போதும் ராகு கேது மாற்றங்கள் நிகழும்போதும் கவலைப்படத் தேவையில்லை,

பக்தி ரசம்

கண்ணனையே தன் பக்தி எனும் கட்டுக்குள் கட்டிப் போட்ட சகாதேவனுக்கும் ஒரு நாள் அனுபவம்

கர்வம் யாருக்கு வந்தாலும் அது வீணே என்று கற்றுத் தந்தது அந்த நிகழ்ச்சியைப் பார்ப்போம்
திரு பரமாத்மா கிருஷ்ண பகவானால் அறிவுறுத்தப்பட்டு கர்ணனிடம் சென்று குந்தி தேவி தான்தான் அவனுடைய தாய் என்று அறிவிக்கிறாள்.

குமுறல், பாசம் ஏக்கம்,தாய்மையை இழந்த பரிதவிப்பு அத்தனை கலவைகளையும் ஒரு சேர அனுபவித்த கர்ணன் குந்திதேவியின் மடியில் தன் தலையை வைத்து சொர்கத்தில் மிதந்து கொண்டிருந்தான்.

மகனின் தலையை வாஞ்சையோடு தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த குந்தியின் மனம் தாய்மையின் உயர்வில் மூழ்கிக் கொண்டிருந்தது . வெகு நுணுக்கமாக சொல்லுபவர்கள் குந்தி தேவியின் தாய்மை உணர்வு காரணமாக நெக்குருகிப் போன கர்ணன் ,

" அம்மா " அப்பாடி எத்துணைக் காலம் கழித்து அந்த முதல் வார்த்தையைதன் வாயார அழைக்கிறான் கர்ணன் அம்மா எனக்கு ஒரு வரம் கொடுங்கள் என்கிறான் என்னைப் பெற்றவுடன் உங்கள் சூழ்நிலை காரணமாக என்னைப் பிரிந்தீர்கள்,

ஆனால் நான் இறக்கும் போதாவது இந்த உலகத்தின் அத்தனை உள்ளங்களும் உருகுமாறு என்னை உங்கள் மடியில் கிடத்திக் கொண்டு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கர்ணன் ஆகிய நான் அனாதை அல்ல , உங்கள் மகன் உங்கள் மகன் எனறு உலகறியச் சொல்லுங்கள் ,

நான் அநாதையல்ல என்பதை இந்த உலறிந்தால்தான் நானும் நிம்மதியாக இறப்பேன் என்றான் கர்ணன் , அவன் வாயைப் பொத்தி அப்படிச் சொல்லாதே கர்ணா என்று அழுத குந்தியைத் தேற்றி பிறந்தால் இறப்பு நிச்சயம் அம்மா ஆனால் அந்த இறப்பு முழுமையாக திருப்தியாக குற்ற உணர்ச்சி இல்லாமல் இருக்கவேண்டும் தாயே ஆகவே நீங்கள் வாக்களியுங்கள் என்று இறைஞ்சினான் கர்ணன் .

குந்தி தேவி உணர்ச்சிப் பெருக்கால் செய்கிறேன் மகனே செய்கிறேன் என்று வாக்களித்தாள் அப்படியே செய்வதாக

பிறவி ஞானம்

இது இப்படியே இருக்கட்டும். கர்ணனுக்கு அப்போதே தெரியும் தான் வயதில் சிறியவனானுலும் 'தன் தாய் குந்தி தேவிக்கு முன்னரே தான் இறக்கப் போவது
அப்படிப்பட்ட ஒரு தீர்கதரிசி கர்ணன். அவன் தன்னுடைய தான தர்மங்களின் பலனை அந்தணர் வேடத்தில் வந்தது பரம்பொருள்தான் என்றறிந்தே உவகையுடன்
தன் ஆத்மாவை ஜ்யோதியோடு கலக்கச் செய்யும் அந்த அற்புத செயலைச் செய்தான் கர்ணன் .

கர்ணன் தன்னுடைய அத்தனை தானத்தையும் கொடுத்தது மிகச் சிறந்த தானம் ஆயிற்றே...எந்த ஒரு தானமும் அவனை ஏன் காப்பாற்றவில்லை.. என்றே யோசனை வருகிறது .!!! எனக்கு ரொம்ப நாளாவே இந்த சந்தேகம் நல்ல அருமையான அறிவு பூர்வமான கேள்வி . ஆனால் மின்சாரம் சேமித்து வைத்திருக்கும் மின் சாதனத்திலிருந்து கொஞ்சம் மின் விசிறிக்கு கொஞ்சம் விளக்குக்கு இப்படி பல இயக்கங்களுக்கு கொடுத்துக் கொண்டே இருக்கும் மின் சாதனம் எங்கிருந்து மொத்தமாக சக்தி பெறுகிறதோ ப்ரதானமாக அங்கிருந்தே மொத்த சக்தியையும் POWER (பவரையும்) பிடிங்கி விட்டால் இயங்காது, அல்லவா அதுபோலத்தான் கர்ணனுக்கும் அவன் சக்திகள் அனைத்தையும் ஏற்கெனவே ஒவ்வொருவராக பிடுங்கி விட்டார்களே.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கடைசியாகத்தானே அவனுடைய கவசகுண்டலமும் பறிக்கப்பட்டது அதையும் தாண்டித்தானே அவனுடைய மொத்த புண்ணியத்தின் பலனையும் அளித்தான் கர்ணன் அப்படி இருக்க அவனிடம் மிஞ்சியது என்ன என்கிற கேள்வியை யோசித்தால் நல்ல விளக்கம் கிடைக்கிறது. உயில் எழுதும்போது சொத்துக்களை அளிப்பவர்கள் அந்த சொத்துக்களில் இனி எதுவுமே தமக்கு சொந்தமில்லை, என்றுதான் எழுதுவார்கள். அப்படி எழுதிய பின் அந்த சொத்தில் புதையல் அகப்பட்டாலும் அது வாங்கியவருக்கே சொந்தம் அல்லவா?

கர்ணன் தானாக எதையும் உருவாக்கவில்லை ,அவனுக்கு வந்த பொருட்களை ,செல்வங்களை தானமளித்தான், அவனுடைய உயிர் உட்பட அது மட்டுமல்ல நான் தானம் செய்ததனால் வந்த அத்தனை பலன்களையும் உனக்களிக்கிறேன் என்றான் கர்ணன் கிருஷ்ணரிடம் நம் போன்ற மனிதருக்கு சொந்தமே இல்லாத பொருட்களை தானமாக அளிக்கக் கூட மனம் வருவதில்லை ஆகவே அவன் அளித்த தானத்தின் பலனை அளித்த போதும் அதுவும் அந்த தானத்தின் பலனும் அவனுடைய தானத்தின் பலனை மொத்தமாக அளித்தான் . அந்தப் பலனுக்காகத்தான் அவனுக்கு மோக்ஷம் கிடைத்தது .ஒரு பரப்ரும்மமே அவனிடம் யாசித்தது ஏன் தெரியுமா அந்தப் ப்ரப்பிரும்மத்துக்கு தெரியும் அந்தக் கர்ணன் யாரென்று . கிடைக்குமா அந்த பாக்கியம் அது அவன் செய்த தானத்தின் பலனே, இதே போல் மஹாபலி என்னும் மன்னனும் கிடைத்தற்கறிய பேறு பெற்றவர்கள் அவர்கள் செய்த புண்ணியங்கள் யாரை அடையவேண்டுமோ அவரிடம் அதாவது மொத்தமாக சேர்ந்து கிருஷ்ணனிடம் அடைந்துவிட்டது. ஆஹா கர்ணன் போல் ஒரு உத்தமன் இனியும் பிறப்பானா என்பது சந்தேகமே

ஆகவே நமக்குத் தெரிகிறதா தெரியவில்லையா என்பது முக்கியமே அல்ல. அது அது எப்படி நடக்கவேண்டும் எனும் விதி இருக்கிறதோ அப்படி நடந்துகொண்டே இருக்கிறது ஓரளவு ஞானம் உள்ளவர்களால் என்ன நடக்கும் என்று உணரமுடியும் ஆனாலும் அவர்களாலும் மாற்ற முடியாது

பாத்திரப் படைப்புகள்

மஹாபாரதத்திலே ஒவ்வொரு பாத்திரத்துக்கும் ஒவ்வொரு காரணம் ஒரு காரணமும் இல்லாமல் அங்கே மட்டுமல்ல இந்தப் ப்ரபஞ்சத்திலே ஒரு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உயிரும் படைக்கப் படவில்லை கர்ணனை உயர்த்திப் பிடிப்பது நம் நோக்கமல்ல

அதர்மத்தின் பக்கம் சாய்ந்தவர் யாராயினும் அவர்களை நாம் ஆதரிப்பதில்லை ஆயினும் கர்ணன் இறக்கும் தறுவாயிலே பரப்பிரும்மத்தை உணர்ந்து அவர் கையால் மோக்ஷம் பெற்றதை யோசிக்கிறேன் தர்மத்தின பக்கமே நின்றாலும் தர்மமாக வாழ்ந்தாலும் எத்தனை பேருக்கு கிடைக்கிறது இது போன்ற அதிர்ஷ்டம் என்று யோசித்தேன்

அடியேனும் கோமல் சேஷாத்ரி அய்யங்கார் , ஜெயராம சர்மா வரதாச்சாரியார் முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார், சேவா ஸ்வாமிகள் போன்றோரிடம் காலக்ஷேபம் உபன்யாசம் கேட்டே வளர்ந்தவன் தான் . மஹாபாரதத்திலே மட்டுமல்ல இந்தப் ப்ரபஞ்சத்திலே ஒவ்வொரு பிறப்பும் ஒரு காரணத்தை முன்னிட்டே ஏற்படுகிறது ஆகவே மஹாபாரதத்திலே சகுனி முதற்கொண்டு எல்லாக் கதா பாத்திரமும் ஒரு காரிய காரணத்தோடு படைக்கப்பட்டதே ஆகவே எல்லாமே கிருஷ்ணரில் அடக்கம் ஆக எந்தக் கதா பாத்திரத்தையும் தூஷிக்க நமக்கு உரிமையில்லை
.
ஆகவே எல்லாவற்றையும் அறிந்தே ஸ்ரீமன்நாரயணனும் கர்ணனுக்கு சொர்கத்தை அளித்தான். போர்க்களத்திலே கர்ணன் இறைவனடி சேர்ந்தைக் கேட்டு ஓடோடி வந்த குந்திதேவி தன் மூத்த மகனை, கர்ணனைத் தன் மடியில் போட்டுக்கொண்டு மகனே என் மூத்த மகனே நான் உனக்கு கொடுமையிழைத்தேனே . என்ன செய்வேன் என்று கதறிக் கொண்டிருக்கிறாள் .

குந்திதேவி கூறிய சொற்களைக் கேட்டு திடுக்கிட்டான் சகாதேவன். தன் ஜ்யோதிடத்தில் அபார நம்பிக்கைகொண்டிருந்த சகாதேவனுக்கு , கர்ணன் குந்திதேவியின் மகன்,தன்னுடைய மூத்த அண்ணன் கர்ணன் என்கிற உண்மை அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கர்ணன் அவனுடைய மூத்த அண்ணனா, ஐயோ இதுகாறும் அதை அறியாமல் இருந்தேனே , ஜ்யோதிடக் கலையில் வல்லவனான எனக்கே இது தெரியவில்லையே என்று மனம் வெதும்பினான் சகாதேவன்.. மஹா ஜோதிடனான தனக்கு ஒரு அண்ணன் இருப்பதே தெரியவில்லை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்னும் உணர்வு அவனைக் குன்றிப் போக வைத்தது.

அப்போது அவனுக்கு ஞானம் பிறந்தது இந்த உலகிலே எல்லாம் தெரிந்தவன் யாருமில்லை என்று.
அப்போது மனம் வெறுத்துப் போய் அவன் தான் எழுதிய ஜ்யோதிடக் கலையின் ஓலைச் சுவடிகளை எரித்து விட்டான் ,அதில் மிஞ்சியதுதான் இன்றும் பயன் பட்டு வருகிறது என்று ஆன்றோர்கள் கூறுவர்.

உண்மையான ஜோதிடக் கலை

அப்போதைய உண்மையான ஜோதிடக் கலையினாலேயே ஒரு சகோதரன் இருப்பதைக் கண்டு பிடிக்க முடியவில்ல என்றால் ஆத்ம சுத்தியே இலாது பணம் சம்பாதிப்பதையே கூறிக்கோளாக கொண்டு தற்போது ஜ்யோதிடக் கலையை வியாபாரமாக்கிய இந்தக் காலத்தில் ஜ்யோதிடம் எப்படிப் பலிக்கும் என்பதுதான் என்னுடை சந்தேகம் . அப்போதாவது ஒரு கலையை கற்றுக் கொண்டு அதனால் கர்வப்பட்டார்கள், இப்போது எதையுமே கற்காமல் கர்வம் மட்டுமே கொள்கிறார்களே என்பதை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது

கிரகங்களின் சுழற்சி ப்ரபஞ்சம் உள்ளளவும் இருக்கும். ஆனால் ஒவ்வொரு கால காலகட்டத்தையுமே சற்றே அமைதியாக ஒருமுறைக்கு இரு முறை யோசித்து காரியமாற்றி . வாயைக் கட்டுப்படுத்தி ருசிக்காக உண்ணாமல் பசிக்கு உண்டு , ஒரு முறைக்கு பல முறை நன்றாக யோசித்து தேவையானவற்றை மட்டும் பேசி தேவையில்லாத வாக்குவாதங்களைக் குறைத்துக் கொண்டு தேவையில்லாமல் அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதைக் குறைத்துக் கொண்டு இறை பக்தியுடன் வாழ்ந்தால் போதும் மற்றபடி பேராசை கொள்ளாமல் அமைதியாக காரியமாற்றினால் எந்த பாதிப்புமில்லாமல் தப்பிக்கலாம்.
-இது ஜோதிடமல்ல, நடைமுறை எல்லா ராசிக்காரர்களுக்கும் பொருந்தும் பலன்

வராகமிகிரரின் பிருஹஜ் ஜாதகத்தில் சூர்யனுடைய சுபமான தசையில் ஒருவன் வாசனைத் திரவியங்கள், யானைத்தந்தம், புலித்தோல், தங்கம், அரசன், யுத்தம், கொடிய செய்கை, யாத்திரை இவற்றால் பொருளையும் புகழையும் சம்பாதிக்கிறான் என்றும் அசுபமான தசையில் ஒருவனுக்கு அவனது மனைவி, பிள்ளைகள், சேமித்து வைத்துள்ள பணம், எதிரிகள்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆயுதம், நெருப்பு, அரசன் இவைகளால் அதிகமான ஆபத்துக்களும், தனது வேலைக்காரர்களுடன் சண்டையும், இருதயம், வயிறு இவற்றில் வியாதிகளும் உண்டாகும் என்றும் சொல்லியிருக்கின்றது.

காலத்துக்குத் தகுந்தாற்போல் சொல்வதென்றால் சூர்யதசையில் தந்தம் தோல் இவற்றால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களை விற்றல் தங்க நகைகள் செய்து விற்றல் அரசு ஊழியராகப் பணிபுரிதல் யாத்திரைகள் ஏற்பாடு செய்தல் மூலம் பணம் சம்பாதிக்க இயலும் என்று சொல்லலாம். கொடிய செய்கை மூலம் பணம் சம்பாதிக்க இயலும் என்பதை எவ்வாறு எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை. சட்டத்துக்குப் புறம்பான வழிகளில் பொருளீட்டுதல் என்று எடுத்துக்கொள்ளலாமோ என்னவோ?

“அக்கினியால் பீடை அம்மை விருத்தி பொன் சேதம்
மிக்க பயஞ்சத்துருவால் மேவு பகை ஒக்கவே
கண்ணோய் சிரரோகங் காதற் பிதா மிருத்தி
யெண்ணு மிரவிதசைக்கே”

என்று தமிழ்ச் சாதகாலங்காரம் பாடுகிறது. அதாவது நெருப்பால் பீடை, அம்மைநோய் வார்த்தல், பொன் சேதம், சத்ருக்களால் பயம், பகை, கண்களில் நோய் தலையில் நோய், பிதாவின் மரணம் உண்டாம் என்கின்றது. சுருக்கமாகச் சொல்வதென்றால் பலம் மிகுந்த சூரியனின் சுபமான தசையில் பல்வேறு வழிகளில் பொருள் வரவுண்டாகும். அசுபமான தசையில் பண இழப்பு, மனைவி மக்களுடன் சண்டை, மேலதிகாரிகளின் கோபத்துக்குள்ளாதல், இருதயம், கண் சம்பந்தமான நோய்கள் போன்றவை சம்பவிக்கும்.

சூரிய தசை

சூர்யதசை சுபபலனைச் செய்யுமா அசுபபலனைச் செய்யுமா என்று எப்படி தெரிந்து கொள்வது என்று கேட்கிறார்கள் ? சூர்யன் லக்னத்துக்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய பாவங்களில் இருந்தால் கெட்ட பலன்களும் ஐந்து, ஒன்பது, நான்கு, ஏழு, பத்து, பதினொன்றாம் இடங்களில் இருந்தால் நல்ல பலன்களும் நடக்கும் என்ற பொதுவான கருத்து இருக்கிறது.

நல்ல பாவங்களில் இருந்தால் மட்டும் போதாது உச்சமூலத்திரிகோண

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சொந்த வீட்டில் இருந்தால்தான் நல்ல பலன்களைச் செய்யும் என்று சொல்வாரும் உண்டு. விருச்சிக லக்னத்துக்கு ஆறாமிடத்தில் சூர்யன் உச்சமாக இருந்தாலோ மகர லக்னத்துக்கு எட்டாமிடத்தில் சொந்த வீட்டில் இருந்தாலோ

நல்ல பலன்களா அல்லது கெட்ட பலன்களா ? ஒரு கிரகம் சுபமான பலன்களையும் கெட்ட பலன்களையும் சேர்த்தே தருகின்றது என்பதுதான்
உண்மை . லக்னத்துக்கு நல்ல இடங்களில் இருந்து சொந்த வீட்டிலோ உச்ச வீட்டிலோ இருக்குமானால் சுபபலன்கள் அதிகமாகவும் லக்னத்துக்கு மறைவு ஸ்தானங்களில் இருந்து பகை வீட்டிலோ நீச வீட்டிலோ இருக்குமானால் கெட்ட பலன்கள் அதிகமாகவும் இருக்கும். மாறியிருந்தால் இரண்டுமே சமமாக இருக்கும்.

மேலும் தசா பலன்கள் ஒவ்வொருவரின் வயதுக்கும் தொழிலுக்கும் சம்பந்தப்பட்டே மாறி மாறித்தான் பலன் தரும் . வயதான பிறகு சூர்ய தசை வந்தால் சூர்யனுக்குச் சொல்லப்பட்ட உடலுறுப்புக்களில் பாதிப்பு வரலாம். மத்திம வயதில் சூர்யதசை வந்தால் குடும்பத்தில் சச்சரவு வரலாம். அரசு ஊழியராக இருப்பின் மேலதிகாரிகளின் விருப்பு வெறுப்புக்கு ஆளாகலாம். தொழிலதிபராக இருப்பின் திருட்டு அல்லது வருமான வரியால் இழப்பு முதலியன ஏற்படலாம்.

மேலேயுள்ளவர்களுக்கு நல்ல பலனாக இருப்பின் தற்காலத்தில் விருதுகள் அரசாங்க அங்கீகார பதவிகள் தொழிலில் பிள்ளைகளின் பங்களிப்பு அதிகமாதல் பணி உயர்வு முதலியவை நேரலாம். வேறு கிரகங்கள் சூர்யனோடு சேர்ந்து இருப்பின் இந்தப் பலன்களில் கொஞ்சம் மாறுதல்கள் ஏற்பட வாய்ப்புண்டு

ஆனால் சேர்க்கை என்பது ஒரே ராசியில் இருப்பது அல்ல. சூர்யனோடு ஒரு கிரகம் சேர்ந்து இருக்கின்றது என்பதன் அர்த்தம் சூர்யனுக்கும் அந்தக் கிரகத்துக்கும் இடையில் 3 பாகை அளவே வித்தியாசம் இருப்பதுதான். சூர்யன் ஒரு ராசியில் 15 பாகையில் இருந்தால் 12 அல்லது 18 பாகையில் இருக்கும் கிரகம் மட்டுமே சூர்யனுடன் சேர்ந்திருப்பதாகக் கருதப்படும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வராஹமிகிரரும் சூரிய தசையும்

வராகமிகிரர் சூர்யதசைக்குச் சொன்ன பலன் இது . ஆனால் அவர் சந்திரன் கார்த்திகை உத்திரம் உத்திராடம் நட்சத்திரங்களில் பிறந்தவருக்கு ஆரம்ப தசை சூர்யதசை என்றோ சூர்ய தசை வருஷம் ஆறு என்றோ கூறவில்லை. ஒவ்வொரு கிரகமும் (சூர்யன் முதல் சனி வரை) உச்சத்திலிருந்தால் சில வருஷங்களும் நீச்சத்திலிருந்தால் அதில் பாதியும் கொடுக்கும் என்பதே அவரது கொள்கை. இவ்வாறு ஏழு கிரகங்களும் கொடுக்கும் மொத்த வருஷங்களே ஒருவனின் ஆயுள் என்றும் ஒவ்வொரு கிரகமும் கொடுக்கும் ஆயுளே அதன் தசா வருஷங்கள் என்றும் அவர் கூறுகிறார்.

இதன்படி சூர்யன் கொடுக்கும் அதிக வருஷங்கள் பத்தொன்பது (19 வருடங்கள்) ஆகும். நீசத்திலிருந்தால் ஒன்பது வருடங்கள் ஆறு மாதங்களாகும். கிரகங்கள் சூர்யனுடன் சேர்ந்து அஸ்தமனம் ஆனாலோ சத்ரு விட்டில் இருந்தாலோ அந்தக் கிரகத்தின் ஆயுளில் சில ஆண்டுகள் குறையம். இவ்வாறு ஒவ்வொரு கிரகத்துக்கும் கணக்கிட்டு மொத்த தசா வருஷங்களைக் கண்டறிய வேண்டும்.

அதன் பிறகு லக்னம் சூர்யன் சந்திரன் இவற்றுள் எது பலமாக இருக்கின்றதோ அதன் தசை முதலும், அப்புறம் அதன் கேந்திரத்தில் உள்ள கிரகங்களின் தசையும் அதன்பின் பணபரம் என்று சொல்லப்படும் 2, 5, 8, 11ம் இடங்களில் உள்ள தசையும் அதன்பின் 3, 6, 9, 12 என்ற ஆபோக்லீமஸ்தானங்களில் உள்ள தசையும் நடைபெற வேண்டும். இந்தக் கணக்குகள் கொஞ்சம் கடினமானவை. இதற்கு முதலில் கிரகஸ்புடங்கள் செய்து சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் கிரகஸ்புடங்கள் செய்து சரிபார்க்கும் ஜோதிடர் மாவட்டத்துக்கு ஒருவர் இருந்தால் அரிது. இப்போது கம்ப்யூட்டர் மூலம் கிரகஸ்புடங்கள் உடனே கிடைத்துவிடுகின்றன. ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் கிரகஸ்புடங்கள் பாவஸ்படங்கள் கணிக்க ஒரு வாரத்துக்கும் மேலாக எடுத்துக்கொள்வார்கள். இந்தக் கஷ்டங்களினாலேயே ஜோதிடர்கள் இம்முறையை ஒதுக்கிவிட்டனர்.

தசாபுக்தி முறை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வராகமிகிரரின் தசா புத்தி முறை நடைமுறைக்கு ஒத்து வருவதில்லை. அதனால்தான் அனேகர் பராசரரிஷியின் விம்சோத்திரி மஹாதசை முறையை எடுத்துக் கொள்கிறார்கள் (Accuracy) அந்த நுணுக்கமான மிகச் சரியான துல்லியத்தை கண்டுபிடிப்பதில் கடினமான செயல் அது அவ்வளவு எளிதான காரியமல்ல.

அதனால்தான் எப்பொதுமே தரக் கட்டுப்பாட்டு மையத்திலேயே கூட (Allowance) தளர்த்தப்பட்ட எல்லை எல்லாவற்றிலுமே கொடுக்கும் வழக்கம் உருவானது. தளர்த்தப்பட்ட எல்லையே இல்லாத துல்லியம் இறைவனால் மட்டுமே சாத்தியம் மனிதருக்கு சாத்தியமில்லை அல்லவா

ப்ருஹத் ஜாதகம், ப்ருஹத் சம்ஹிதா, யோக யாத்ரா, பஞ்ச சித்தாந்திகா, ப்ரஸ்ன வல்லபா, லகு ஜாதகா ஆகியவை மிக முக்கியமானவை. இவரது நூல்கள் இவர் ஒரு ரிஷி மட்டுமல்ல. ஒரு சிறந்த விஞ்ஞானியும் கூட என்பதை நிரூபிக்கின்றன. ப்ருஹத் ஜாதகம் மற்றும் ப்ருஹத் சம்ஹிதாவில் பூகோளம், நட்சத்திரத் தொகுதிகள், தாவரவியல், மிருகவியல், வானவியல் உள்ளிட்ட பல்துறை விஞ்ஞானம் பற்றிய வியக்கத்தகும் உண்மைகளை விளக்குகிறார். வ்ருக்ஷ ஆயுர்வேதா என்ற சிகிச்சை முறை மூலம் தாவரங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களையும் அதைத் தீர்க்கும் விதம் பற்றியும் கூட அவர் விரிவாக விளக்குகிறார்.ஆரியபட்டரின் சீடரான வராஹமிகிரர், ப்ரஸ்ன சாஸ்திரம் பற்றி ஷட்பஞ்சசிகா என்ற நூல் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். வராஹமிஹிரரின் நூல்களுக்கு விளக்கவுரையாக அவரது நூல்கள் அமைந்துள்ளது குறிப்பிடத்தகுந்தது.

கவனத்துக்குரிய விஷயம் என்னவென்றால் வராகமிகிரரின் சித்தாந்தப்படி ஒரு கிரகத்தின் தசையில் எல்லாக் கிரகங்களின் அபகாரங்களும் வருவதில்லை. தசாநாதனோடு இன்னும் ஒரு கிரகம் சேர்ந்திருந்தால் அந்தச் சேர்ந்திருக்கும் கிரகம் அப்புறம் தசாநாதனுக்கு ஐந்தில் ஒன்பதில் கிரகங்கள் இருந்தால் அவைகளில் பலமான கிரகம் தசாநாதனுக்கு நான்கு எட்டில் கிரகங்கள் இருந்தால் அவற்றுள் பலமான கிரகம் தசாநாதனுக்கு ஏழில் கிரகங்களிலிருந்தால் அவற்றுள் பலமான கிரகம் இந்தக்கிரகங்களுக்கு மட்டுமே தசாபுத்திகள் உண்டு. ராகு கேதுக்களை வராகமிகிரர் தசாபுத்திகளுக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

ஆனால் வராகமிகிரர் ஒரு இலகுவான வழியும் கொடுத்திருக்கிறார். அதாவது ஒருவனின் வாழ்க்கையில் முதல் ஒரு வருடம் சந்திரதசையும் பின் இரண்டு வருடங்கள் செவ்வாய் தசையும் பின்னர் ஒன்பது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வருடங்கள் புதன் தசையும் அடுத்து இருபது வருடங்கள் சுக்கிரதசையும் நடக்கும். 33 முதல் 50 வயது முடிய குருதசையும் 51 முதல் 70 முடிய சூர்யதசையும் எழுபதுக்கு மேல் மரணம் வரைக்கும் சனி தசையும் நடக்கும் என்று சொல்லியிருக்கிறார். இது நைசர்க்கிக தசை அதாவது இயற்கையான தசை என்று அழைக்கப்படுகிறது.

கிரேக்க வான சாஸ்திரி கிளாடியஸ்

கிரேக்க வானசாஸ்திரி கிளாடியஸ் தாலமியும் தனது ‘டெட்ராபிபிலாஸ்’ என்ற நூலில் ஒருவர் பிறந்து நான்காண்டுகள் முடிய சந்திர தசையும் அதன் பிறகு பத்தாண்டுகள் புதன் தசையும் பின்னர் 22 வயது முடிய சுக்கிரதசையும் அதன்பின்னர் 41 வயது முடிய சூரிய தசையும் 56 வயது முடிய செவ்வாய் தசையும் 68 முடிய குரு தசையும் பின்னர் மரணம் வரைக்கும் சனி தசையும் நடக்கும் என்று குறிப்பிட்டிருக்கின்றார். சந்திரனில் ஆரம்பித்துச் சனியில் முடிவது தர்க்கத்துக்குப் பொருந்துவதாகவே உள்ளது.

ஆனால் வராகமிகிரரின் வழி கிரகங்களின் காரகத்துவத்துக்குப் பொருத்தமாக உள்ளது. முதலில் மாதுருகாரகன் சந்திரன், பின்னர் சகோதர காரகன் செவ்வாய், பின்னர் பந்துக்கள் வித்யாகாரகன் புதன், பின்னர் ஸ்திரிகாரகன் சுக்கிரன், புத்ரகாரகன் குரு, தொழில்காரகன் சூர்யன், கடைசியில் ஆயுள்காரகன் சனி என்று இந்த வரிசை இருக்கிறது.

இந்தக் கால ஜோதிஷ ஆர்வமுள்ள இளைஞர்கள் இதைப் ஆராய வேண்டும். புராணங்களாலும், யுகக் கணக்குகளாலும் பாரம்பரிய சிந்தனை ஒட்டங்களாலும் ஏற்படும் சிந்தனைகளைத் தவிர்த்துப் புதிய சிந்தனைகளை ஏற்காதோர் இன்னும் இருப்பதால் நசுக்கப்பட்டுக் கிடக்கும் ஜோதிஷ சாஸ்திரத்துக்குப் புத்துயிர் கொடுக்க

அதைப் புதுப்பிக்க இந்தக் கால இளைஞர்களால்தான் முடியும், ஆனால் இந்தக் கால இளைஞர்கள் நம் புராதனமான அரிய கலைகளில் மனதை செலுத்தாமல் கண்ட கண்ட விஷயங்களிலே மனதைச் செலுத்தி வீணாகிறார்கள்,.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பராசரர், அகத்தியர், வசிஷ்டர் என்று பழைய முனிவர்களின் பெயரால் வழங்கும் ஜோதிஷ சாஸ்திரங்கள் எல்லாம் வேறு வேறு திறமைசாலிகளால் எழுதப்பட்டவைதான் .

வடமொழியில் புலமை வாய்ந்தவர்கள் ஆராய்ச்சி மனப்பான்மையோடு இந்நூற்களைப் பரிசோதித்தால் அவர்களுக்கே உண்மை விளங்கும். சாணக்கியன் எழுதியதாகவும் காளிதாசன் எழுதியதாகவும் உள்ள ஜோதிஷ நூல்கள் எல்லாமே வேறு நபர்கள் எழுதியவைதான். திருவள்ளுவர் ஜோதிட நூல் என்று கூடத் தமிழில் ஒன்று உண்டு.

ஆதி சங்கரர் பன்னீராயிரம்

ஆதிசங்கரர் லக்னமுதல் பன்னிரண்டு பாவங்கட்கும் ‘சங்கரர் பன்னீராயிரம்’ என்று நூல் எழுதியதாக ஒரு கேள்விப்பட்டதுண்டு .

“ஒதிய பெரியோர் வாக்காலுரைத்திடும் நூல்கள்தன்னை
மேதினிலே நன்றாய் விளங்கிடச் செய்யுளாகச்
சோதிடப் புத்ரபாகந் தொகுத்தியான் விளம்புதற்கு
ஆதியின் மூலமான ஐங்கரன் காப்பதாமே”

என்று தொடங்கும் சங்கராச்சாரியம் என்னும் பன்னீராயிரத்தில் புத்திரபாவகம் என்று 1928ல் ஒரு ரூபாய்க்கு வெளியிடப்பட்ட நூல் அதைத் தேடி எடுத்து அதைப் படித்து ஞானம் பெறவேண்டும்

ஜோதிஷக் கணக்குள் கணிணியிலே கணிக்கும் இந்தக் காலத்தில் இளைஞர்கள் வானசாஸ்திரம் தெரிந்துகொண்டு ஜோதிடர்களாகவும் சிறந்து விளங்க வாய்ப்பும் வசதியும் நிறைய உள்ளன.

1915ல் திருநெல்வேலி ஜில்லா தென்குளந்தை மாநகரமெனும் பெருங்குளத்தில் வசித்த (தற்போது தூத்துக்குடி மாவட்டம்) வி.ஸ்ரீனிவாஸ் அய்யங்காரால் இயற்றப்பட்டு வெளியிடப்பட்ட ஜாதகப்ரகாசிகை என்னும் நூலின் முன்னுரையில் அவர் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார் ஜோதிடம் கற்றவர்கள் ஒரு சுய பரிசோதனையாக முதலிலே . “தங்களுடைய சொந்த ஜாதகத்திற்கு பலன் பார்த்துத் தெரிந்துகொண்டு அதன் பிறகே மற்றவர்களின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜாதகங்களைப் பார்த்துப் பலன் சொல்ல வேண்டும். என்பதுதான் நியதி ஏனெனில் தன்னுடைய சொந்த குணாதிசயங்கள் செய்கைகள், நடக்கும் சுபாசுப பலன்கள் எல்லாம் அவர் மனதிற்கு முதலில் திருப்தியாகத் தெரிந்துகொள்வது போல அடுத்தவருடைய குணங்களை செய்கைகளை தெரிந்து கொள்ள முடியாது அதனால் அவரவர்களின் சொந்த ஜாதகத்தின் பலனை முதலில் பார்த்துத் தெரிந்து கொண்டு அதன் பிறகே பிறருக்குப் பார்க்க வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவைத்தார்கள். இப்போதிருக்கும் ஜோதிடர்களில் எத்தனை பேர் இதைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று ஆராய்ந்தால் வெகு சொற்பமான நபர்களே அதுவும் ஜோதிடத்தின் முழுமையான சக்தியை அறிந்தோரே எனலாம்

வாழ்வின் விளக்கம் கூறும் ஜோதிடம்

ஜோதிடம் உண்மையில் வாழ்வின் விளக்கம் கூறும் காலக் கண்ணாடி . நம் உள்ளங்கையிலே இருக்கும் ஒரு அற்புத சாதனம். கையிலே வெண்ணையை வைத்துக் கொண்டே நெய்க்கு அலையலாமா?

யார் உலகத்தோர் சொல்லிலார் ?நேருங்கால்
யார் உபாயத்தில் வாழாதார் ? யார்
இடையாக இன்னாது எய்தாதார் ?யார்
கடை போக செல்வம் உய்த்தார்
தாஞ்செய்யும் வினையல்லால் தமொடு செல்வது மற்று
யாங்கணும் நேரின் பிறிதில்லை -ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றே
கூட்டம் கொண்டு ஓடும் பொழுது

பல்லாயுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்-- தொல்லை
பழம் வினையும் அன்ன தகைத் தே செய்த
கிழவனை நாடிக் கொளற்கு --- நாலடியார்
என்று நாலடியார் எழுதியதைப் போல் . மனம் நினைப்பதை அல்லது பதிப்பித்துக் கொள்வதை மூளை மறந்து போகிறது பல நேரங்களில் ஆனால் மனம் அவற்றை மறப்பதே இல்லை . அதனால்தான் ஜென்ம ஜென்மமாக மனமென்னும் ஆத்மாவிலே பதிந்திருப்பதெல்லாம் அடுத்தடுத்த ஜென்மங்களிலே நினைவுக்கு வருகிறது பயன் அளிக்கிறது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மூளை நம் உடல் உறுப்புகளில் ஒன்று மருத்துவத்தில் அறுவை செய்து கண்ணால் பார்க்கலாம், ஆனால் எந்த மருத்துவத்தாலும் மனத்தை கண்ணால் பார்க்க முடியாது.
பூர்வ ஜென்ம நினைவுகள் மனதில் பதிவாகின்றன எனபது உண்மையானால்
சரீரத்தை விட்டு ஆன்மா அகலும் போது ஆன்மாவுடன் மனமும் சேர்ந்தே செல்கின்றது.மீண்டும் அந்த ஆன்மா வேறு ஒரு உடலில் குடிபுகும்போது
இலவச இணைப்பாக மனமும் குடிபுகுகின்றதா இல்லை என்றால் ஒரு ஜென்மத்து நினைவுகள் எங்கனம் எதில் சேமிக்கப் படுகின்றது என்பதெல்லாம் இப்ப்ரஞ்சத்தின் புதிர்களே ஆச்சரியங்களே இவைகளை ஆராய நமக்கு அவ்வளவு திறமை இருக்கிறதா? யோசிக்கத்தான் வேண்டும்
வெற்றிகரமான 100 ஆவது பாகம் இத்துடன் நான் இந்த ஆராய்ச்சியை நிறுத்திக்கொள்கிறேன்

ஆசிரியர் உரை

உண்மையிலே எனக்கு ஜோதிட ஞானம் ஓரளவுக்குத்தான் உண்டு .இது வரை நான் எழுதியது எல்லாமே ஜோதிடம் ஜாதகம் உண்மையா என்னும் கருத்தை விளக்க நான் எழுத ஆரம்பித்த பிறகு அதைப் பற்றி மேலும் மேலும் அறிய ஆவல் கொண்டு சேகரித்த விவரங்களே அதற்காக நான் பல நூல்களைப் படித்து விவரங்கள் திரட்டி எழுதியவையே இவை எல்லாம்.

இந்த ஜோதிடக்கலை என்பது ஒரு பெரிய சமுத்திரம், சாகரம் இதிலே பல திமிங்கிலங்களே நீந்த முடியாமல் கரை ஒதுங்கி உள்ளன அப்படி இருக்க சிறு மீனாகிய நான் ஏதோ என் சக்திக்குட்பட்டதை எழுதினேன். என்னையும் ஊக்குவித்து நான் எழுதியதை படித்து அவ்வப்போது எனக்கு ஆதரவளித்து , நான் ஏதேனும் தவறாக எழுதும்போது எனக்கு அதைச் சுட்டிக்காட்டி என் தவறை திருத்திய நண்பர்களுக்கு என் மனமார்ந்த நன்றி

எனக்கு தெரிந்த ஒரு சதவிகித ஞானத்தை வைத்துக்கொண்டு மீதமுள்ள 99 சதவிகித ஞானத்தை பல புத்தகங்களிலே படித்து தெரிந்து கொண்டே

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்தக் கட்டுரையை நான் எழுதியிருக்கிறேன். ஆகவே மேற் கூறிய செய்திகளில் இருக்கும் நற்கருத்தை மட்டும் எடுத்துக்கொண்டு , ஏதேனும் தவறிருந்தால் அதை எனக்கு உணர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன்

என் நோக்கம் ஒன்றுதான் இவ்வளவு செய்திகள் உள்ள ஜாதகத்தையோ நுணுக்கம் தெரிந்த ஜோதிடர்களையோ குறைத்து மதிப்பிடாமல் நாம் அனைவருமே செய்ய வேண்டிய முதற்காரியம்

நம் ஜாதகத்தை எடுத்து அதை முதலிலே முறையாக சுத்தமான தவறில்லாத ஜாதகமாக எழுதி வைத்துக்கொண்டு அதன் பின் ஜோதிடரை, அதுவும் உண்மையான ஜோதிடரை அணுகவேண்டும் என்பதே என் வேண்டுகோள்

ஜாதகம் ஜோதிடம் உண்மையா என்று தொடங்கினேன். உண்மைதான் நிச்சயமாக சொல்கிறேன் உண்மைதான் ஜாதகமும் ஜோதிடமும் உண்மை நம் ஜாதகம் நாம் பார்க்கின்ற ஜோதிடரும் அந்த ஜோதிடர்கள் பார்த்து பலன் சொல்கின்ற ஜோதிடமும் உண்மையா என்பதை ஆராயுங்கள் என்பதை வலியுறுத்துதலே என் நோக்கம்

வாசகதோஷ: க்ஷந்தவ்ய:

அன்புடன்
தமிழ்த்தேனீ

சுபம்

அன்புடன்
தமிழ்த்தேனீ

https://telegram.me/aedahamlibrary